# திருமகள் தேடி வந்தாள்

அருணா ஹரி



# திருமகள் தேடி வந்தாள்

அருணா ஹரி

ஆர்.ஆர். நிலையம்
62/1, முத்து முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி: 28130312



# திருமகள் தேடி வந்தாள்



# திருமகள் தேடி வந்தாள்

## 1



சென்னை சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் வழக்கமான பரபரப்புடன் இருந்தது. அர்விந்தன் எப்பொழுதும் இரயில் புறப்படும் அரைமணி நேரத்திற்கு முன்பாகவே தயாராய் இருப்பான். நகர்ந்து கொண்டிருக்கும் மனிதர்களை வேடிக்கை பார்த்தபடி பிளாட்பார்ம் பெஞ்சில் சாய்ந்து அமர்ந்தான்.

''மன்னிக்கவும். 'எஸ்-டு கோச் எங்க நிற்கும்?''

இருபது வயது மதிக்கத்தக்கப் பெண் தேவதையாய் நின்றிருந்தாள்.

கண்களில் மட்டும்..... பதட்டமோ..... பயமோ..... ஏதோ ஒன்று.

நெற்றியிலிருந்த சிறிய பொட்டு சற்று நழுவினாற் போல.....

முகத்தை கழுவியிருப்பாள் போலிருக்கிறது.

''அதோ அங்கே அட்டவணை ஒட்டியிருக்கிறார்கள். அதைப் பார்த்து கொள்.....'' - முடிப்பதற்குள்

''நன்றி'' என அவசரமாய் நகர்ந்தாள்.

அர்விந்த் திரும்பி அவளை மறுபடியும் பார்த்தான். அந்த முகம் திரும்ப திரும்ப பார்க்கத் தூண்டியது.

கடந்து சென்றவரின் அலைபேசி ''முன்பே வா! அன்பே வா'' பாடியது.

தடிதடியாய் நான்குபேர் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டு பரபரப்பாய் இங்கும் அங்கும் அலைந்தனர்.

சீருடை அணிந்த போர்ட்டரிடம் ஏதோ ஒரு புகைப்படத்தைக் காட்டி விசாரித்தனர். அவன் டிக்கெட் கவுண்ட்டர் இருக்குமிடத்தை நோக்கி கைகாட்ட,



அவர்கள் அங்கே விரைந்தனர். வண்டி நிற்கும் பிளாட்பார்ம் எண்ணை தேடிக் கொண்டிருந்தவள் சட்டென்று உஷாரானாள்.

'இவர்களிடமிருந்து எப்படி தப்புவது? கண்களில் படாமல் பல்லவனில் ஏறுவது எப்படி? பல்லவன் வரும்வரை சந்தேகம் ஏற்படாமல் இருப்பது எப்படி?'

என பல்வேறு கேள்விகள். இதயம் படபடவென தடதடத்தது.

தைரியத்தை இழக்கக்கூடாது. துணிச்சல் அற்றவன் இறந்தவனுக்கு சமம். தோற்கக்கூடாது. நிச்சயம் வெல்ல வேண்டும்; எப்படியும் தப்பிக்க வேண்டும். சுற்றும் முற்றும் பார்த்தாள். 'அதோ அங்கே செல்லலாமா?' விரைந்து நடந்தவள் எதிரே வந்த பெண்ணின் மீது மோதிக் கொண்டாள்.

''மன்னித்துக் கொள்ளவும்'' என்றவளுக்கு சட்டென ஓர் யோசனை உதித்தது.

நால்வரும் எதிரே வந்தவனை பார்த்ததும் பவ்வியமாய் நின்றனர்.

''வஹ் மிலேகி.''

''நஹி யஹாங் நஹி ஹை.''

''வஹ் நஹி தோ துமே கதம் கருங்.''

''ஜாவோ! அச்சா! தலாஷ் கரோ.''

''அச்சா ஜி! மை சலூம்.''

நால்வரும் நான்கு புறங்களிலும் விரைந்தனர்.

''மூன்றாம் பிளாட்பார்மில் திருச்சி செல்லும் பல்லவன் எக்ஸ்பிரஸ் வந்து கொண்டிருக்கிறது'' என அறிவிப்பு வர.....

அர்விந்த் பெட்டியுடன் எழுந்து நின்றான். வெளியூர் பிரயாணங்களின்போது அளவுக்கதிகமாய் பொருட்களை தன்னுடன் அவன் எப்பொழுதும் எடுத்துச் செல்வதில்லை. அவசியமான உடைகளுடன் ''லாப்டாப்'' கணினி மட்டுமே எடுத்துச் செல்வான். அன்றும் அப்படித்தான். அதுவும் இரயில் பிரயாணங்களில் அவன் தனிமை விரும்பி. 'கூபே' முழுவதும் பதிவு செய்து, தனிமையில் தன் வேலைகளை செய்து கொண்டே ஊர் திரும்புவான்.

பயணிகள் பரபரப்புடன் தங்கள் பெட்டிகளை தேடி ஏறிக் கொண்டிருந்தனர். அர்விந்த் தன் பெட்டியில் ஏற முயல்கையில் உள்ளிருந்து வந்தவன் இடித்துக் கொண்டான்.

''மாப்க் கீஜியே.''

அவன் கையிலிருந்த புகைப்படம் கீழே விழுந்தது. அர்விந்த் அதை எடுத்துக் கொடுத்தான். படத்துடன் அவன் நகர அர்விந்த் மேலே ஏறினான்.

இரயில் சத்தமிட்டுக் கொண்டு புறப்பட ஆரம்பித்தது. கதவை அடைக்க எழுந்து வந்த அர்விந்த் ''பர்தா'' அணிந்த பெண் ஓடி வருவதைப் பார்த்தான்.

'இரயிலுக்கு வரும் போது கூட சீக்கிரம் புறப்படத் தெரியாத பெண்கள்.'



காற்றில் முகத்திலிருந்த திரை பறக்க.....

பயம் மிகுந்த ''அதே கண்கள்''.....

எதில் ஏறுவது என அவள் தடுமாற.....

சட்டென தன் கரத்தை நீட்டினான்.

அவள் அதைப் பற்றிக் கொண்டு மேலே ஏறினாள். இரயில் வேகம் எடுத்தது.

## 2



எதிர் இருக்கையில் அமர்ந்தவளுக்கு இன்னும் படபடப்பு குறைந்த மாதிரி தெரியவில்லை. எழுந்து போய் மினரல் வாட்டர் பாட்டிலை வாங்கி வந்து அவளிடம் நீட்டினான். மறுக்காமல் வாங்கி முழுவதையும் குடித்து முடித்தாள்.

''டிக்கெட் இருக்கிறதா?''

அவள் பதில் சொல்லாமல் டிக்கெட்டை எடுத்து நீட்டினாள். இரண்டாம் வகுப்பிற்கான பயணச்சீட்டு அது.

அதை கையில் வாங்காமலேயே மேலோட்டமாகப் பார்த்தான்.

''உன் பெயர் என்ன?''

பதில் சொல்லாமல் மறுபடியும் பயணச்சீட்டைக் காட்ட, அவன் அதை பார்க்காமலே,

''சுமதி! அது உன் நிஜப் பேராக இருக்காதென்று நினைக்கிறேன்.''

வியப்பு அவள் விழிகளில். ஆனாலும் ஏதும் சொன்னாளில்லை. ''இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. உன்னைத் தேடியவர்களைப் பார்த்தேன். அவர்கள் அறிந்து கொள்ளும்படி உன் உண்மை பெயரில் டிக்கெட் வாங்கியிருக்க மாட்டாய்.''

அவள் விழிகள் மெல்ல அசைந்தன.

'' நீ எங்கு செல்ல வேண்டும்? திருச்சிக்கா?''

''இது எது வரை செல்லும்?''

'ஏன் போகுமிடம் தெரியாமல் தான் டிக்கெட் எடுத்தாளா? அல்லது உண்மையை மறைக்க இப்படி கேட்கிறாளா?'

அதற்கு மேல் அர்விந்த் அவளிடம் எதுவும் கேட்கவில்லை. தன் மடி கணினியில் ஆழ்ந்து விட்டான். கிட்டத்தட்ட ஒருமணி நேரம் ஆகியிருக்கும்; எதேச்சையாய் நிமிர்ந்தவன் அவளைப் பார்த்தான். எத்தனை நாட்கள் தூங்காமல் விழித்திருந்தாளோ, அவளையறியாமல் சன்னலில் சரிந்து, உட்கார்ந்த நிலையிலேயே உறங்கிக் கொண்டிருந்தாள்.



வெண்மையாய் பளீரென்ற நிறம், செதுக்கினாற் போன்ற நாசி, உயரம், மிக மென்மையான முகம்.

தமிழ் பெண்ணோ? இல்லையோ?

அட்சர சுத்தமாய் தமிழில் பேசுகிறாள். இவளுக்கு என்ன பிரச்சனை? 'ம்' அழகு இருக்கும் போது ஆபத்தும் வந்து சேரத்தான் செய்கிறது.

அன்றலர்ந்த மலர்போல் இருக்கிறாள். கண்களில் இருக்கும் பயம் மறைந்து.......... அந்த கண்களும் சிரித்தால்...........

எத்தனை ரம்யமாயிருக்கும்?

'சடக்' கென்று விழித்துக் கொண்டாள்.

அவளைப் பார்த்து புன்னகைத்து, ''படுத்துக் கொள்கிறாயா?'' என விசாரித்தான்.

சூழ்நிலை உணராமல் என்ன உறக்கமிது? என தன்னையே கடிந்து கொள்பவளாய் தலைகுனிந்தவாறு, ''இல்லை; வேண்டாம்'' என்றாள்.

''அதுசரி! எச்சரிக்கை மிகவும் அவசியம் தான்.''

ஏளனம் செய்கிறானோ? அவன் கண்களை நிமிர்ந்து பார்த்தாள். அதில் சிறு சிரிப்பு மட்டுமே இருந்தது.

ஆப்பிளை அவளிடம் நீட்டினான்.

''மன்னிக்கவும்; வேண்டாம்'' என்று அவசரமாக மறுத்தாள். அவளைக் கூர்ந்து பார்த்தவன் வாய் விட்டுச் சிரித்தான்.

''கவலைப்படாதே சிறுமியே! நான் பூச்சாண்டி அல்ல. மயக்க மருந்து கொடுத்து உன்னை பிடித்துக் கொண்டு போக.''

''நன்றி! ம்ஹூம்'' என்றாள் பிடிவாதமாக.

'உன் இஷ்டம்' என்பது போல் தோளை குலுக்கிக் கொண்டான்.

''நீ தூங்கினால் நான் நிம்மதியாக சாப்பிடுவேன். எனக்கும் வயிற்று வலி வராது பாரேன்.''

அவள் இதழ்களின் ஓரத்தில் துளியூண்டு நகை எட்டிப் பார்த்தது. இரயில் நிற்பதை உணர்ந்தவளாய் மெதுவாய் ஷட்டரை விலக்கி வெளியே பார்க்க..... வெட வெடத்துப் போனாள்.

எழுந்து அர்விந்த் அருகே வந்து அமர்ந்தாள்.

''என்ன?''

நால்வரில் இருவர் வெளியே நிற்பதை சைகை யால் சுட்டிக் காட்டினாள்.

''கவலைப்படாதே! பர்தாவினால் முகத்தை மூடிக் கொள்.'' கதவு தட்டும் சத்தம் கேட்டது. கதவை திறக்க அவர்களே தான்.

''கோன் ஹை'' என அவளைக் காட்டி கேட்க அர்விந்த் நிதானமாய், தெளிவாய் சொன்னான் ''மேரா பத்னி- (இவள் என் மனைவி)'' என்று.



# 3



அவன் அதை நம்பினானோ; இல்லையோ தெரிய வில்லை. அவளை ஏற இறங்க பார்த்தான். அவள் சற்று மறைந்தாற்போல் அர்விந்த் பின்னால் நிற்க......

வலுகட்டாயமாக திரையை விலக்கி அவளை பார்க்க முடியாமல் அங்கிருந்து நகர்ந்தான். கதவருகே சென்றவன், சட்டென திரும்பி ''சுமனா'' எனக் கூப் பிட்டான்.

அவள் பின்னால் திரும்பி பார்க்காவிட்டாலும் அவள் உடலில் ஓடிய நடுக்கத்தை அர்விந்த் உணர்ந் தான்.

வந்தவன் இறங்கிய வினாடியில் வண்டி கிளம் பியது.

''நன்றி'' என்றாள் மிக மெதுவாய்.

''ப்ச்'' என்றான்.

''இது என்ன ஊர்?''

''விழுப்புரம்.''

''எத்தனை மணிக்கு திருச்சிக்கு போகும்?''

''ஒன்பது மணிக்கு'' என்றவன் தொடர்ந்து,

''நீ எங்கு போக வேண்டும்? யாராவது சொந்தக்காரர்கள் இங்கு இருக்கிறார்களா?'' என வினவினான்.

அவளிடம் பதில் இல்லை. அவளுக்கே தெரிந்தால் அல்லவா சொல்வதற்கு. இப்போதைக்கு பெரும் ஆபத்திலிருந்து தப்பி ஆகிவிட்டது. அதுவே அவளுக்கு மூச்சுவிட ஏதுவாயிருந்தது. அதுவரை ஏதோ ஒரு அச்சத்துடன் இருந்தவள் நிம்மதியாய் எதிர் இருக்கையில் படுத்து உறங்கிவிட்டாள்.

டி.டி.ஆர் வந்ததோ, அவள் தன்னைச் சார்ந்தவள் என்று அவன் பதிலளித்ததோ அவள் அறியாள்.

ஸ்ரீரங்கம் ஸ்டேஷன் வந்தபோது,

''காற்றில் வரும் கீதமே! என் கண்ணனை அறிவாயா?''

கனவில்...... இல்லையில்லை.... காதுக்குள் யாரோ பாடுவது கேட்டது. சட்டென்று விழித்தாள்.

அவன் கையிலிருந்த அலைபேசியிலிருந்து அந்த பாடல் மிதந்து வந்தது.

''அடுத்த ஸ்டேஷனில் நான் இறங்கப் போகிறேன். நீ எங்கு செல்ல வேண்டும்?''

'எங்கு செல்வது? இங்கு அவளுக்கு யாரைத் தெரியும்? சொல்லப் போனால் தமிழ்நாட்டிற்கே அவள் வருவது இது தான் முதல் முறை. இப்போதைக்கு இவனை விட்டால் யாரிடம் உதவி கேட்பது?'



''இங்கு ஏதாவது நல்ல தங்குமிடம் இருக்கிறதா?''

''மெயின்கார்டுகேட்டில் நல்ல ஹோட்டல் இருக்கிறது''என்றான்.தன்பெட்டியுடன் இறங்கியவன் தன் பின்னால் இறங்கியவளிடம் எதுவும் பேசாமல் தன் அருகில் வந்து நின்ற ஜிப்ஸியை கடந்து ஆட்டோவை கைத்தட்டி அழைத்தான். அவனிடம் குனிந்து ஏதோ சொல்லிவிட்டு,''ஏறிக்கொள்; ஹோட்டல் முன் இறக்கிவிடுவான்,'' ''ஒரு நிமிடம்'' என்றவாறு தன் விசிட்டிங்கார்டை எடுத்துக் கொடுத்தான்.

''உனக்கு ஏதாவது உதவி தேவை என்றால் போன் செய்; பை.''

திரும்பி நடந்தவன் காலரவம் கேட்டு நின்று பார்க்க.....

''ரொம்ப நன்றி.''

அவன் புன்னகை விரிந்தது. அவள் ஏறி கொண்ட ஆட்டோ விரைந்தது. திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டே சென்றவளை விழி அசைக்காமல் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜிப்ஸி ஹாரன் பலமாக ஒலிக்க.....

''வாடா ஐ.பி.எஸ். வீட்டுக்கு போகலையா? யுனிபார்மோட வந்துட்ட?''

''அம்மாவும், அப்பாவும் அத்தைவீட்டிற்கு போயிருக்காங்க. இன்னும் வரலை. உன்னை கூப்பிட ஜிப்ஸியை எடுத்துட்டு வந்துட்டேன்.''

''ஏன்? நான் ஆட்டோவில் வரமாட்டேனா? நீ எதற்கு சிரமப்படுகிறாய்?''

''ச்சு! யாரந்த ட்ரீம் கேர்ள்?''

''யாருக்குத் தெரியும்?''

'தெரியாமல் தான் ஜிப்ஸி வந்தது கூட அறியாமல் ஆட்டோவை அழைத்து விசிட்டிங்கார்டு சகிதம் அனுப்பினாயாக்கும்.'

''நீ சொல்வதை நம்புகிறேன்.'' என்றவனை முதுகில் தட்டி,

''நீ எவ்வளவு நம்புவாய் என்று எனக்குத் தெரியும். முதலில் வண்டியை எடு'' என்றான்.

சின்னவன் புன்னகையோடு தன்னருகே அமர்ந்திருந்த பெரியவனை ஓரக்கண்ணால் பார்த்து மெலிதாய் விசிலடித்தான்.

''என்ன ஹம்மிங் பலமாய் இருக்கு? ஆபீஸர் மாதிரி நடந்துக்கடா.''

''ஆபீஸர் தோரணை வெளியிலதான். வீட்டுக்குள்ளே கிடையாது தெரியுமா?''

''சந்தியா மட்டும் வீட்டிலே தனியா இருப்பாள்; சீக்கிரம் போடா.''

''நீ வேற! ப்ரீத்தி, கிருத்தி- ரெட்டை வாலு ஹாஸ்ட்டலல்ல இருந்து வந்திருக்கு, அதுங்க பண்ற அட்டகாசம் தாங்கலை,''



''ஓ! அதுக்கு பயந்துகிட்டு தான் வண்டியை எடுத்துட்டு இங்க வந்திட்டியா.''

பிரம்மாண்டமான வீட்டின் முன் வண்டி நின்றது.

''நீ போன காரியம் என்னாச்சு?''

ஷிப்பிங் கார்ப்பரேஷன் டீல் இன்னும் முடியலை. பேச்சு முன்னுக்கு பின் முரணாய் பேசுகிறான். வரட்டும், இந்த மாதக் கடைசியில் இங்கேயே அவன் வருகிறான். அப்போது பேசி ஒரு முடிவிற்கு வந்துவிடலாம்.'' என்றவன் தொடர்ந்து,

''என்னடா! திடீர்னு அத்தைவீட்டிற்கு போயிருக்காங்க?''

''ஆசைமகனுக்கு அருமை மருமகள் பிடிச்சுட்டு வர போயிருக்காங்களோ என்னவோ?''

''ச்சு! ரொம்ப பசிக்குதடா'' என பேச்சை மாற்றினான். கார் சத்தம் கேட்டதுமே சமையல்காரம்மா சாப்பாட்டு மேசையின் மீது தயாராய் எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டார்.

சுடச்சுட மென்மையான இட்லியும், புதினா சட்னியும் பசிக்கு மிகவும் இதமாய் இருந்தது.

''ஐ! அண்ணா'' கோரஸ் குரல் வந்தது.

''வீட்டிலே நீங்க யாருமே இல்லாம செம போர்.''

''அதுக்கு என்ன பண்ணலாம்?''

"சீக்கிரம் அண்ணியை அழைச்சிட்டு வாங்க."

"அட வாலுங்களா! எப்படி இருக்கீங்க?"

"போ அண்ணா! நேர்ல பார்க்கும் போது மட்டும் தான் அக்கறை! ஒரு நாளாவது எங்களை பார்க்க வந்தீங்களா?"

"அதான் நீங்களே வந்திட்டீங்களே! அப்புறம் என்ன அண்ணன் மேல் குறை படிக்கிறீங்க?"

"சின்ன அண்ணா! நீ எங்க விசயத்தில் தலையிடாதே."

"நீங்க இனிமே ஹாஸ்ட்டலல்ல இருக்கப் போறது இல்லை. இனிமே இங்க தான் இருக்கப் போறீங்க. சித்தப்பா சொல்லலையா?"

"ஐ! ஜாலி!"

"ஐயோ! கடவுளே! எங்களை காப்பாத்துப்பா."

சற்று நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு படுக்கச் சென்றனர்.

அர்விந்த் பயண களைப்புத் தீர குளித்துவிட்டு படுக்கையில் அமர்ந்த பொழுது 'செல்' ஒலித்தது; எடுத்தான்.

"இந்த ஹோட்டல் நல்ல வசதியாய் இருக்கிறது. உங்க விசிட்டிங் கார்டை பார்த்ததும், ரொம்ப மரியாதையாய் நடத்தினாங்க; நன்றி."

"சாப்பிட்டாயா?"



"ம். அப்புறம் ஒரு விஷயம்...... இப்ப வேண்டாம்.... காலையிலே பேசலாமா? தொந்தரவாய் இருக்காதே......." தயங்கி தயங்கித் தான் கேட்டாள்.

"அதெல்லாம் இல்லை. இப்ப நீ நிம்மதியாய் தூங்கு. காலையில் பேசலாம். குட் நைட்."

போனை வைத்ததும் ஏதோ ஓர் மகிழ்ச்சி மனதுக்குள் மலர்ந்தது.

## 4



காலையில் எழுந்து கார்த்திக்குடன் 'ஜாகிங்' போன அர்விந்த் பாதியிலேயே திரும்ப அவசரப்பட்டான்.

"என்ன அண்ணா?"

"ஒரு முக்கியமான போன் வரும்டா."

"செல்லை எடுத்துக்கிட்டு வந்திருக்கலாம் இல்லே"

அப்போது வேகமாய் வண்டி ஓட்டிக்கொண்டு வந்த பையன் ஒருவன் சடாரென்று திரும்பிய வேகத்தில் நின்று கொண்டிருந்த மினி லாரி மீது மோதி சரிந்து விழுந்தான்.

கார்த்திக்கும், அர்விந்தும் அருகே ஓடினர். தலையில் அடிபட்டு இரத்தம் வழிந்தது.

''ஹெல்மேட்டும் போடுவதில்லை; வேகத்தையும் குறைப்பதில்லை. யாருடா நீ?''

''இவனை G.H.-ற்கு கூட்டிக்கிட்டு போறேன்''

என்றவாறு டவலை நனைத்து காயத்தை கட்டியவாறு ஆட்டோவில் விரைந்தான். மருத்துவமனையில் அனுமதித்து விட்டு, அவன் வீட்டினருக்கு தகவல் சொல்லி அவர்கள் வந்ததும் விவரம் சொல்லி வீட்டிற்கு வந்த போது ஒன்பதாகி விட்டிருந்தது. அவசரமாய் தன் அலைபேசியை எடுத்தான். அதில் நான்கு மிஸ்டுகால்கள் இருந்தன. உடனே ஹோட்டலுக்கு தொடர்பு கொண்டான்.

''ஸாரி ஸார்! ரூம் பூட்டியிருக்கிறது.''

திரும்பவும் தொடர்பு கொள்வாள் என்ற நம்பிக்கையோடு அவசர அவசரமாய் தன் வேலைகளைச் செய்தான்.

''அண்ணா! ஜி.எம். லைனில் இருக்கிறார். உன்னுடன் பேச வேண்டுமாம்.''

''சரி சார்! நீங்களே பாருங்க. நான் ஒரு வேலையா பாஸ்போர்ட் ஆபீஸ் போக வேண்டி இருக்கிறது. வரும் போது அங்கே வருகிறேன்.''

''திவ்யாவோட பாஸ்போர்ட் என்ன ஆச்சுன்னு விசாரிச்சிட்டு வர்றேன் கார்த்திக்'' என போனை வைத்து திரும்பியவன் தம்பியிடம் சொன்னான்.

''நான் போய் அதைப்பற்றி பார்த்துட்டு வருகிறேன்; நான் போனால் காரியம் சீக்கிரம் முடிஞ்சுடும்.''



''அதுவும் சரிதான்! எங்க ரொம்ப நாளாச்சு அவளை இந்தப் பக்கமே காணோம்?''

''அம்மா டோபல் எக்ஸாம்ல ரொம்ப பிஸி. என்னையே கண்டுக்கறது இல்லே.''

''ஏய்! கவனமா இருடா! உன் மேல ஏதாவது கோபமாய் இருக்கப் போகுது.''

''அவள் கோபம் எல்லாம் என்கிட்டே ஒண்ணும் செல்லுபடி ஆகாது.''

''உன் ஐ.பி.எஸ். முறைப்பை அவள்கிட்ட தான் காண்பிக்கிறாயா?''

''சர்வீசிற்கு விட்டிருந்த உன் கார் ரெடியாயிடுச்சாம். வா உன்னை அங்கே இறக்கி விட்டுட்டு நான் ஸ்டேஷனுக்கு கிளம்பறேன்.''

இருவரும் கிளம்பினர். அர்விந்த் காரை எடுத்துக் கொண்டு S.M. காம்ப்ளக்ஸிற்கு சென்றான். லிஃப்ட்டில் மேலே ஏறி உள்ளே சென்றவன், வழியில் எதிர்பட்டவரை பார்த்ததும் புருவம் உயர்த்த,

''எல்லாரும் அங்கே இருக்காங்க.''

அறையை நோக்கி நடந்தான்.

''அர்விந்த்.''

சட்டென்று முகம் மலர திரும்பினான்.

அவள் நின்றிருந்தாள் இளம் பிங்க் சுடிதா
மென்மையான ரோஜா பூவைப் போல........

# 5



ஒரு கணம் வியப்பால் அவன் புருவம் உயர்ந்தது. அவனருகே வந்தாள். ''பேப்பர்ல விளம்பரம் பார்த்தேன். வேலைக்கு முயற்சி செய்யலாம் என்று வந்தேன்.........'' என்றவள் தயங்கி மறுபடியும் தொடர்ந்தாள்.

''வந்து..... வந்து........ என்னிடம் சர்ட்டிபிகேட் எதுவும் இல்லை. டிகிரி படித்ததற்கான ஃப்ரூப் என்று கூட எதுவும் இல்லை. இங்கு வேலை கிடைக்குமா? இங்கு கிடைக்காவிட்டாலும் வேறு எங்காவது ஒரு வேலை வாங்கித் தரமுடியுமா? எந்த வேலை என்றாலும் பரவாயில்லை.''

''கொஞ்சம் மூச்சு வாங்கிக்கொள். பிறகு பேசலாம்.

''வா, என்னுடன்'' என்று எதிரிலிருந்த அறைக்குள் அழைத்துச் சென்றான்.

''கம்ப்யூட்டர் பயன்படுத்த தெரியுமா?''

''ம்.''

''உன் ரெஸ்யூமை இதில் அடித்து தயார் செய்கிறாயா?'' பதில் வராமல் போகவே,



நிமிர்ந்து பார்த்தான். அவள் முகம் வாடி போயிருந்தது.

''சுமி! உன்னைப் பற்றிய விவரங்கள் தெரியாமல் எப்படி நான் உனக்கு வேலை வாங்கித் தர முடியும்?''

தலைகுனிந்து விரல்களை பார்த்தவாறு செயலற்று நின்றிருந்தாள்.

''சரி! உன் நிஜப் பெயர் ''சுமனா'' என்பது தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாது. அதுவும் உன்னைத் தேடி வந்தவன் மூலம் அறிந்தது. உனக்கு என்ன தெரியும்? எப்படிப்பட்ட வேலை வாங்கித் தரலாம் என எப்படி முடிவு செய்வது?''

அவளிடம் எந்த பதிலும் இல்லை. ''என்னை நம்பினால் சொல்லலாம்.'' சட்டென நிமிர்ந்தாள். கண்ணோரம் கலங்கி இருப்பது புரிந்தது.

''சரி, இங்கேயே இரு. அரைமணியில் நான் வருகிறேன்.'' அவன் வெளியேறியதும் கண்களிலிருந்து கண்ணீர் மடை திறந்தது போல் வழிந்தது. அடக்கவே முடியாது போல பொங்கிப் பெருகியது. அரை மணி ஒரு மணியாக நீண்டு விட்டது அவன் வந்த போது.

அவளை ஒரு விநாடி பார்த்தவன்,

''இப்பொழுது நீ குழப்பத்தில் இருக்கிறாய். உ சார்பாக சில முடிவுகள் நான் எடுக்க உன் அனும வேண்டும்.''

''என்ன?'' என்பது போல் அவள் ஏறிட்டு பார்க்க,

''பயப்படாதே! பிரச்சனை தரும் விஷயம் இருக்காது. வா போகலாம்.''

எழுந்தவளை நோக்கி.

''முதலில் முகத்தை கழுவிக்கொள்.''

அவசரமாக முகத்தை கழுவி துடைத்துக் கொண்டு அவனுடன் சென்றாள். கார் வழுக்கிக் கொண்டு பிரபல ஜவுளிக்கடை முன் நின்றது. அவள் எதுவும் மறுப்பதற்கு முன்,

''உன்னிடம் பெரிய லக்கேஜ் எதுவும் இல்லை என்று எனக்குத் தெரியும்.''

எளிமையாய் தோன்றிய உடைகளையே அவள் தேர்ந்தெடுத்தாள். பில்லை வாங்கியதும் அவள் எட்டிப் பார்த்தாள். ''உன்னிடம் வாங்கிக் கொள்ளும் போது கணக்கை பார்த்துக் கொள்ளலாம்.'' ஹோட்டலில் அறையை காலி செய்துவிட்டு அவளுடைய பையை எடுத்துக் கொண்டு கார் கிளம்பியது.

''பசிக்கிறது; ஏதாவது சாப்பிடலாமா?'' இருவரும் ரெஸ்ட்டாரெண்டின் குளிர்சாதன அறைக்குள் நுழைந்தனர்.

''முதலில் ஸ்வீட் சாப்பிடலாமா?''

''ம். ரசகுல்லா.''

''அது அத்தனை இஷ்டமா? பதில் இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டதே?'' தொடர்ந்து ஆர்டர் கொடுத்து விட்டு,



''இன்றைக்கு எங்கள் தமிழ்நாட்டு உணவை சாப்பிட்டு பார்'' என்றான்.

''நான் ஏற்கனவே சாப்பிட்டு இருக்கிறேன்.''

''நல்ல ஓட்டலில் தானே?''

''ம்ஹூம். என் அம்மா நன்றாக சமைப்பார்.''

''அப்ப தமிழ் அம்மாவா?''

''ம்! ஆனாலும் நீங்க ரொம்ப ஷார்ப்.''

கண்களால் புன்னகைத்தான்.

நேரே லேடீஸ் ஹாஸ்ட்டலுக்கு காரைத் திருப்பினான். அங்கே அவளுக்கு இடம் பதிவு செய்து அவளுடைய பொருள்களை அங்கே வைத்துவிட்டு அவளிடம் விடை பெற்றான்.

''வேலை........''

''உஷ்! நீ எதுவும் பேசக்கூடாது. எனக்குத் தெரியும்.''

அவன் கண்களிலிருந்து மறையும் வரை பார்த்தவாறே நின்றிருந்தாள்.

'அம்மா! நீ இவரை சந்தித்திருக்க வேண்டும்.'

மறுநாள் காலை எட்டுமணிக்கு ஹாஸ்ட்டலின் போன் ஒலித்தது. கீழிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது போன் என்று. பேசியது அர்விந்த்.

''ஒன்பது மணிக்கா? சரி, தெரியும். பஸ் - ஸ்டாண்டிற்கே வந்து விடுகிறேன்.''

மடமடவென்று குளித்து, தலை முடியை ஓசாக 'கிளிப்' போட்டுக் கொண்டு இளம் ஊதா சுடிதாரில் புறப்பட்டாள். மணி 8.59; அவள் பேருந்து நிலையத்தை அடைந்தாள்.

சரியாய் ஒன்பது மணிக்கு 'டாடா இண்டிகா' வந்து அவளருகே நின்றது.

''சுமி! குட்மார்னிங்.''

''குட் மார்னிங்'' அவள் ஏறியதும் கார் சின்னக் கடை வீதியை நோக்கிச் சென்றது. உச்சிப்பிள்ளையார் கோவிலுக்கு சற்று முன்னரே காரை 'பார்க்' செய்து விட்டு ''இறங்கு'' என்றான்.

''எங்கே?''

''மாணிக்க விநாயகரை பார்க்கத்தான். அவர் என் பேவரைட். உன் இஷ்ட தெய்வம் என்ன?''

''காளி''

''என்ன?'' என்று வியந்தான்.

''உண்மை தான் கல்கத்தா காளி தான் என் இஷ்ட தெய்வம்.''

வாய்விட்டு சிரித்தவன் சிந்தனை வயப்பட்டான்.

''நல்லா வேண்டிக்கோ; கேட்டதெல்லாம் கொடுப்பார்.''

''கோவிலுக்கு வருவது தெரிந்திருந்தால் புடவை கட்டிக்கொண்டு வந்திருப்பேன்.''

''அதுக்கெல்லாம் பிள்ளையார் வருத்தப்பட மாட்டார். அடுத்தமுறை வராமலா போய்விடப் போகிறோம்?''



பின் அங்கிருந்து புறப்பட்டு மிகப் பெரிய காம்ப்ளக்ஸ் முன் கார் நின்றது. ''வா'' இறங்கி அவன் பின்னால் சென்றாள்.

லிஃப்ட்டில் ஏறி இரண்டாவது தளத்தை அடைந்தனர்.

''எம்.டி'' எனப் பெயர் பொறிக்கப்பட்ட அறைக்குள் நுழைந்தனர்.

''என்னப்பா, எட்டரைக்கு எல்லாம் ஆபீஸிற்கு புறப்பட்டாய்னு தம்பி சொன்னான்; உன்னை பார்க்க நேரே ஊரிலிருந்து இங்கேயே வந்துட்டேன். கோவிலுக்கு போனாயா? அதான் நேரமாயிடுச்சா? ஏதாவது முக்கியமான விஷயமா?''

''பொறுங்கப்பா! அம்மா வந்தாச்சா?''

''இல்லை! அம்மா சாயந்திரம் தான் வர்றாள்;'' என்றவர் அப்போது தான் சுமனாவை கவனித்தார்.

அவர் பார்வை அவள் மீது விழுந்ததும் அவன் சொன்னான்.

''இவங்க தான் என்னுடைய பி.ஏ.''

## 6



மாலை சுமனாவை ஹாஸ்ட்டலில் இறக்கிவிட்டு அர்விந்த் வீடு திரும்பிய போது வீடே ஒரே கலகலப்பாய் இருந்தது.

'ஓ! அம்மா வந்தாச்சா?'

முகத்தில் புன்னகை துலங்க மங்கையர்க்கரசி வெளியே வந்தார்.

''என்னம்மா! ரொம்ப சந்தோஷமாய் இருக்கிறாய்?''

''அப்பாவோட ஜாலியா ஊர்சுத்திட்டு வந்திருக்கிற குஷி தான்.''

''ஏய் அதிகப்பிரசங்கி! வாயிலே ரெண்டு போடுவேன்.''

''இப்பவே உன் அதிகாரம் தூள் பறக்குது. இன்னும் மாமியார் ஆனால் கேட்கவே வேண்டாம்.''

''சாப்பிட எடுத்து வைக்கட்டுமா அப்பா.''

''நான் பிறகு சாப்பிடுகிறேன். உன்னைப் பார்த்து ஒரு வாரமாச்சு. வா கொஞ்சம் நேரம் உட்கார்ந்து பேசலாம்.''

''நான் கூட உன்கிட்டே பேசணும் அப்பா.''

''அப்ப இரு, கொஞ்சம் வேலை இருக்கு. முடிச்சிட்டு வந்துடுரேன், அப்பா எனக்காக ஆபீஸ் ரூம்ல காத்திருப்பார். பின் நிதானமாய் நாம பேசலாம்'' - உள்ளே சென்றான்.

''சிமெண்ட் இறக்குமதி பற்றி ஏதோ சொன்னியேப்பா, டீலரைப் பார்த்து பேசினாயா?''

''பேசினேன்ப்பா! இன்னும் சில விவரங்கள் தெரிய வேண்டி இருக்கு. இன்டர்நெட்டில் தகவல்களை



சேகரிக்கணும். சாஃப்ட்வேர் ஏற்றுமதி இந்த மாதம் நம்ம ரேஞ்ஜை- தாண்டி 5% அதிகமாகி இருக்கிறது.

''சந்தோஷம். வெற்றியை தக்க வச்சுக்கிறதில் ரொம்ப கவனமாய் இருப்பா.''

''புதுசா ஆள்களை நம்ப கம்பெனியின் கால் சென்டருக்கு தேர்ந்து எடுத்து இருக்கோம்பா.''

''நீ எல்லாம் சரியா தான் செய்வாய். தம்பி பாஸ்போர்ட் ஆபீஸ் போய்ட்டு வந்துட்டான். அந்தப் பொண்ணு திவ்யாவுக்கு உன் தம்பி மேல கொஞ்சம் கோவம்ன்னு நினைக்கிறேன்,''

''ஏன்?''

''அவனை கல்யாணத்துக்கு அவசரப்படுத்தினாள். இவன் இப்ப முடியாதுன்னு சொல்லிட்டான். அதனால் தான் மேல் படிப்புக்கு வெளிநாட்டிற்கு கிளம்புகிறாள்.''

''பேசாமல் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டியது தானே? ஏன் மறுக்கிறான்?''

''அவன் இராமலஷ்மணனாய் இருக்கணும்னு நினைக்கிறான்.''

''ஓ! என்னால் தான் பிணக்கா? நான் சரி செய்கிறேன். அம்மா கூட என்கிட்டே பேசணும்னு சொன்னாங்க.''

வாசலில் நிழலாடியது.

''தம்பி! சாப்பிட வாப்பா.''

"இதோ கைகால் அலம்பிட்டு வர்றேம்மா."

அவன் நகர,

அம்மா ஏதோ அப்பாவிடம் சொல்ல,

"அவசரப்படாதே மங்கை" என அப்பா கூறுவது தெளிவாய் அவன் காதில் விழுந்தது.

அப்பா நிஜமாகவே கம்பீரமான மனிதர் தான். சுமனாவை தன் பி.ஏ என அறிமுகப்படுத்திய போது.... அவள் வணக்கத்தை ஏற்றது தவிர அதிகப் படியாய் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.

திடீரென எங்கிருந்து முளைத்தாள் இந்த 'பி.ஏ' என்ற யோசனை தோன்றியிருக்குமோ? என்னவோ? யாருக்குத் தெரியும்?

சட்டென தோள்களை குலுக்கிக் கொண்டான்.

சாப்பாட்டு மேசையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது, வாசலில் ஹாரன் ஒலித்தது.

அம்மா வாசலுக்கு விரைய,

வாசலில் ஆலம் எடுக்காத குறையாய் பலமாய் வரவேற்பது தெரிந்தது.

"வா மருமகளே! வா!"

அர்விந்த் புருவத்தை உயர்த்தினான்.

ப்ளூ ஜீன்ஸும், பிங்க்-டாப்ஸுமாய் இளம் பெண்ணொருத்தி உள்ளே வந்தாள்.



# 7



"என்ன அடையாளம் தெரியலையா? உன் அத்தைப் பெண் ரம்யா."

"அரை இஞ்சுக்கு பவுடர் போட்டுக்கிட்டு வந்தால் எப்படி அடையாளம் தெரியும்?"- கிருத்தி ப்ரீத்தியிடம் முணுமுணுத்தாள்.

"ஹாய் அத்தான், நான் கூட உங்களை மாதிரியே லண்டனுக்கு படிக்கப் போகிறேன்."

"அப்படியா! சரி ஊர்ல அத்தை, மாமா, பாட்டி, தாத்தா எல்லாரும் நல்லா இருக்காங்களா?"

"எங்க வீட்டு டாமியும் சௌக்கியம். என்னைப் பற்றி எதுவும் விசாரிக்க மாட்டீங்களா?"

"அதான் பார்க்கிறேனே."

"அம்மா! எனக்கு ரொம்ப களைப்பாய் இருக்கிறது. முக்கியமான விஷயம் எதுவும் இல்லையே? நான் படுக்க போகட்டுமா?"

"நீ போப்பா! பாவம் பிள்ளை, வேலை வேலைன்னு இங்கே அங்கே திண்டாடுது."

''அத்தான், பொத்தான்னு என்ன பேச்சு?'' என ப்ரீத்தி நொடிக்க,

'ரம்யாவிடமிருந்து தப்பித்து ஓடுகிறானோ' யோசனையுடன் அப்பா பார்த்தார்.

''எம்மா! பியூட்டி பார்லரில் ரொம்ப லேட்டாயிடுச்சா? முன்னமே வந்திருந்தால் அர்விந்த் கூட பேசிட்டு இருந்திருக்கலாமில்லை.''

''போங்க அத்தை! அத்தானை அசத்தணும்னு பயண களைப்போட பியூட்டி பார்லர் போயிட்டு வர்றேன். அவர் என்னை கண்டுக்காமல் போயிட்டார்.''

''வருத்தப்படாதே ரம்யா! அண்ணனுக்கு இயல்பா இருந்தாத்தான் பிடிக்கும். அதோட அவருக்கு வேலை களைப்பு வேற.''

''ஐயோடா! எனக்கு மேக்கப் இல்லாமல் இருக்க முடியாதுப்பா.''

''இப்ப சந்தியாவை யாரு இப்ப டிப்ஸ் கொடுக்கச் சொன்னது?'' கிசுகிசுத்தாள் ப்ரீத்தி.

''ப்ரீத்தி, கிருத்தியை உனக்கு தெரியும் தானே ரம்யா?''

''ஓ! அக்காவுக்கு எங்களை ரொம்ப நல்லா தெரியுமே.''

''ஏய்! நான் உங்க அண்ணி; அக்கா இல்லை. வாலை என்கிட்டே ஆட்டாதீங்க, ஒட்ட நறுக்கிடுவேன்.''



''இரு! உன் லிப்ஸ்ட்டிக்கில் மிளகாய்ப் பொடி தடவி வைக்கிறோம்.''

சின்னவன் கார்த்திக் உள்ளே வந்தான்.

''ஹாய் ரம்யா! எப்படியிருக்கே?''

''நீயாவது கண்டுகிட்டாயே! பெரிய அத்தான் தான் என்கிட்டே சரியாய் பேசாமல் போயிட்டார்.''

''அண்ணனுக்கு களைப்பாய் இருந்திருக்கும்.''

''அட! உங்க குடும்பத்திலே எல்லாரும் சொல்லி வச்ச மாதிரி ஒரே பதில் சொல்றீங்களே?''

''நாங்க உண்மையை மட்டும் தான் பேசுவோம்.''

''அம்மா, சித்தப்பா சித்தி நாளைக்கு காலையில் வர்றாங்க.''

''சரிப்பா! கீழே அவங்க ரூமை சுத்தம் பண்ணி வச்சாச்சுப்பா.''

''அத்தை எனக்கு எந்த ரூம்?''

''மேலே இருந்துக்கிறியா?''

''ஐயோ! நம்மால மேலே ஏறி இறங்க முடியாது. நானே டயட்ல இருக்கேன்.''

''அப்ப சந்தியா ரூமை நீ எடுத்துக்க. அவள் மேலே இருந்துக்கட்டும்.''

''சந்தியா'' என்பதற்குள்,

''சரிம்மா'' என்றாள்.

''காலையில் எத்தனை மணிக்கு அத்தான் எழுந்திருப்பார் அத்தை?''

''ஜாகிங் போயிட்டு ஆறு, ஆறரைக்கு வருவான்.''

அனைவரும் படுக்கச் சென்றனர்.

''என்னங்க ரம்யாவை அர்விந்துக்கு சீக்கிரம் கல்யாணம் பண்ணிடனுங்க.''

அவர் பதில் சொல்லவில்லை.

''அவன் என் பேச்சை தட்டவே மாட்டான். வெளி நாட்டுக்கு எல்லாம் போய் படிச்சும் கூட என் பிள்ளை எந்த வெள்ளைக்காரியையும் இழுத்துக்கிட்டு வரலை. அவனுக்கும் 27 வயசாகுது. இன்னும் தள்ளி போடக் கூடாது.''

''அது சரி. அவன் மனசிலே என்ன இருக்கோ? ரொம்ப கனவை வளர்த்துக்காதே.''

''கண்டிப்பாய் என் மகன் கல்யாணம் என் இஷ்டப்படிதான், கார்த்தி உங்க பிள்ளை; உங்க ப்ரெண்டோட பொண்ணை தேர்ந்து எடுத்துட்டான். இவனுக்கு நான் தான் தேர்ந்து எடுக்கப் போறேன்.''

''எல்லாம் கடவுள் செயல். படும்மா.''

காலையில் அலாரம் வைத்து ஆறுமணிக்கு எழுந்து வந்த ரம்யா கொட்டாவி விட்டபடி அத்தையை தேடினாள்.

''அத்தை, அத்தான் எங்க?''

''அங்க தான் பேப்பர் படிச்சுக்கிட்டு இருப்பான்.''

சற்று நேரத்தில் திரும்பி வந்தாள்.



''எங்கேயும் காணோம் அத்தை.''

''இல்லையே, இருப்பானே! நல்லா பாரு.''

''யாரம்மா தேடற?''

''எங்கேடா உன் அண்ணன்?''

''அப்பவே ஜாகிங் முடிச்சுட்டு சீக்கிரமாய் கிளம்பி போய்ட்டானே! உன்கிட்டே சொல்லலியா?''

''கிளம்பிட்டானா?'' ஒரு நிமிடம் செயலற்று போனார் மங்கை.

# 8



சுமனா ஆபீஸிற்கு ஒன்பது மணிக்கு எல்லாம் வந்துவிட்டாள். உள்ளே நுழைந்தவளுக்கு ஒரே ஆச்சரியம். 'பத்துமணிக்குத் தான் ஆபீஸிற்கு வரு வேன்; நீ அதற்கு முன் வந்துவிடுகிறாயா?' என்று கேட்டவன் இன்று அவளுக்கு முன் வந்து இருப்பது வியப்பையே ஏற்படுத்தியது.

''குட்மார்னிங் அர்விந்த்.''

''குட்மார்னிங் சுமி, இந்த ஃபைல் எல்லாவற்றை யும் வரிசையாக அடுக்கு.''

எதேச்சையாய் கம்ப்யூட்டரை பார்த்தவள்,

''எக்ஸ்போர்ட் டீட்டெய்ல் வேண்டுமா?'' என்ற வாறே பட்டனைத் தட்டினாள். வேண்டிய விவ ரங்கள் திரையில் பளிச்சிட... அவளை ஆழமாய் பார்த்தான்.

''உங்களுக்கு எதைப் பற்றி தெரிய வேண்டும்?''

''ம்! நீயே வெளிநாட்டு சிமெண்ட் டீலர்ஸ் பற்றி தகவல் சேகரித்து ஒரு ஃபைல் தயாரித்து விடேன்'' என்றான்.

கவனமாய் வேலையில் ஆழ்ந்தாள். நீண்ட மென்மை யான விரல்கள் கணினியின் பட்டன்களில் விளை யாடின.

நடுவில், வேலையில் ஆழ்ந்திருந்தவளை அர்விந்த் நிமிர்ந்து பார்த்தான். ''சுமி'' அவளிடம் எந்த அசை வும் இல்லை.

''சுமீ'' சற்று உரத்து கூப்பிட்ட பொழுது தான் அவனை கவனித்தாள்.

''பசிக்கலையா? மணி ஒண்ணு. காலையிலேயே நான் சாப்பிடாமல் வந்துட்டேன். அது தான் பசி அதிகமாயிடுச்சு.''

''சரி'' என்று எழுந்தாள்.

''வெளியில் போகலாமா?'

''தினமும் சாப்பாடு இங்கேயே கொண்டு வந்து தரமாட்டார்களா?''



''இதுவரைக்கும் அப்படி இல்லை. இனிமேல் ஏற்பாடு செய்து விடலாம்.''

''இன்னிக்கும் வெளியே போகணுமா?''

''ஏன் பயப்படுகிறாய்? இங்கு உன்னைத்தேடி யாரும் வரமாட்டார்கள்.''

''என்னவோ தெரியலை தனியா வெளியே போக ணும், இருக்கணும் என்றாலே 'திடுக், திடுக்' என் கிறது.''

சொல்லும் போதே அவள் உடல் மெலிதாய் நடுங் கியது.

''காலையில் சாப்பிடலை தானே?''

அவள் தலைகுனிந்து கொண்டாள்.

''வா! எழுந்திரு! உடல் பலகீனம், உள்ள பல கீனத்தால் அதிகமாயிடும்.''

அவள் தயங்க, இன்டர்காமில் அழைத்து செய்தி சொல்ல சரியாய் பதினைந்து நிமிடங்களில் கேரி யரில் சாப்பாடு வந்தது.

அவனுடன் சேர்ந்து பசிக்கு சாப்பிட்டாளே ஒழிய ருசித்து சாப்பிட்டது போல் தெரியவில்லை.

''ஏம்மா! சாப்பாடு நல்லா இல்லையா?''

தலையசைத்தவளுக்கு தொண்டை அடைத் தது.

கனிவான சொற்களை கேட்கும்பொழுது மன உணர்வுகளை கட்டுப்படுத்த முடிவதில்லை.

''சுமி! இங்க பார்! தைரியத்தை விடாதே. இங்கே உன் பெயர் சுமதி என்றே சொல்லிக்கொள். யாருக்கும் 'சுமனா' எனத் தெரிய வேண்டாம்.''

பின் இருவரும் வேலையில் ஆழ்ந்து போயினர். மணி மூன்றான பொழுது அவன் எழுந்தான்.

''சுமி! நம்ம கால் சென்டரைப் பார்த்துவிட்டு வருகிறேன். நான் வந்த பிறகு நீ கிளம்பலாம்.''

பழைய ஃபைல், செய்தித்தாள் இவற்றை எடுத்து புரட்டிப் பார்த்து பல விவரங்களை தனியே குறித்து வைத்தாள்.

அவன் திரும்பி வந்தபொழுது மணி ஐந்தரை ஆகி இருந்தது.

''சுமி, கிளம்பலாமா?''

''இதோ நீங்க கேட்ட ஃபைல் தயாராகிவிட்டது.''

அவன் அதை வாங்கிப் பார்த்தான்.

''தமிழ் நாட்டிற்கு வருகின்ற கப்பல்கள்; சீனாவில் துறைமுகத்திற்கு அருகிலுள்ள சிமெண்ட் நிறுவனங்கள், அவற்றின் டீலர்கள், சிமெண்ட்டின் விலை, தரம், எடை, விற்கும் விலை, வாங்கும் விலை, இந்தியாவில் போடப்படும் இறக்குமதி வரி,



சிமெண்ட்டை விற்க வேண்டிய விலை போன்ற விவரங்களை துல்லியமாய் எடுத்துக்காட்டி தயாரித்து இருந்தாள்.

''ப்ரில்லியண்ட்'' என வியந்தான்.

''நன்றி.''

சிப்ஸும், தேநீரும் டேபிளுக்கு வந்தது.

''சுமி! உனக்கு ஒரு செல்போன் வாங்கி வந்திருக்கிறேன். நீ எப்பொழுது வேண்டுமானாலும் என்னுடன் தொடர்பு கொள்ளலாம். இது உனக்கு அவசியம் தேவை. அதனால் மறுக்காதே.''

''உங்களுக்கு நான் மிகவும் கடன்பட்டுக் கொண்டே போகிறேன்.''

''அன்பே சிவம்'னு தமிழில் சொல்வார்கள். பிறரிடம் அன்பு காட்டுவது கூட ஆன்மீக வழிபாடு தான். எனக்கு உன் தயவால் புண்ணியம் கிடைக்கிறது. இதற்காகவும் நீ கவலைப்படாதே.'' அவளுடன் பேசிக் கொண்டே காவிரி பாலத்தில் காலார நடந்து... பின் அவளை ஹாஸ்ட்டலில் இறக்கிவிட்டு, ப்ரீத்தி, கிருத்தி ஸ்கூல் அட்மிஷனுக்கு முக்கிய புள்ளி ஒருவரை பார்த்துவிட்டு வீடு திரும்பியபோது பத்துக்கு மேல் ஆகிவிட்டது. சத்தமில்லாமல் மாடி ஏற முயன்றவனை,

''அர்விந்த்'' என்ற குரல் தடுத்தது.

# 9



அவர்கள் வீட்டில் அனைவரும் இரவில் வெகு நேரம் விழித்திருப்பதில்லை. ஆண்கள் வேலையைப் பொறுத்து உறங்கும் நேரம் அமையும் என்றாலும் "early to bed" "early to rise" அங்கே பொதுவாக கடைபிடிக்கப்படும் பழக்கமாய் இருந்தது. ஆண்கள் தாமதமாய் வந்தாலும் உணவு பரிமாற பெண்களை எழுப்புவதில்லை. எனவே அர்விந்த் சத்தமில்லாமல் மாடி ஏறியதில் யாரும் கோபிக்க எதுவுமில்லை. காலையில் தன்னிடம் பிள்ளை சொல்லாமல் சென்றதே அந்தத்தாயின் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. காலையில் சாப்பிடாமல் சென்றவன் பகல் உணவிற்காவது வீட்டிற்கு வருவான் என பார்த்தால்....

இரவு உணவிற்கும் வரவில்லை என்றதும் மனம் துடித்துப் போனார். ரம்யா வேறு எங்கே அத்தானை காணோம் என்று தொணத்தி தள்ளிவிட்டாள். அவளுக்கு என்ன பதில் சொல்வது என்றும் தெரியவில்லை; மகனுக்கு என்ன ஆயிற்று என்றும் புரியவில்லை. தவிப்பே தாயை காத்திருக்க வைத்தது.



"என்னம்மா! இன்னும் தூங்கலையா?"

"இன்னிக்கு முழுசும் நீ வீட்டிலேயே இல்லையப்பா! சாப்பிடவும் இல்லை. என்கிட்டே சொல்லிக்காமல் கூட போயிட்டே."

"ரொம்ப முக்கியமான வேலை; தூங்கற உன்னை தொந்தரவு செய்யக் கூடாதுன்னு தான் எழுப்பி சொல்லலை - உன் விருப்பப்படி நான் எங்கிருந்தாலும் வேளை தவறாமல் சாப்பிட்டு விடுவேன். கவலைப்படாதீங்க. நீங்க சாப்பிட்டீங்களா?"

"நாங்க எல்லாரும் சேர்ந்துதான் சாப்பிட்டோம். ரம்யா கூட உன்னை காணலையேன்னு ரொம்ப வருத்தப்பட்டா."

"இதில் அவள் வருத்தப்பட என்ன இருக்கிறது?"

"சரிம்மா, உங்க மூட்டுவலி எப்படியிருக்கிறது? டாக்டரை பார்த்து ஆயின்மெண்ட் வாங்கி வந்திருக்கிறேன். தடவி காலை பிடிச்சு விடட்டுமா?"

"வேண்டாம்பா; அதை கொடு; நானே தடவிக் கொள்கிறேன். முகம் எல்லாம் களைச்சு போய் தெரிகிறது. நீ போய் படு." அம்மாவும், அண்ணனும் பேசிக் கொண்டிருந்ததை அரைகுறையாய் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் கார்த்திக்.

அண்ணனும், அந்த ட்ரீம் கேர்ளும் காவேரி பாலத்தில் நடந்து கொண்டிருந்ததை மினிஸ்டர் விசிட் ஸ்பாட்டை பார்வையிட சென்ற போது கவனித்

திருந்தான். அதைப் பற்றி அம்மா முன்னிலையில் எதுவும் கேட்க வேண்டாம் என முடிவு செய்து கொண்டான். 'ரம்யா' அண்ணனுக்கு ஏற்றவள் அல்ல என்பது அவன் கணிப்பு. அதை அண்ணனே சொல்லட்டும் என விட்டுப்பிடித்தான். திவ்யா விஷயத்தில் பெற்றோரிடம் இருபக்கமும் பேசி சம்மதம் வாங்கியவன் அர்விந்த் தான். அவன் முடிவுகள் தெளிவாயும், சரியாகவும் இருக்கும். அதனால் தான் குறுகிய காலத்தில் பிஸினஸ் சாம்ராஜ்யத்தில் அவனால் கொடி கட்டி பறக்க முடிந்தது.

''சாப்ஃட்வேர் கம்பெனி, கால்சென்டர், ஷிப்பிங் கார்ப்பரேஷன்'' என மூன்றையும் முத்தாய் நிர்வாகம் செய்வது சாதாரண விஷயமா? ஆட்களை எடை போடுவதில் மிக திறமைசாலி. இதுவரை அவன் கணிப்பு எதிலும் தவறியதில்லை. வீட்டில் எல்லாரும் அவரவர் விரும்பிய துறைகளில் முன்னேற அவன் முன்னுதாரணமாய் இருந்தான். முதல்நாள் தாய் வருத்தப்பட்டதாலோ, என்னவோ யாரும் எழுவதற்கு முன் ஆபீஸிற்கு கிளம்பவில்லை. ஆனாலும் வழக்கத்தை விட முன்னதாகவே கிளம்பிவிட்டான். அவன் கிளம்பும் போது எழுந்து வந்த ரம்யா

''அத்தான்! அடுத்த வாரம் எனக்கு பாத்-டே டிரஸ் வாங்க என்னை சென்னை சில்க்ஸுக்கு கூட்டிட்டு போறீங்களா?''



''என்னால் முடியாது. அம்மாவையும் தொந்தரவு செய்யாதே. இன்னிக்கு சித்தி வந்துடுவாங்க. நாளைக்கு அவங்களை அழைச்சுக்கிட்டு போயிட்டு வா,''

ரம்யாவின் முகம் சுருங்கிப்போனது, தன்னுடைய ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு உள்ளே வந்தாள். மங்கை அவளை சமாதானம் படுத்தும் விதமாய்,

''இன்னிக்கு உன் சின்ன அத்தை ஊரிலிருந்து வந்துடுவாங்க; நாளைக்கு அவர்களுடன் போய் புது டிரஸ் வாங்கிட்டு வாம்மா'' என,

ரம்யாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

## 10



காலேஜ் பஸ்ஸில் வந்து கொண்டிருந்த சந்தியா வழியில் அண்ணன் காரைப் பார்த்ததும் அதிலிருந்து சட்டென்று இறங்கிக் கொண்டாள்.

''ஐ! அண்ணா!''

''என்னடா? ஓ! காரை பார்த்ததும் இறங்கிக்கொண்டாயா?''

''ஆமாம் அண்ணா! எனக்கு கொஞ்சம் புக்ஸ் வாங்கணும். மக்கள் மன்றத்தில் 'புக் ஃபேர்' போட்டிருக்காங்க. உன் கூட போலாமேன்னு இறங்கிட்டேன்.''

''சரிடா போகலாம் வா.''

''ஏதாவது வேலை இருக்கா அண்ணா? நான் தொந்தரவு பண்ணிட்டேனா?''

''இல்லையில்லை வா. உனக்கு புக்ஸ் வாங்கறதும் முக்கியமான வேலை தான்.''

மறுபுறம் திரும்பி,

''சுமி'' என்று அழைத்தான்.

அப்போது தான் சந்தியா அந்தப் பெண்ணை கவனித்தாள்.

'ஐயோ! என்ன அழகு!'

''இது என் தங்கை சந்தியா.''

''இவங்க என்னுடைய பி.ஏ'' என இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தான். ''நீங்க ரொம்ப அழகாய் இருக்கீங்க.''

வெட்கத்துடன் முறுவலித்த சுமனா ''நீங்களும் தான்'' என்றாள்.

இருவர் பேச்சையும் கேட்டவன் சிரித்தான்.

''வாங்க போகலாம், சுமி உனக்கு புக்ஸ் நல்ல துணையாய் இருக்கும்! எடுத்துக்கொள்.''



''எனக்கு புத்தகங்களை மிகவும் பிடிக்கும்.''

தேடித்தேடி புத்தகங்களை வாங்கினர். பின் ரெஸ்ட்டாரண்ட்டிற்கு போய் மெலிதான இருட்டில் ப்ரைடு ரைஸ், மஷ்ரூம் சூப், நுடுல்ஸ், பன்னீர் பட்டர் மசாலா, நாண் வெட்டிவிட்டு சுமனாவை ஹாஸ்டலில் இறக்கிவிட்டு வீடு திரும்பினர். அண்ணனுடன் வெளியில் சென்று வந்தது சந்தியாவிற்கு மிகவும் உற்சாகமாய் இருந்தது. ப்ரீத்தி, கிருத்தியிடம் அதைப் பற்றி அளந்தது பத்தாது என்று வீடு திரும்பிய கார்த்தியிடம் அளக்கத் தொடங்கினாள். நல்லவேளை அன்றைக்கு பார்த்து ரம்யா அறையில் சுவாரஸ்யமாய் தன் பேவரிட் ஷாருக்கான் படம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் சும்மா இருந்தாலும் வீட்டிலிருக்கும் இளசுகளுடன் கலந்துரையாடுவதில்லை.

''அண்ணா! நம்ம அண்ணாவுடைய பி.ஏ-வை பார்த்தேன். என்ன அழகு தெரியுமா?''

''பி.ஏ இல்லை. பியான்ஸின்னு சொல்லு.''

''ஏய்! சின்னப் பெண்ணிடம் என்ன பேசுகிறாய்?'' என பெரியவன் அதட்ட,

''நான் ஒண்ணும் சின்னப்பிள்ளை இல்லை. இன்ஜினியரிங் காலேஜ் ஸ்டூடண்ட் ஆக்கும்.''

''தேர்ட் இயர் தானே?''

''பாருங்கப்பா இவங்களை! நான் சின்னப் பொண்ணுன்னு சொல்லிக்கிட்டு அவங்களே இரகசியம் பேசறாங்க.''

''இரகசியத்தை எப்படிம்மா உனக்குத் தெரியும்படி பேசுவார்கள்? உனக்குத் தெரிந்தால் அது ரகசியமாக இருக்காதே.''

''போங்கப்பா! நீங்களும் அண்ணன்கள் கட்சி தான். அதான் கேலி பண்றீங்க.''

''சத்தம் போடாதே! அப்புறம் உன் அம்மா வந்தால் அவளைத் தவிர நான் யாரையும் சப்போர்ட் பண்ண முடியாமல் போய்விடும்.''

''அப்பா நீங்களே சொல்லுங்க. அண்ணா பி.ஏ எவ்வளவு அழகு தெரியுமா? எவ்வளவு மென்மை யாய் பழகுறாங்க தெரியுமா?''

''ஒரு அழகான இளம்பெண் இன்னொரு பெண்ணை புகழ்றது ஆச்சரியம் தான். இருந்தாலும் உண்மையும் அது தானே? ஏதேது நீ பழகுற அள வுக்கு வந்தாயிற்றா?''

அர்விந்தும், கார்த்தியும் சத்தமில்லாமல் நழுவினர்.

# 11



''சித்தப்பா மண்டபத்தை பார்த்தீர்களா?''

''பார்த்தேன்பா. நீ இன்னும் வேறு ஏதோ யோசனை தெரிவிச்சதா அண்ணன் சொன்னாரே?''



''ஆமாம்! சித்தப்பா. அதைச் சுற்றியுள்ள இரண்டு ஏக்கர் நிலம் விலைக்கு வருகிறது.''

''அது எதுக்கப்பா? மண்டபமே ரொம்ப பெரிசு. கார் பார்க்கிங் இடம் கூட அருமையாய் இருக்கு. இன்னும் எதுக்கு அங்க போய் இடம் வாங்கிக்கொண்டு?''

''நம்ம கல்யாண மண்டபம் மெயின் ஏரியாவிலே இருக்கு. பக்கத்திலேயே ஒரு கேடரிங் காலேஜ் ஆரம்பிச்சோம்னா. பல வேலைகளுக்கு உதவியாய் இருக்கும். பல ஆபீஸ்களுக்கு உணவை ரெடிமேடாய் அனுப்பலாம். கல்யாணத்துக்குக் கூட சமையல் ரெடி பண்ணி கொடுக்கலாம்.''

''கல்விக்கு கல்வி; தொழிலுக்கு தொழில்னு ரொம்ப அருமையான யோசனை.''

''ப்ரீத்தி, கிருத்திக்கு ஸ்கூல் பிடிச்சிருக்கா?''

''ரெண்டும் ஜாலியா தான் ஸ்கூல் போகுதுங்க. பரீட்சை வந்தால் தான் தெரியும்; படிப்பு இலட் சணம்.''

''அத்தான் வீட்டிலே ரொம்ப போரடிக்குது; இன்னிக்கு நீங்க என்னை கண்டிப்பாய் வெளியே கூட்டிட்டு போங்க'' என சிணுங்கினாள் ரம்யா.

''வேலைவெட்டியில்லாமல் சும்மா இருக்கிற வங்களுக்குத் தானே சித்தப்பா போரடிக்கும்?''

''பாருங்க மாமா! என்னை எப்ப பார்த்தாலும் டீஸ் பண்ணிக்கிட்டே இருக்கார்.''

''ஏழுமலையை நான் பார்த்துட்டு வந்துடுரேன். நீ ராஜன் சாரை பார்த்துடுப்பா''-அவர் பேச்சை மாற்ற, அவன் நகர்ந்த பொழுதே ரம்யாவும் கோபத்துடன் போனாள். இவற்றை பார்த்துக் கொண்டிருந்த சித்தி அவரருகே வந்தாள்.

''அக்கா என்னமோ நினைச்சுக்கிட்டு இருக்காங்க பெரியவனுக்கு அதில் துளி கூட இஷ்டமில்லை போலிருக்கு.''

''எப்படி சொல்றே?''

''சின்ன சின்ன விஷயத்தையும் பெரியவன் கவனிச்சு யார் மனசும் நோகாமல் எதையும் செய்வான். ரம்யா இருக்கிற திக்கு பக்கமே திரும்பறதே இல்லை. அவளா பேசினாலும் முகத்தில் அடித்தாற்போல் பதில் சொல்கிறான்.''

''அவனுக்கு இஷ்டமில்லாமல் எந்த காரியத்தையும் வற்புறுத்த முடியாது. பார்க்கலாம் என்ன நடக்கிறதென்று? மீனாட்சியும் உறவை விட்டு கொடுக்கிறவள் இல்லை. என்னவாய் இருந்தாலும் அவன் சந்தோஷம் முக்கியம்.''

அர்விந்த் ராஜன் வீட்டிற்கு சென்ற பொழுது, திவ்யா ஊஞ்சலில் ஆடியவாறு படித்துக் கொண்டிருந்தாள்.

''ஹாய் திவ்யா.''

''அடடா! இப்பதான் மழை பெய்யும்னு வானிலை அறிக்கைச் சொன்னான்; நீங்க வந்து நிக்கிறீங்களே! இப்ப அதை நம்பறேன்.''



''ரொம்ப வேலையம்மா! அதான் வர முடியலை.''

''எப்படி இருக்காங்க?''

''யார்?''

''ம்! புரியாதவங்களுக்கு சொல்லலாம்.''

''நாள் தவறாமல் உன்னை கார்த்தி வந்து பார்க்கிறான்னு தெரியுது.''

''அவராய் வீட்டிற்கு வந்தால் தான் உண்டு. எங்க விஷயம் உறுதியானதுக்குப் பிறகு அடிக்கடி வீட்டிற்கு வராதே; வெளியிலே எல்லாம் உன்னோட சுத்த முடியாது நானே உன்னைப் பார்க்க வருகிறேன்னு 108 கண்டிஷன் போட்டிருக்கிறார்.''

''அவன் கிடக்கிறான் விடு. அவனை பார்க்க வீட்டிற்கு வர வேண்டாம். எங்களை பார்க்க வரலாமில்லையா? சந்தியா கூட கேட்டாள் திவ்யா அண்ணி ஏன் வர்றதே இல்லைன்னு?''

''நான் வருவது இருக்கட்டும். எப்ப எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கப் போறீங்க?''

''யாரை?''

''இதானே வேணாங்கிறது.....''

''சின்ன மூளையை ரொம்ப குழப்பிக்காமல் படி. பாஸ்போர்ட் வந்துடுச்சா?''

''என்னை நாட்டை விட்டு துரத்துவதிலேயே இருக்கீங்க அண்ணனும், தம்பியும்.''

''அப்ப நீயா ஆசைப்பட்டு படிக்கப் போகலையா? நானும் வேறு ஏதோ கேள்விப்பட்டேன். ஞாயிற்றுக் கிழமை வீட்டிற்கு வா. கார்த்தியுடன் பேசலாம்.''

''நானும் உங்க மர்மத்தை தெரிஞ்சிக்கவாவது கண்டிப்பாய் வரேன்.''

## 12



ஐந்து மணிக்கு அலாரம் அடித்த போது செல் ஒலித்தது. சுமனா எடுத்தாள்.

''சுமி; இன்னிக்கு காலேஜ் ப்ராஜெக்ட் விஷயமாய் மீட்டிங் இருக்கு. சீக்கிரம் வர முடியுமா?''

''ம்! எத்தனை மணிக்கு?''

''எட்டு.....இல்லே எட்டரைக்கு வந்தால் கூட போதும்.''

தன்னை மறந்து கொட்டாவி விட்டவாறே'

''வருகிறேன்'' என.

''ஸாரிம்மா! தூக்கத்தில் எழுப்பிட்டேனா? வச்சுடு ரேன்.''

கொஞ்ச நேரம் உடற்பயிற்சி செய்துவிட்டு குளித்துவிட்டு கிளம்பினாள். அலுவலகம் ஆறு



மணிக்கே திறந்துவிடும். எனென்றால் நேரம் காலம் பார்க்காமல் அர்விந்த் கார் அலுவலகத்தில் நின்றது.

''வணக்கம் சார்.''

''வணக்கம்.''

''அம்மா! ஏழு மணிக்கு எல்லாம் வந்துட்டாங்க.''

''வாங்க சித்தப்பா'' என்றவாறே லிஃப்ட்டின் பட்டனை அழுத்தினான். அர்விந்த் உள்ளே நுழைந்த பொழுது தீவிரமாய் கணினியில் ஆழ்ந் திருந்தாள்.

''குட்மார்னிங்,'' நிமிர்ந்தான்; புன்னகைத்து ''குட்மார்னிங்'' என்றாள்.

''இவர் என் சித்தப்பா,'' ''வணக்கம் சார்.''

''காலேஜ் கட்டடத்தின் ப்ளான் இது. இன்ஜினியர் ஒன்பது மணிக்கு வந்துவிடுவார். அவர் கொடுத்த கொட்டேஷன் இங்கே இருக்கு . கேடரிங் காலேஜிற்கு அங்கீகாரம் வாங்கும் ஃபார்ம் தயாராய் இருக்கிறது. இன்டர்வியூவிற்கு நியூஸ்பேப்பருக்கு 'ஆட்' அனுப்பியாகி விட்டது. எஜிகேஷன் மினிஸ் டரை மீட் பண்ண அவரோட பி.ஏ அடுத்தமாதம் 20ந் தேதி அப்பாய்ண்மெண்ட் கொடுத்திருக்கிறார்.''

சிவகுரு அசந்து போனார். பெண்ணா? மெஷினா? இத்தனை சுறுசுறுப்பாய், அருமையாய் எப்படி இந்தப் பெண் வேலை செய்கிறாள்? அழகும்,

அறிவும் சேர்ந்து இருக்கிறது. இப்படிப்பட்ட பெண் தான் அர்விந்த் மனைவியாக வேண்டும்.

விவரங்களை வாங்கி பார்த்தவன்,

''மீட்டிங் ஹால் போகலாமா?'' என்றான்.

மீட்டிங் ஹால் மலர்கொத்துக்களுடன், பூந்தொட்டிகளுடன் பசுமையாய் கண்ணுக்கு குளிர்ச்சியாய் மெல்லிய நறுமணத்துடன் இருந்தது.

''உன் ஏற்பாடா சுமி?'' என்றவன் கண்களால் அவளை பாராட்டினான். இன்ஜினியர், காண்டிராக்டர், ஜி.எம், பி.ஆர்.ஓ எல்லாரும் வந்தபிறகு மீட்டிங் தொடங்கியது. அதற்கு அரைமணிக்கு முன் தன் அறைக்கு அவளை அழைத்தான்.

''சுமி, சாப்பிடு'' என ஹாட்கேஸை திறந்து இட்லியை கொடுத்தான்.

''இரண்டு போதும்'' என மூன்று இட்லியை அவனிடம் கொடுக்க இருவரும் நின்றவாறே அவற்றை சாப்பிட்டு விட்டு சென்றனர். அதை காணாதது போல் சிவகுரு பார்த்தார்.

'பொருத்தமான ஜோடி!' மீட்டிங் முடிய இரண்டு மணி நேரம் ஆனது.

''சரிப்பா. நான் வீட்டிற்கு கிளம்பறேன். சாப்பிட நீயும் வீட்டிற்கு வருகிறாயா?''

''இல்லே சித்தப்பா. ரிஜிஸ்டர் ஆபீஸிற்கு போக வேண்டும்.''



''எங்கே போனாலும் முதலில் சாப்பிட்டு போ! அந்த பொண்ணையும் சாப்பிடச் சொல்லு.''

வீட்டிற்கு சென்றவர் தன் அண்ணனிடம் அரை மணிக்கு மேலாக சுமனாவைப் பற்றி பேசித்தள்ளி விட்டார்.

''என்ன அருமையான பொண்ணு! அது வேலையைப் பார்த்து அசந்தே போயிட்டேன்! சாப்பாடு, நேரம் காலம் பார்க்காமல் என்னமாய் வேலை செய்யுது. நம்ம அர்விந்துக்கு பொருத்தமான பொண்ணு.''

கடைசி வாக்கியத்தை சுற்றும் முற்றும் பார்த்த வாறே சொன்னார். நல்லவேளையோ! போதாத வேளையோ! அது மங்கையின் காதில் விழுந்தது.

## 13



''சித்தப்பா, அம்மா!'' என சந்தியா கிசுகிசுத்தாள். ஆனால் நேரமோ கடந்துவிட்டது. பேச்சை காதில் வாங்கியவாறே,

''எந்தப் பெண்? யாருக்கு பெண்?'' என.

''அதொன்றுமில்லை. நாங்க ஆபீஸ் விஷயம் பேசிக்கொண்டிருந்தோம்.''

''என்னிடம் ஏதோ மறைக்கிறீர்கள், இருங்க என்ன விஷயம் என்று கண்டு பிடிக்கிறேன்.''

சாந்தி! ப்ரீத்திக்கு ஜடை பின்னி கொண்டிருக்கும் பொழுது.

''சாந்தி! என்ன அலுவலகத்தில்? இவன் விழுந்து விழுந்து ஓடுகிறான். சின்னவர் மாய்ந்து மாய்ந்து பேசுகிறார்.''

''தெரியலையே அக்கா! அவர் என்கிட்டே எதுவும் பேசலை.''

''என்னவோ அர்விந்த், பொருத்தமான பொண்ணுன்னு காதிலே விழுந்தது.''

''நான் வேணா அவர்கிட்டே கேட்டுச் சொல்லட்டுமா?''

''வேணாம். ரம்யா பர்த்டே அன்னிக்கு அர்விந்த் வீட்டில தான் இருப்பான். பார்ட்டியிலே அர்விந்துக்கு நிச்சயம் பண்ணின பொண்ணு இதுதான்னு சொல்லப் போறேன்.''

''அர்விந்த் கிட்டே கேட்க வேணாமா?''

''அவன் என் பேச்சை மீறமாட்டான். மீறினால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது.''

''என்ன அக்கா இது?''

''ஆமாம் சாந்தி! இதை உன் மனசோட வைத்துக் கொள்.'' ப்ரீத்தி சந்தியாவை தேடிப் போனாள். பின் இருவரும் அர்விந்தை தேடிப் போனார்கள்.



''அண்ணா, நீ ரம்யாவை கல்யாணம் பண்ணிக்கப் போறியா?''

''வேண்டாம் அண்ணா! கஷ்ட காலத்தை நீயே தேடிக்காதே.''

''அப்படி யார் உங்களுக்குச் சொன்னது? ரம்யாவா?''

''இல்லை; அம்மா.''

''என்ன நடந்தது?''

ப்ரீத்தி நடந்த கதையைச் சொன்னாள்.

''சரி நீங்க போங்க. நான் பார்த்துக் கொள்கிறேன்.'' மறுநாள் விடியற்காலையில் எழுந்து கிளம்பியவனை,

''தம்பி, ரம்யாவோட பர்த்-டே பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணிடு,'' என்றாள்.

''சரிம்மா.''

''நீ என்ன தரப் போகிறாய் அவளுக்கு?''

''தலையிருக்க வாலாடாது; நீங்க கிஃப்ட் கொடுத்தா, நான் கொடுத்த மாதிரி தான்.''

கிளம்பி போய்விட்டான்.

கார்த்திக் அன்றைக்கு சின்ன ப்ரீப்கேஸுடன் கிளம்பினான்.

''நீ எங்கடா பொட்டியோட கிளம்பறே?''

''அட! முக்கியமான கேஸ் ஃபைலுமா. கிளம்பும் போதே கேட்கிறீயே?''

''சரி கோபிக்காதே.'' மெதுவாய் பெட்டியை கொண்டு போய் அண்ணனிடம் சேர்ப்பித்தான். அர்விந்த் வீட்டிற்கு மூன்று நான்கு முறை போன் பண்ணிவிட்டான்.

''அம்மா, எல்லாருக்கும் போன் பண்ணி பார்ட்டிக்கு வரச் சொல்லிட்டேன். ரேவதி அக்காவுக்கும் சொல்லணுமா?''

''ஏண்டா, அவளை விட்டுட்ட?''

''அவங்களுக்கு இப்பதானே குழந்தை பிறந்திருக்கு?''

''அட! அது ஆச்சு மூணுமாசம், என் அக்கா பெண் அவள் இல்லாமலா நம் வீட்டு விசேஷம் நடக்கிறது? அவசியம் வரச்சொல்லு. மாப்பிள்ளை உனக்கு மாமன் தானே? உரிமையாய் அவனையும் அவசியம் வரச் சொல்லு.''

''அம்மா நீ கால்வலியோட இங்கேயும், அங்கேயும் அலையாதே.''

''அதெல்லாம் நான் கவனிச்சுக்கறேன். சீக்கிரம் வேலையை முடிச்சிட்டு வீட்டுக்கு வா. நாளைக்கு லீவு போட்டுடு.''

பேசிக் கொண்டு இருக்கும் பொழுதே லைன் 'கட்' ஆனது. வீடு ஒரேடியாய் அமர்க்களப்பட்டுக்



கொண்டிருந்தது. அலங்காரம் ஆடம்பரமாய் ஜொலித்தது. ஆனால் விழா நாயகன் தான் அங்கு இல்லை.

## 14



வீட்டில் அவன் தாய் அவனை காணாமல் பரபரத்து கொண்டிருக்க.... அவனோ சுமனாவுடன் உச்சிப்பிள்ளையார் கோயில் மலைப்படி ஏறிக் கொண்டிருந்தான். பாதி படிகளை கடந்ததும் நடுவில் சாலை வந்தது. சாலையைத் தாண்டியதும் மறுபடியும் கோவில் தொடங்கியது. யானை கட்டியிருந்ததற்கு எதிர்ப்புறம் பிரம்மாண்டமான விநாயகர் சிலை இருந்தது.

''இவர் தான் கல்யாண விநாயகர்; நல்லா கும்பிட்டுக்கோ.''

''சரி! போன முறை மாணிக்க விநாயகர் கிட்டே என்ன வேண்டிக்கிட்டே?''

''அது த்தான் உடனே பலிச்சிடுச்சே!''

''ஓ! வேலை கிடைக்கணும்னு வேண்டிக் கொண்டாயா?''

''ம்''. மேலே செல்ல அனுமதி சீட்டை வாங்கிக் கொண்டு மேலே ஏறினர். வெண்மையில் சிவப்பு நிற ''பத்திக் பிரிண்ட்'' செய்த சுடிதார். வெள்ளையும் சிவப்பும் கலந்த காட்டன் துப்பட்டா அவளுக்கு மிக அழகாய் இருந்தது. அனாயசமாக படிகளை துள்ளிக் கொண்டு கடந்தாள் சின்னக் குழந்தையைப் போல, அவன் வேகமாக படியேறினான் என்றாலும் அவளை முந்திக் கொண்டு செல்லவில்லை. விடுவிடென ஏற வேண்டியது, பின் அவனைத் திரும்பிப் பார்ப்பது; சன்னல் வழியே சிறு குழந்தையாய் வேடிக்கை பார்ப்பது என அவள் சென்று கொண்டிருந்தாள். தாயுமானவர் சந்நிதியில் நிதானமாய் சாமி கும்பிட்டு விட்டு அங்கேயே சற்று நேரம் அமர்ந்தனர். சுவாமிக்கு நைவேத்தியம் செய்த பிரசாதம் கிடைத்தது. பொங்கலும், நெய் அப்பமும் சாப்பிட மிக அருமையாய் இருந்தது. அவன் தன் தம்பி தங்கையோடு வந்த அனுபவத்தைச் சொல்லி சிரித்தான். தொடர்ந்து மலையேறும் போது பல்லவ கால சுரங்கப் பாதையைக் காட்டினான். அது தஞ் சாவூர் அரண்மனைக்கு செல்வதாகவும், தற்போது உபயோகத்தில் இல்லை எனவும் கூறினான். காற்று சிலு சிலுவென அடித்தது. அவள் துப்பட்டா அவன் முகத்தில் பட்டது. தலையில் வைத்திருந்த நெருக்க மான முல்லைச்சரத்தின் வாசனை நாசியை துளைத் தது. மனதுக்குள் ஓர் இனிமை நிறைந்தது போன்ற உணர்வு இருவருக்கும்.



''எனக்கு மலைன்னா ரொம்பப் பிடிக்கும்.''

''அதுதான், துள்ளிக்கொண்டு போவதிலேயே பார்த்தேனே!''

மேலே நின்ற ஒற்றைமரமும், ஊர்ந்து செல்லும் பொம்மைகளாய் வாகனங்களும் ரசிக்க ரசிக்க அருமையாய் இருந்தன. மேலே விநாயகரை தரிசித்து விட்டு பிரகாரத்தைச் சுற்றும் போது உற்சாகமாய் உணர்ந்தாள் வெகுநாட்களுக்குப் பிறகு.

அவள் சந்தோஷத்தை புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

''அர்விந்த் ரொம்ப நன்றி, இன்னிக்கு ஆபீஸ்........''

''மூச்! எதைப்பற்றியும் என்னிடம் கேள்வி கேட்காமல் வரவேண்டும் என்று சொல்லித் தான் உன்னை இங்கு கூட்டி வந்தேன்; ஞாபகமிருக் கட்டும்.'' நிதானமாய் ஏறி இறங்கினர். பொதுவான விஷயங்கள், ரசனைகள், பிடித்த விஷயங்கள் இப்படி பலவற்றை பேசிக் கொண்டிருந்தனர். அவளும் தன்னைப் பற்றி எதுவும் சொல்லவில்லை அவனும் கேட்கவில்லை.

அங்கே வீட்டில் தியானேஸ்வரன்,

''அர்விந்த் எங்கே மங்கை? இராத்திரி கூட வரலை போலிருக்கு? உன் செல்லமகன் உன்னிடம் சொல்லாமல் எங்கும் போக மாட்டானே?''

''நேத்திக்கு நாலைந்து முறை போனில் பேசினான். பார்ட்டிக்கு யாரையெல்லாம் கூப்பிடறதுன்னு கேட்டான். ஆனால் எங்கே போனான்னு தெரியலை.''

''ஏன் யாரையும் கூப்பிடலையா?''

''இல்லியே எல்லாருக்கும் போன் பண்ணி வரச் சொல்லி இருக்கானே.''

''அப்ப வந்துருவான். வீட்டிற்கு வர்ற கெஸ்ட்டை முதலில் கவனி.''

'எங்க போயிருப்பான்? ஏன் வீட்டிற்கு வரலை? செல் ஏன் ஸ்விட்ச் ஆஃப்லேயே இருக்கு? என்னாச்சு இவனுக்கு? கல்யாண விஷயம் அவனுக்கு பிடிக்கலையா? நான் இன்னிக்கு அதைப் பற்றி பேசப் போவது அவனுக்குத் தெரியாதே. அவனுக்கு ஏதாவது ஆபத்தா?'

பல்வேறு யோசனைகள் ஓடினாலும் வரும் விருந்தினரை உபசரிக்க வேண்டி வந்தது. நேரம் செல்ல செல்ல தவிப்பு அதிகமாகியது.

''என்ன பெரியம்மா எப்படியிருக்கீங்க?''

''வா! ரேவதி, நல்லாயிருக்கியா? குழந்தை எப்படியிருக்கிறான்?'' கேட்டவுடன் அவள் கண்கள் கலங்கியது. பதறிப்போய்,

''என்னம்மா ஆச்சு?'' என்றாள்.



''குழந்தைக்கு பிறவியிலேயே காது கேளா குறைபாடு இருக்கு பெரியம்மா.''

''அடப்பாவமே! உனக்கு என்ன ஆறுதல் சொல்றது? ஏற்கனவே இரண்டு மூளை வளர்ச்சி இல்லாமல் பிறந்து இறந்து போச்சு.. இப்ப பிறந்து இருக்கிறதும் இப்படியா? கவலைப்படாதே. கடவுள் வழிகாட்டுவார். இப்ப தான் மருத்துவம் நிறைய வளர்ந்திருக்கே.''

''சொந்தத்தில் கல்யாணம் பண்ணிக்கிட்டது தான் தப்பு பெரியம்மா.''

''என்னம்மா சொல்றே?''

''ஆமாம் பெரியம்மா, ரொம்ப நெருங்கின சொந்தத்திலே கல்யாணம் பண்ணிக் கொண்டால் இப்படி குறைபாடு உள்ள குழந்தை பிறக்குமாம்.''

''என்னடி குண்டைத் தூக்கி போடுகிறாய்?'' என்றவள் அடுத்து யாரோ வந்துவிட அங்கே சென்றாள்.

# 15



அங்கும் இங்கும் கண்ணாடி சன்னலை மூடிக் கொண்டு ஏ.சி காரில் சுற்றி முடித்தாகிவிட்டத

இரவு உணவை முடித்துக் கொண்டும் அவன் வீட்டிற்கு புறப்படும் வழியைக் காணோம்.

''என்ன அர்விந்த்? ஏதாவது பிரச்சனையா?''

''ம்! அதை தீர்க்கத்தான் வழி செய்து கொண்டிருக் கிறேன்.''

''நீ கிளம்பு; நான் கால் சென்ட்டருக்கு போகி றேன்.''

ஹாஸ்ட்டல் வெளிப்புற கதவு பூட்டியிருந்தது.

''இரு! இரு! இனி போய் எழுப்பாதே, போன் செய்து உன் அறைத்தோழியிடம் காலையில் வருவதாக சொல்லி விடு. எங்கள் வீட்டிற்கு போக லாம்.''

''இல்லை அர்விந்த் அது சரி வராது. பத்துமணி ஒன்றும் அதிகமில்லை. நான் அறைக்குச் செல் கிறேன். நீங்க போங்க,''

அர்விந்த் எதிரே நிறுத்தியிருந்த காரை நோக்கி நடந்தான். சாலையை கடக்கும் பொழுது மிக வேக மாய் வந்த டூவீலர் அவன் மேல் மோதியது. சுமனா பதறி அருகே ஓடினாள். காலில் பலமாய் அடிபட் டிருந்தது. அவனால் எழவே முடியவில்லை. ஹாஸ்ட்டல் வாட்ச்மேன் துணையுடன் அவனைத் தூக்கினாள். அவன் கால் வீங்க ஆரம்பித்தது. அறையிலிருந்து விடுவிடுவென துணியை எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள். இரண்டு கனமான அட்டைகளை காலில் வைத்து அது நழுவாமல் துணியால் இறுகக் கட்டினாள்.



காரில் அவனை பின் இருக்கையில் கிடத்தச் சொல்லி காரை இலாவகமாக எடுத்தாள்.

''எங்க போற சுமி,'' வலியுடன் கேட்டான்.

''பக்கத்திலே தான் ஆர்த்தோ ஹாஸ்பெட்டல் இருக்கிறது; அங்க போயிடலாம்.'' செல்லும் முன் போனில் தகவல் சொல்லிவிட வீல்சேருடன் வாச லில் தயாராய் இருந்தார்கள்.

''போன் நம்பர் எப்படித் தெரியும் உனக்கு?''

''வரும் போது ஹாஸ்ட்டல் டெலிபோன் டைரக்ட் ரியில் பார்த்துவிட்டு வந்தேன்.''

உடனடியாக அட்மிட் செய்தனர். காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. எக்ஸ்-ரே, ஸ்கேன் எடுத்து பின் அவனுக்கு காலில் கட்டு போட்டார்கள். வலி தான் பொறுக்க முடியாததாய் இருந்தது.

''பெயின் கில்லர்'' இஞ்செக்ஷன் போட அமைதி யாய் தூங்க ஆரம்பித்தான். மணி பன்னிரெண்டு ஆகிவிட்டது. அவன் வீட்டிற்கு தகவல் சொல்ல வேண்டுமே? அவன் செல்லை எடுத்து பார்த்தாள். ''கார்த்திக்'' என்ற பெயரில் ஸ்டோர் பண்ணியிருந்த நம்பரை அழுத்தினாள்.

''என்ன அண்ணா? இங்க பங்ஷன் முடிஞ்சிடுச்சு! அம்மா எந்த குண்டும் போடலை; நீ காலையில் வீட்டிற்கு வந்துவிடு.''

''நான்..... நான்..... சுமி. அர்விந்திற்கு சின்ன ஆக்ஸிடெண்ட், ஹாஸ்பெட்டல்ல இருக்கார். பயப்படுவதற்கு ஒன்றுமில்லை; பெரியவங்களை கலவரப்படுத்தாமல் நீங்க வரமுடியுமா?''

கார்த்திக் பதறிப் போனான்.

'அம்மா அப்பாவிடம் இப்பொழுது எதுவும் சொல்ல வேண்டாம்; அம்மா ஏற்கனவே எக்கச்சக்க டென்ஷனில் தூங்க போயிருக்காங்க. இந்த நேரத்தில் இதைச் சொன்னால்.............

வேண்டாம். முதலில் நாம் போய் பார்ப்போம்' என்று சித்தப்பாவை எழுப்பி இலேசாய் விஷயத்தை சொல்லிவிட்டு புறப்பட்டான். பதினைந்தே நிமிடங்களில் ஹாஸ்பெட்டல் வாசலில் இருந்தான். ரிசப்ஸனில் விசாரித்து அறைக்குள் நுழைந்தான். அர்விந்த் உறங்கிக் கொண்டிருக்க, சுமி திறந்திருந்த சன்னல் வழியே இருண்ட, நட்சத்திரங்கள் மின்னும் வானத்தைப் பார்த்தவாறு கம்பியை பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள்.

கதவு திறக்கும் ஒலி கேட்டுத் திரும்பியவளிடம்,

''என்னாச்சு?''

''டூ வீலர் மோதிடுச்சு. காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு இருக்கிறது.''

''மோதின வண்டி நம்பர் தெரியுமா?''

''இல்லை! கவனிக்கலை.''



அதற்குள் அவனிடம் அசைவு தெரிந்தது.

''என்ன அர்விந்த்.?''

''சுமி! அந்த பெய்ன் கில்லர் மாத்திரையும் கொடு.''

''வேண்டாம் அர்விந்த். ஏற்கனவே இஞ்செக்ஷன் வேறு போட்டிருக்கு,''

முணகியவன் அப்போது தான் கார்த்திக்கைப் பார்த்தான்.

''ரொம்ப வலிக்கிறதா?''

''பெய்ன் தாங்க முடியலையடா.''

''நீங்க பேசிக்கிட்டு இருங்க. நான் டாக்டரை கேட்டுட்டு வரேன்.'' சுமி நகர,

கார்த்திக் கண்ணீரே விட்டு விட்டான்.

''ஏய்! சீ! என்னடா இது? வீட்டில் யாருக்கிட்டேயும் சொல்லலை தானே?''

''இல்லை. காலையில் சொல்லிக் கொள்ளலாம் என்று வந்துவிட்டேன்.''

''அங்கே எதுவும் பிரச்சனை இல்லையே?''

''எதுவும் இல்லை; நீ மனசை அலட்டிக்காத.''

டாக்டர் சுமியுடன் வந்தார்.

''இன்னும் இரண்டு மணி நேரம் கழித்து இந்த மாத்திரை ஒன்றை போட்டுக் கொள்ளுங்கள்.''

# 16



விடிந்தும், விடியாததுமாக விஷயம் கேள்விப் பட்டு வீட்டிலிருந்து அனைவரும் வந்துவிட்டனர்.

''என்னடா தம்பி இது?'' - மங்கை அழ,

''உன்னை ஏமாற்றியதற்கு தண்டனை அம்மா.''

''அப்படி சொல்லாதேப்பா! என்றைக்கும் நீ நல்லா இருக்க வேண்டும். நான் தான் புரியாது நடந்து கிட்டேன். எல்லாம் உன் மனசு போல நடக்கும். வருத்தப்படாதே.''

மாறி மாறி ஒவ்வொருவராக உள்ளே போய் பார்க்க, ''ஏம்மா! இது ஹாஸ்பெட்டலா? எக்ஸ்சிமிஷனா?'' என நர்ஸ் அலுத்துக் கொண்டாள். ''பேஷண்ட்டை ரெஸ்ட் எடுக்க விடுங்க.''

''மங்கை நீ வீட்டிற்கு கிளம்பு.''

''அப்பா நீங்களும் வீட்டிற்கு போங்க. நான் அண்ணனுடன் இருக்கிறேன்.''

''கார்த்தி''.

''என்ன அண்ணா?''

''சுமியை ஹாஸ்ட்டலில் விட்டுடு. அவள் இன் றைக்கு ரெஸ்ட் எடுக்கட்டும்.''



''நானே போயிடுவேன்; ஆபீஸ்ல நிறைய வேலை இருக்கு. உங்க வேலையை நீங்க வருகிறவரை பார்க்க வேண்டாமா?''

''காரை எடுத்துட்டு போ. இப்ப எனக்கு அது தேவைப்படாது.''

அவளுடன் விபத்து நடந்த இடத்தில் விசாரிக்க கார்த்திக் கிளம்பினான். மங்கை அவளை வைத்தக் கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''விபத்து நடக்கிறப்ப; ஆரம்ப மணித்துளிகள் ரொம்ப முக்கியம். எவ்வளவு சீக்கிரம் மருத்துவ உதவு கிடைக்குதோ அவ்வளவு சீக்கிரம் உயிரை காக்கலாம். அதுவும் முதலுதவி செய்து உடனே மருத்துவ மனையில் சேர்த்தாங்களே அந்தப் பெண்ணை பாராட்ட வேண்டும்,'' என பெரிய டாக்டர் சொல்ல.......

பெருமூச்சுடன் மங்கை அவளிடம் இருந்து பார்வையைத் திருப்பினாள்.

''என்ன சாப்பாடு கொடுக்கலாம் டாக்டர்?''

''அவரால என்னென்ன சாப்பிட முடியுதோ அத்தனையும் கொடுங்க.''

''கால்கட்டு போடணும்னு நினைச்சேன்; கடைசி யிலே கடவுள் இப்படி என் பிள்ளைக்கு கால்கட்டு போட்டுட்டார்.''

அன்று மாலை கல்லூரியிலிருந்து நேரே வந்த சந்தியா, ப்ரீத்தி, கிருத்தி, சுமி, திவ்யா என இளம் பெண்களின் கூட்டமாய் இருந்தது மருத்துவமனையில். சந்தியா சுமியை திவ்யாவிற்கு அறிமுகப்படுத்தினாள். பின் திவ்யாவை, ''எங்க திவ்யா அண்ணி, கார்த்தி அண்ணாவை கல்யாணம் பண்ணிக்கப் போறாங்க.'' என அறிமுகப்படுத்தினாள். ப்ரீத்தி, கிருத்தி இருவரும் சுமியை ஆர்வமாக பார்த்தனர். சந்தியாவின் பார்வை சுமியையும் அர்விந்தையும் மாறி மாறி பார்த்தது. ப்ரீத்தியும், கிருத்தியும் புருவத்தை உயர்த்தி கண்களை அசைத்து புரிந்தது என்பது போல் சாடை செய்தனர். ''என்ன பரதநாட்டிய அபிநயங்கள் எல்லாம் இங்கே நடக்குது?''

''அர்விந்த் ஃபைலில் கையெழுத்து போடுங்க; நான் கிளம்பறேன்.''

''இரு, இரு சுமி! போகலாம். என் தங்கையின் நாட்டியத்தைப் பார்த்தாய்! அவர்கள் பாடுவதை கேட்க வேண்டாமா?''

''பாட்டா?''

''அவங்களுக்கு பிடிக்காதவங்களைப் பற்றி கேளேன்; நன்றாக பாடுவார்கள்.''

எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

''சே! சே! சின்னப் பெண்கள் தானே? ஏன் அப்படி சொல்கிறீர்கள்?''



''ஐயோ! இத்தனை பெண்கள் சேர்ந்து எங்க அண்ணனை என்ன பாடுபடுத்துறீங்க'' என்றவாறு கார்த்தி நுழைந்தான்.

''நல்லவேளை காப்பாற்ற வந்தாயடா தம்பி. சந்தியா, கிருத்தி, ப்ரீத்தியை வீட்டிலே விட்டுட்டு திவ்யாவையும் கொண்டு போய் வீட்டில் விட்டுட்டு வா.''

''அண்ணன் மனசு தம்பிக்கு தெரியாதா? இதோ கிளம்புகிறேன்.'' அனைவரும் விடைபெற்றனர். சற்று நேரத்தில் சுமியும் கிளம்பினாள்.

''நான் கால்சென்டருக்கு போகிறேன்.''

''தூங்காமல் உடம்பை கெடுத்துக் கொள்ளாதே.''

''சரியாய் தூக்கம் வரமாட்டேன் என்கிறது அர்விந்த். தன்னை மறந்து வேலையிலே மூழ்கிட்டா மனசு வருத்தமாவது குறையுமே.''

''ஏம்மா?'' கனிவுடன் கேட்டான்.

''அன்பான சொந்தங்களுடன் இருப்பது எத்தனை அருமை தெரியுமா? எனக்குத் தான் அதிர்ஷ்டம் இல்லை. உடன்பிறந்தவர், அன்பு அம்மா; அருமை அப்பா இப்படி ஒருவருமே இல்லாமல் போனார்கள்.''

''அதிர்ஷ்டத்தை நாமே உருவாக்கிக் கொள்வது தான் புத்திசாலித்தனம்; '' என்றான்.

அவனது பார்வை ''உனக்கு நான் இருக்கிறேன்'' என்று சொல்லாமல் சொன்னது.

# 17



திவ்யாவும், கார்த்திக்கும் தோட்டத்தில் நாற்காலிகளைப் போட்டு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''ரம்யா ஊருக்கு போயாச்சா?''

''மறுநாளே சித்தப்பா கொண்டு போய் மதுரையில் விட்டுட்டு வந்துட்டார்.''

''அத்தை மனசு மாறிடுச்சா?''

அன்று நடந்ததை அப்படியே சொன்னான்.

''நான் தான் அவசரப்பட்டுட்டேன். என் பிள்ளைக்கு பிடிக்காத விஷயத்தை செய்யப் போய் தானே இப்படி ஆகிவிட்டது?''

''வருத்தப்படாதே மங்கை. அம்மா கண்ணில் படாமல் இரு என்று நான் தான் யோசனை சொன்னேன்.''

''அம்மா நான் தான் அண்ணனுடைய டிரஸை அவன்கிட்டே கொண்டு போய் கொடுத்தேன்.''

''பெரியம்மா, நீங்க அம்மாவிடம் பேசினதை நானும், சந்தியாவும் அண்ணனிடம் சொன்னோம்.''



''அவன் என்கிட்டே வந்து சொன்னான். உடனே நான் இந்த யோசனைக் கூறினேன்.''

''சாந்தி, விஷயத்தை சொன்னதும் நான் அர்விந்த் கிட்டே பேசினேன். அவன் முதலில் ரம்யா மனசிலே என்ன இருக்குன்னு நாசுக்காய் விசாரிக்க சொன்னான். எனக்கு கூட ஆச்சரியம்! அவள் அர்விந்த் மேலே ஆசைப்பட்டால் என்ன செய்யறதுன்னு? ஆனால் அவள் இவனை வேண்டாம்னுட்டாள்.''

''என்கிட்டே பேசியிருக்கலாமே?''

''உன்னிடம் அவசரப்படாதேன்னு எச்சரித்தும் நீ தீவிரமாய் போய்கிட்டு இருந்தாய்.''

''ஆமாம்! அப்ப இருந்த மனநிலையில் எதுவும் எடுபடவில்லைதான். ஆனால் அன்னிக்கு ரேவதியோட பேசினதிற்கு பிறகு என் மனசு மாறிடுச்சு.''

''ரேவதியை உன்னிடம் பேச வைத்தது அர்விந்த்தின் ஏற்பாடு. மருத்துவ உண்மையை விளக்கினால் நீ ஒப்புக் கொள்வாய் என்று அவன் நிச்சயம் நம்பினான்.''

''என் புள்ளைதான் சரியாய் என்னை புரிஞ்சு வச்சிருக்கான். நீங்க தான் அவனுக்கு தப்புத்தப்பாய் வழிகாட்டிட்டீங்க, கடைசியிலே நான் தான் முட்டாளாய் இருந்திருக்கிறேன்.''

கார்த்திக் சொல்லி முடிக்க............

''நல்ல குடும்பம்'' என திவ்யா தோளை குலுக்கினாள்.

''எல்லா பூகம்பமும் முடிஞ்சு அர்விந்த் லைன் கிளியர் ஆயிடுச்சா?''

''நீ வேற? இன்னும் அத்தை சுனாமி பாக்கியிருக்கு.''

''அர்விந்த் எப்படியிருக்கிறார்?''

''ம். பரவாயில்லை. நாளைக்கு வீட்டிற்கு கூட்டி வந்துவிடுவோம். ஆனால் எலும்பு கூட இரண்டொரு மாசம் ஆகுமாம்.''

அவன் வருத்தத்தை மாற்றும் முயற்சியாய்,

''ஆபீஸை மாமா பார்க்க போறாங்களா?''

''ம். அண்ணன் கொடுத்து வச்சவன்; அவன் வேலை எல்லாம் அண்ணி என்னமாய் பார்க்கிறார்கள் தெரியுமா? நமக்கு நான் அந்த கொடுப்பினை இல்லை.''

''ஐயா! கிரிமினல்களை டீல் பண்றது நமக்கு சரிபடாது. வேண்டுமானால் உங்களை மாதிரி ஐ.பி.எஸ்ஸை டீல் பண்ணலாம்.''

''அது எனக்கே தெரியும்.''

''வார்த்தைக்கு வார்த்தை அண்ணி, அண்ணின்னு சொல்றீங்களே. அவங்க ரெண்டு பேரும் கல்யாணத்திற்கு தயாரா?''



''வெளிப்படையாய் அவங்க ரெண்டு பேரும் எதுவும் சொல்லலை. ஆனால் குலம், கோத்திரம் பார்க்காமல் நாங்க தயாராயிட்டோம்; சுமா தான் எங்க வீட்டு பெரிய மருமகள்னு.''

## 18



அர்விந்த் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகிக் கொண்டிருந்தான். சுமி,கார்த்தி தியானேஸ்வரன் உடனிருந்தனர்.

''வாக்கிங் ஸ்டிக் வாங்கிவிட்டீர்களா கார்த்திக்?''

''வாங்கிட்டேன் சுமா. காரில் இருக்கு.''

''சார்! நீங்க காரிலே ஏறுங்க. நாங்க அர்விந்தை கூட்டிட்டு வருகிறோம்.'' ''ஏம்மா! என்னை மட்டும் தூர விலக்கி வைக்கிறாய்!''

ஒரு கணம் தயங்கியவள்.

''அங்கிள்! என.

''இப்ப சரி! என்றவாறே காருக்கு செல்ல, கார்த்தி டாக்டரை பார்க்க நகர,

''சுமி! வீட்டிற்கு வருகிறாயா?''

''ப்ளீஸ், ஸாரி!'' அவன் வீட்டிற்கு செல்ல அவளுக்குள்

ஏதோ ஓர் தயக்கம்.

''ஆபீஸ் விஷயம் என்றால் அங்கிளிடம் சொல்கிறேன்.''

''அவர் ஆபீஸிற்கு வருவார்; அது கிடக்கட்டும்; எனக்கு போன் கூட செய்ய மாட்டாயா?''

''செய்யமாட்டேன் என்று சொன்னேனா?''

''சொல்லிப் பாரேன்.''

''உஷ்! உடம்பு பலகீனமாய் இருக்கும் போது இப்படித்தான் குழப்பமாயிருக்கும்.''

''உன்னை பார்க்காமல் நான் எப்படி இருப்பது?''

''செல்லில் என் போட்டோ வைத்திருக்கிறீர்களே! அதை பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றாள் சின்னச் சிரிப்போடு.

''ஏய்! எப்பொழுது பார்த்தாய் அதை?''

''நீங்க அடிப்பட்டு கிடந்த போதே உங்கள் குட்டும் உடைந்து போயிற்று.''

''புத்திசாலி பெண்ணிடம் ரொம்ப ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.''

''நன்றி.''

''எதற்கு?''

''புத்திசாலி என்றதற்கு.''



வீல் சேருடன் மருத்துவமனை பணியாளர்கள் வந்து விட்டார்கள்.

''அதற்குள் என்ன அவசரம்? பேசக்கூட விடமாட்டேன் என்கிறார்கள்.''

''ப்ச்! போதும் ப்ளீஸ்.''

அர்விந்த் புறப்பட அவனுக்கு கையசைத்து வழியனுப்பி விட்டு சுமனா புறப்பட்டாள். தினமும் காலையில் அர்விந்திற்கு போன் பேசிவிட்டு கிளம்புவாள். இரவில் அர்விந்த் பேசுவான். தியானேஸ்வரன் அலுவலகம் வந்ததும் முதல் கேள்வியாய் ''சாப்பிட்டாயா அம்மா?'' என்று கேட்பார்.

அவள் ஆச்சரியமாய் பார்க்க –

''அர்விந்த் உன்னை சரியாக சாப்பிடச் சொன்னான்.''

''சாஃப்ட்வேர், சென்ட்டரில்'' செய்ய வேண்டிய சின்ன மாற்றங்கள் குறித்து அவரிடம் தெரிவித்தாள்.

''காலையிலே போன் பண்ணி அவனிடம் அனுமதி கேட்டாயாம்; சொன்னான். உனக்கு இங்கு பணியாற்ற முழு சுதந்திரம் உண்டு. இதை அவனே உன்னிடம் சொல்லி இருக்கலாம். நான் என்ன நினைப்பேனோ என்று நீ தயங்கலாம் என்று தான் என்னை சொல்லச் சொன்னான்.''

மடமடவென காரியங்கள் நடந்தன. இரவு பகலாக கல்லூரி கட்டட வேலைத் தொடர்ந்தது. ஆர்க்கிடெக் மாணவி சந்தியா தன் அண்ணனுடன் வந்து

வேலையை கவனித்தாள். சிறு யோசனைகள் சொன்னாள்; சந்தேகங்களை தெளிவுப்படுத்திக் கொண்டாள்.

கார்த்திக் அர்விந்திடம் ஆச்சரியப்பட்டான்.

''சுமா சந்தியாவை பில்டிங் வேலையைப் பார்க்க கூட்டிப் போக சொன்ன பொழுது கூட அவளுக்கு என்ன தெரியும்? ஸ்டூடண்ட் தானேன்னு நினைச்சேன். அவளோட திறமை வெளியும் வந்தது; அவளுக்கு செய்முறை பயிற்சியும் கிடைத்தது.''

''பில்டிங் கட்ட பாங்கில் லோன் கேட்டு இருந்தோமே, என்னாச்சுன்னு போய் பார்த்தாயா?''

''சொத்து ஷூரிட்டி கேட்டாங்க.''

''அப்பா என்ன சொன்னார்?''

''வீட்டைத்தவிர மற்ற சொத்துக்களை ஷூரிட்டியா கொடுத்துட்டு வந்துட்டார். இன்னும் இரண்டு நாட்களில் பணம் வந்துடும்.''

''திவ்யா எப்படியிருக்கிறாள்?''

''ஒரு கேஸ் விஷயமாய் மும்பை போக வேண்டி உள்ளது. வந்த பிறகு திவ்யாவையும் அமெரிக்காவுக்கு ப்ளேன் ஏத்திவிட வேண்டியது தான்.''

''ஏன்டா? அவளுக்கு உன்னை விட்டுட்டு போக இஷ்டமில்லே போலிருக்கு? எனக்காக கல்யாணத்தை தள்ளி போடுகிறாயா?''



''ப்ச்! உனக்கு முன்னால் என்னால் கண்டிப்பாக திருமணம் செய்து கொள்ள முடியாது. மேலும் திவ்யா இங்கு வரும் முன் நம் சந்தியாவிற்கு ஏற்ற வரன் பார்க்க வேண்டும்.''

''அவளை ரொம்ப காக்க வைக்காதே.''

''இல்லை அண்ணா! இரண்டு வருடங்கள் அவளது இருபத்து மூன்றாவது வயதில் கட்டாயம் கல்யாணம் தான்.''

வெளியே அரவம் கேட்டது.

''யாருடா?''

''சுனாமி வந்துடுச்சு.''

''யாரு மீனாட்சி அத்தையா?'' என்றவன் எழ.

கார்த்திக் வாக்கிங் ஸ்டிக்கை எடுத்துக் கொடுத்தான்.

## 19



''இரண்டு அண்ணன்கள் இருந்து நான் அனாதை யாய் போயிட்டேன். அம்மா, அப்பா இருந்தா இப்படி விடுவாங்களா?''

''வா மீனா. ஏன் இப்படி புலம்புகிறாய்?''

''ஏன் இப்படி கேட்க மாட்டீங்க. நீங்க எல்லாம் இப்ப பெரிய ஆளாகி விட்டீர்கள். என்னை நினைப் பீங்களா? என் பொண்ணைப் பிடிக்குமா?''

''அது........''

''வேண்டாம்; யாரும் என்னை சமாதானப்படுத்த வேண்டாம். என் உறவை தலை மூழ்கிடுங்க. உறவு விட்டுடக் கூடாதுன்னு நான் மட்டும் ஆசைப்பட்டு என்ன பிரயோசனம்? உறவிலே பங்கு இல்லேன் னுட்டீங்க. எங்க அப்பா சொத்திலே இப்பவே என் பங்கை கொடுங்க.''

யாரையும் பேசவிடாமல் பேசிக் கொண்டே போக............

''அத்தை'' என அழைத்தவாறு அர்விந்த் வந்தான்.

அவன் காலை நொண்டியபடி வாக்கிங் ஸ்டிக் குடன் வருவதைப் பார்த்தாள்.

''ஐயோ! மருமகனே! உன் காலில் அடிபட்டதுப் பற்றி ஒரு நாதியும் சொல்லலையே. கோயம்புத் தூரிலிருந்து நேத்து தான் மதுரை வந்தேன். ரம்யா அப்பா சொன்னார்; ரம்யாகிட்டே கூட எதுவும் பேசலை. ஓடி வந்தேன். என் பொண்ணை வேணாம்னு சொல்லிட்டியே நியாயமா?''

''வாங்க அத்தை. முதலில் உட்காருங்க. என்ன சாப்பிடுறீங்க? ரொம்ப களைப்பாய் இருக்கீங்க.



முதலில் ஜூஸ் சாப்பிடுங்க. அப்புறம் நாம பேச லாம்.''

ஜூஸ் குடித்ததும்,

''அத்தை! முதலில் ரம்யாவுக்கு என்னை கல் யாணம் பண்ணிக் கொள்வதில் இஷ்டமில்லை. வேண்டுமானால் நீங்களே அவக்கிட்டே கேளுங்க.'' என தன் செல்போனில் நம்பர் போட்டுக் கொடுத் தான்.

'இது என்ன புதுக்கதை?'

''ஏண்டி! அத்தானை நீ கல்யாணம் பண்ணிக் கிறியா?''

''போம்மா! பெரிய அத்தான் சரியான முசுடு.''

ஸ்பீக்கரில் அவள் பதில் ஒலித்தது.

உடனே போனை 'கட்' பண்ணி அர்விந்திடம் கொடுத்தாள்.

''இதோ பாருங்க அத்தை! அப்பா உங்க பேர்ல சொத்து பிரிச்சு எழுதின பத்திரத்தை. இதை எழுதி ஏறக்குறைய பத்து வருடமாகிறது. வேண்டுமானால் சித்தப்பாவை கேட்டு பாருங்கள். இந்த சொத்தின் மூலம் வந்த வருமானம் உங்கள் பெயரில் வங்கியில் இருக்கிறது. பாஸ்புக் இதோ.''

''அண்ணே! என்ன இது? நான் கோபத்தில் ஏதோ கேட்டால்.... இப்படி சொத்தைப்பிரித்து என்னை

ஒதுக்குகிறீர்கள்? உங்க அன்பிலே தான் பங்கு வேண்டும். உறவை முறிச்சிடாதீங்க.''

''என்னிக்கும் நீங்க எங்கள் அருமை அத்தை தான். இது உங்களுக்கு சேர வேண்டிய பங்கு. தாத்தா இருந்தாலும் இதைத்தான் சொல்லுவார். ரம்யா கல்யாண சமயத்தில் தரலாம்னு அப்பா இருந்தார்.''

''ஆமாம் அம்மா! நெருங்கிய உறவிலே கல்யாணம் கூடாதுன்னு டாக்டர் சொல்றார். ரம்யாவுக்கு இவன் மேல் விருப்பம் இல்லை. வேறு நல்ல மாப்பிள்ளை பார்க்கலாம்.''

''சரி அண்ணே! நீங்க பார்த்து எது பண்ணினாலும் சரி.''

''எப்படி அண்ணா! சுனாமியை சமாளித்தாய்?'' என கிசுகிசுத்தான்.

''எல்லா மனிதரும் அங்கீகாரத்துக்கு ஏங்கறவங்க தான். அவங்களுக்கு உரிய அங்கீகாரத்தைக் கொடுத்தால் ஏறக்குறைய பிரச்சனை வரவே சான்ஸ் இருக்காது என்கிற சின்ன சைக்காலஜி தான்.''

''எல்லாம் சரி! உன் ஆளோட சைக்காலஜியை புரிந்து கொண்டாயா?''

''அவளுக்கு என் மேல் விருப்பம் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் அவள் சரியாக இன்னும் கொஞ்சம் நாள் காத்திருக்கத் தான் வேண்டும்.''



# 20



காலில் பைபர் கட்டுடன், ஸ்டிக்கின் துணையுடன் அன்று அர்விந்த் சாஃப்ட்வேர் சென்டருக்கு சென்றிருந்தான்.

'இடம் மாறி வந்து விட்டோமா?' என்ற அளவிற்கு சூழலே மாறி இருந்தது. பூங்காவை போன்று பச்சை புல்வெளியும் (Land scaping) லேண்ட் - ஸ்கேப்பிங்குமாய் அழகாய் காட்சி அளித்தது. கீழ்த்தளத்தில் பார்க்கிங் பகுதிக்கு இடதுபுறத்தில் சற்று விசாலமான இடத்தில் மென்மையான இசையொலியுடன் கூடிய யோகா பயிற்சித்தளம் அமைக்கப்பட்டிருந்தது.

மேல்தளத்தில் கேண்ட்டீனும், ஷாப்பிங்கிற்காக ரெடிமேட் அண்ட் காஸ்மெட்டிக் பொருள்கள் கொண்ட கடையும் அமைக்கப்பட்டிருந்தது.

மாற்றங்களை ரசித்து மெலிதாய் விசலடித்தான்.

'வாரே வாவ்! அசத்திட்டே சுமி.'

எதிரே சுமனா வந்தாள். ஆள் சற்று மெலிந்திருந்தாள். கிட்டத்தட்ட இரண்டு மாதம் ஆகிவிட்டது அவளைப் பார்த்து.

அவளைப் பார்த்துக் கொண்டே நின்றான். ''கால் எப்படியிருக்கிறது?''

''அதை மட்டும் தான் விசாரிப்பாயா?'' ஒன்றும் சொல்லாமல் அவனைப் பார்த்தாள். அவனும் மெலிந்திருந்தான்.

''பிஸியோதெரப்பிஸ்ட் சொல்ற பயிற்சி எல்லாம் ஒழுங்காக செய்கிறீர்களா? ஏதாவது முன்னேற்றம் தெரிகிறதா?''

''முன்னேற்றம் தெரிய வேண்டிய இடத்தில் ஒன்றும் தெரியவில்லை.''

''என்ன அர்விந்த் இது?''

அதற்குள் தியானேஸ்வரன் வந்துவிட்டார்.

''தம்பி! மினிஸ்ட்டரை பார்க்கும் தேதி தள்ளிப் போனது நல்லதா போச்சு. அதற்குள் உன் கால்கட்டை பிரித்து விடுவார்கள்.''

''அப்பா! காலேஜ் கட்டடத்திற்கு பெயிண்டிங் வேலை முடிந்து விட்டதா?''

''அதைத்தான் பார்க்கப் போகிறேன். நீ இங்கேயும் அங்கேயும் அலையாதே. சீக்கிரம் வேலை முடித்து வீட்டிற்குத் திரும்பு.''

''அப்பா நீங்க என் காரில் போங்க. நான் சுமியுடன் வீட்டிற்கு வருகிறேன்.'' அவர் கிளம்ப.

'என்ன வம்பு இது?' என்பது போல் அவனை பார்த்தாள்.



''வம்பு இல்லேம்மா! சிறு உதவி! அப்பாவோட கார் சர்வீஸிற்கு போயிருக்கு. அவர் பி.பி பேஷண்ட்; அதான் நான் வந்த காரில் அனுப்பிட்டேன். ஏன் நீ எனக்கு லிஃப்ட் தரமாட்டாயா?''

'வீட்டிற்கு வரவழைக்க இப்படியொரு திருட்டுத் தனமா?' என எண்ணிக் கொண்டாள். அவர்கள் கிளம்பும் முன் வீட்டிலிருந்து போன் வந்தது. ''அர்விந்த் இன்னும் நீ கிளம்பலையா? அப்பாவும், நானும் சின்ன மாமா வீட்டு வரவேற்பிற்கு போகிறோம்.''

''நீங்க போங்கம்மா! எனக்கு கொஞ்சம் வேலை இருக்கிறது. முடித்துவிட்டு வருகிறேன்.''

''சரி! அர்விந்த் கிளம்புங்க! உங்களை வீட்டு வாசலில் இறக்கிவிட்டுட்டு நான் போயிடுவேன்.''

''நீ வரவேண்டாம். நான் ஆட்டோ பிடித்து போய் கொள்கிறேன்.''

''அதற்குள் கோபமா?''

''வாசல்வரை வருபவர்கள் வீட்டினுள் வந்தால் தேய்ந்து போய்விடுமா?''

''அப்பா! என்ன கோபம்!''

''உன்னிடம் கோபம் காண்பிக்கும் ஆசை எனக்கும் இல்லை.''

இருவரும் கிளம்பினர். வீட்டில் இறங்கிய போது,

சாந்தி பதறிப் போய் ஓடிவந்தாள்.

"அரவிந்த்! கிருத்தியை காணலை."

21



"என்ன சித்தி. சொல்றீங்க? ப்ரீத்தி எங்கே? கிருத்தி என்ன சின்னக் குழந்தையா? பத்தாம் வகுப்பு படிக்கிறா; ஸ்பெஷல் க்ளாஸ் இருக்கும்."

"ஐயோ! ப்ரீத்தி மட்டும் வந்துட்டா! கிருத்தியை ஸ்கூல்ல எங்கேயும் காணலையாம். வீட்டுக்கு வந்திருப்பான்னு நினைச்சுக்கிட்டு இவ வந்திட்டான்."

"வாங்க உள்ளே போய் பேசலாம்."

"ரெண்டு பேரும் சேர்ந்து தானே வருவீங்க" என உள்ளே அழுது கொண்டிருந்த ப்ரீத்தியிடம் கேட்டான்.

"ஆமாம் அண்ணா. இன்னிக்கு தலையை வலிக்குதுன்னு சொன்னா. கண் எல்லாம் அழுத மாதிரி சிவந்து இருந்தது. காலையிலே வீட்டிலேயே அவ சரியில்லை அண்ணா."



"உடம்பு சரியில்லை என்றால் அம்மா கிட்ட... என்னிடமாவது சொல்ல வேண்டியது தானே?"

"கிருத்தி அழுத்தக்காரி. எதுவும் சொல்ல வேணாம்னு என்னை இழுத்துக்கிட்டு போயிட்டா."

"ஸ்கூல்லே நீ எப்ப அவளை பார்த்தே?"

"மார்ச் பிரேக்கில் பார்த்தேன். அவள் டிபன் பாக்ஸை என் பேக்கிலே வச்சுக் கொடுத்துட்டு போனாள். சாயந்திரம் ஸ்கூல் விட்டதும் அவளைத் தேடினேன். காணலை."

அதற்குள் அவள் டிபன் பாக்ஸை திறந்து பார்த்த சாந்தி.

"ஐயோ! மோசம் பண்ணிட்டாளே" என தலையிலடித்துக் கொள்ள, கபி பதறி அருகே ஓடினான்.

துண்டு காகிதத்தில், "நான் போகிறேன்; என்னைத் தேட வேண்டாம்" என எழுதி இருந்தது.

"குடும்ப மானத்தை வாங்கிட்டாளே! சுவேதா... ஓடினாளோ? நான் உயிரை விட்டுடுவேன்."

"ப்ளீஸ் ஆண்ட்டி! பதட்டப்படாதீங்க! என்ன விஷயம் என்று தெரியாமல் எந்த முடிவும் எடுக்கா... தீங்க! அவசரம் வேண்டாம்."

"ஏண்டி! ஆட்டோவில் போனபோது யாரோ... ஒருத்தன் வண்டியிலே தொடர்ந்து வந்தான்னு சொ... னியே! அவன் கூட அவ ஏதாவது பேசினாளா?"

சாந்தி பதறிப் போய் ஓடிவந்தாள்.

''அர்விந்த்! கிருத்தியை காணலை.''

## 21



''என்ன சித்தி, சொல்றீங்க? ப்ரீத்தி எங்க? கிருத்தி என்ன சின்னக் குழந்தையா? பத்தாம் வகுப்பு படிக்கிறா; ஸ்பெஷல் க்ளாஸ் இருக்கும்.''

''ஐயோ! ப்ரீத்தி மட்டும் வந்துட்டா! கிருத்தியை ஸ்கூல்ல எங்கேயும் காணலையாம். வீட்டிற்கு வந்திருப்பான்னு நினைச்சுக்கிட்டு இவ வந்திட்டாள்.''

''வாங்க உள்ளே போய் பேசலாம்.''

''ரெண்டு பேரும் சேர்ந்து தானே வருவீங்க'' என உள்ளே அழுது கொண்டிருந்த ப்ரீத்தியிடம் கேட்டான்.

''ஆமாம் அண்ணா. இன்னிக்கு தலையை வலிக்குதுன்னு சொன்னா. கண் எல்லாம் அழுத மாதிரி சிவந்து இருந்தது. காலையிலே வீட்டிலேயே அவ சரியில்லை அண்ணா.''



''உடம்பு சரியில்லை என்றால் அம்மா கிட்டயாவது, என்னிடமாவது சொல்ல வேண்டியது தானே?''

''கிருத்தி அழுத்தக்காரி, எதுவும் சொல்ல வேணாம்னு என்னை இழுத்துக்கிட்டு போயிட்டா.''

''ஸ்கூல்ல நீ எப்ப அவளை பார்த்தாய்?''

''லஞ்ச் - பிரேக்கில் பார்த்தேன். அவள் டிபன் பாக்ஸை என் பேக்கிலே வச்சுக்க சொல்லி கொடுத்துட்டு போனாள். சாயந்திரம் ஸ்கூல் விட்டதும் அவளைத் தேடினேன். காணலை.''

அதற்குள் அவள் டிபன் பாக்ஸை திறந்து பார்த்த சாந்தி,

''ஐயோ! மோசம் பண்ணிட்டாளே'' என தலையிலடித்துக் கொள்ள, சுமி பதறி அருகே ஓடினாள்.

துண்டு காகிதத்தில், ''நான் போகிறேன்; என்னைத் தேட வேண்டாம்'' என எழுதி இருந்தது.

''குடும்ப மானத்தை வாங்கிட்டாளே! எவனோட ஓடினாளோ? நான் உயிரை விட்டுடுரேன்.''

''ப்ளீஸ் ஆன்ட்டி! பதட்டப்படாதீங்க! என்ன விஷயம் என்று தெரியாமல் எந்த முடிவும் எடுக்காதீர்கள்! அவசரம் வேண்டாம்.''

''எண்டி! ஆட்டோவில் போனபோது யாரோ ஒருத்தன் வண்டியிலே தொடர்ந்து வந்தான்னு சொன்னியே! அவன் கூட அவ ஏதாவது பேசினாளாடி?''

"ஏம்மா இப்படி பழி போடறே? ஆட்டோ டிரைவர் அப்பவே அவனை அடிச்சு விரட்டிட்டார். கிருத்தி வாயை திறந்து பேசமாட்டாளே தவிர, தப்பு எல்லாம் செய்ய மாட்டாம்மா."

"அப்படித்தானே நம்பினேன். இப்படி என் தலையிலே கல்லைத் தூக்கி போட்டுட்டாளே!"

"சித்தப்பா எங்க சித்தி?"

"ஐயோ! அவர் முகத்தில் எப்படி விழிப்பேன்! பொண்ணை வளர்த்து வச்சிருக்கிற இலட்சணத்தை பாருன்னு துப்புவாரே."

"இருங்க! அர்விந்த், கார்த்தி நம்பர் சொல்லுங்க" கார்த்தியிடம் தெளிவாய் விஷயத்தை சொன்னாள். பிறகு

"ப்ரீத்தி! கிருத்தி ப்ரெண்டு யாராவது தெரியுமா?"

"ம்! தெரியும்."

"நீங்க இங்கேயே இருங்க அர்விந்த். வா ப்ரீத்தி என் கூட" என கிளம்பியவள்,

"சித்தியை கவனமாய் பார்த்துக் கொள்ளுங்கள். அவங்க உணர்ச்சிவசப்பட்டு இருக்காங்க;" என மெதுவாய் அவனிடம் கூறிவிட்டே புறப்பட்டாள்.

"இங்கே பாரு ப்ரீத்தி! இப்ப நாம எதேச்சையாய் அவ ப்ரெண்டு வீட்டுக்கு போறோம். எதையும்



முகத்திலே காண்பிக்காதே. நான் சொல்ற மாதிரி பேசு. கடைவீதிக்கு வந்தோம். பக்கத்திலே தான் உங்க வீடு இருக்குன்னு கிருத்தி சொன்னாள். உங்ககிட்டே இருந்து டயக்ராம் நோட்டு வாங்கிட்டு வரச்சொன்னாள்னு சொல்லு."

இருவரும் நேரே அவள் வீட்டிற்கு சென்றனர்.

பானு ஓடிவந்து வரவேற்றாள். சுமி சொல்லியதை ப்ரீத்தி அப்படியே ஒப்பிக்க, "ஏன் கிருத்தியையும் கூட்டி வரலை?" என பானு கேட்டாள்.

"அவளுக்கு காய்ச்சல்."

"ஆமாம்! நேத்திக்கு மேக்ஸ் மார்க் கொடுத்த திலிருந்து அவளுக்கு ஒரே அழுகை. இன்னிக்கு சாயந்திரம் கூட ஸ்கூல்லேயிருந்து லேட்டா தான் கிளம்பினா."

"சரிம்மா! நீ நோட்டுக்கை கொடு. இன்னொரு நாளைக்கு அவளையும் அழைச்சுக்கிட்டு வரு கிறோம்."

கிளம்பினர். "கிருத்திக்கு இந்த ஊர்ல எந்தெந் இடம் தெரியும்?"

"ஒண்ணும் தெரியாது; வீடு, ஸ்கூல் மட்டும் தா தெரியும்."

"ஆட்டோ வரும் வழியில் ஏதாவது முக்கிய பார்த்திருக்கிறீர்களா?"

''ஒரு பார்க் பார்த்தோம். அங்கே ஒருநாளைக்கு போகவேண்டும் என்று நினைத்தோம்.''

செல்லின் மூலம் கார்த்திக்கை தொடர்பு கொண்டாள்.

''மருந்து கடையில் நின்றாளா?'' என்றவள்,

''சீக்கிரம் இந்த இடத்திற்கு போய் பாருங்கள்,'' என்றாள்.

## 22



அர்விந்த் போன் பேசிக்கொண்டிருந்தான், ''சரி! வீட்டுக்கு கூட்டிட்டு வாங்க. நான் பார்த்துக்கறேன்.''

சித்தி, சித்தப்பா, சந்தியா , ப்ரீத்தி, அம்மா, அப்பா எல்லாரும் கவலையுடன் அவனைப் பார்த்தனர்.

''கிருத்தி வீட்டிற்கு வருகிறாள்; பத்திரமாய் இருக்கிறாள்; கவலைப்படாதீர்கள் சித்தி.''

''என்னாச்சு அவளுக்கு? எங்கே போனாள்?''

''நடந்து முடிந்த தேர்வில் கணக்கு பாடத்தில் தேர்ச்சி பெறவில்லை. அதனால் நாம் திட்டுவோம்



என்று தற்கொலைக்கு முயற்சி செய்திருக்கிறாள். நல்லவேளை காப்பாற்றி ஆகிவிட்டது.''

'கடவுளே பயந்தபடி ஏதுமில்லை!' என்று தன்னையறியாமல் நிம்மதி மூச்சுவிட்டாள் சாந்தி.

''யாரும் கிருத்திகிட்டே இதைப் பற்றி பேசவேண்டாம். இயல்பாய் இருங்கள்.''

வீட்டிற்குள் நுழைந்த கிருத்தி, ''அம்மா'' என்று ஓடிப்போய் அவள் இடுப்பைக் கட்டிக் கொண்டாள். சாந்தியின் கண்களிலும் கண்ணீர் வழிந்தது. 'நீ எங்களுக்கு முக்கியம்' என்பதை கலங்கிய எல்லார் கண்களும் நிரூபித்தன. மறுநாள் அர்விந்த் அவளை அழைத்துக் கொண்டு உலாவப் போனான். ''கிருத்தி! ஏம்மா இப்படி பண்ணினே? நீ இல்லாமல் எங்களால் இருக்க முடியுமா?''

''மன்னிச்சுடுங்க அண்ணா! நான் படிச்சு நல்ல மார்க் வாங்க வேண்டும் என்று நீங்க எல்லாரும் எதிர்பார்க்கும் பொழுது.... நான் மோசமாய் வாங்கியது தான் தாங்கவில்லை.''

''படிப்பு மட்டும் வாழ்க்கையில்லை. மற்ற பாடங்களில் நல்ல மதிப்பெண் பெறும் பொழுது ஏன் கணிதத்தில் மட்டும் பெற முடியவில்லை? அதில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அவ்வளவு தான். தோல்வி வருவது எதற்கு தெரியுமா? கவனத்தையும், பயிற்சியையும் பற் நாம் அறிந்து கொள்ளத்தான் வருகிறது.''

''தோற்றால் எல்லாரும் ஏளனம் செய்வார்களே?''

''ஜெயித்தாலும் பொறாமைப்படுவார்கள். அதனால் மற்றவர்களைப் பற்றி கவலைப்படாதே. நீ நேர்வழியில் நல்லவற்றை தொடர்ந்து செய். வெற்றி தானே உன்னை தேடிவரும். வாழ்க்கையில் தோற்காமல் ஜெயித்துக் கொண்டே வந்தால் சின்ன தோல்வி வந்தால் கூட தாங்கிக் கொள்ள முடியாது. வெற்றியை விட தோல்வி தான் நமக்கு நிறைய பாடங்களை கற்றுக் கொடுக்கும்.''

''ஆமாம் அண்ணா! எல்லாரும் என்மேல் எவ்வளவு ப்ரியம் வச்சிருக்காங்கன்னு தெரிஞ்சுகிட்டேன்.''

''மற்றவர்களின் தோல்வியை கூர்ந்து கவனிக்க வேண்டும். ஏன் அவர்கள் தோற்றுப் போனார்கள்? அவர்கள் செய்த தப்பென்ன என்று உணர்ந்து நாம் கவனமாய் இருந்தால் வெற்றியை அடையலாம்.''

''நாளையிலிருந்து உனக்கு கணக்கு சொல்லித்தர ஒரு டீச்சர் வருவாங்க.''

''இனி கவனமாய் படிப்பேன்.''

''நீ கவனமாய் படிப்பாய் என்று எங்களுக்கு தெரியும். உன் முழு முயற்சியையும் படிப்பில் செலுத்து. ஆனால் விளைவைப் பற்றி சிந்திக்காதே. நீ என்ன மதிப்பெண் எடுத்தாலும் நாங்கள் சந்தோஷப்படுவோம். அதனால் மனதில் சுமையை ஏற்றிக் கொள்ளாதே.''



''அண்ணா ரொம்ப தேங்க்ஸ்.''

''அண்ணாவுக்கு நன்றி சொல்லக் கூடாது.''

''அப்ப 'சுமா' அண்ணிக்கு தேங்க்ஸ் சொல்லிடுங்க.''

''கட்டாயம் சொல்ல வேண்டும். அவள் தான் உன் விஷயத்தில் பதட்டப்படாமல் செயல்பட்டாள்.''

அவன் சொல்லிக் கொண்டிருந்த பொழுது எதிரே சுமி வந்தாள்.

## 23



''பிறக்கும் போதே நமக்கு எல்லா விஷயங்களும் தெரியதில்லை. முயற்சி செய்ய செய்யத்தான் நிறைய விஷயங்களைக் கத்துக்க முடியும்'' என்றாள் சுமி கிருத்தியிடம்.

''சுமி கூட அப்படித்தான்'' என சீண்டினான்.

''உண்மை தான். வாழ்க்கை முழுவதும் கற்றுக் கொள்ள ஏராளமான விஷயங்கள் உள்ளன. நம்மால் சமுதாயத்திற்கும் ஏதாவது பயன் இருக்க வேண்டும். அர்விந்த் நம்ம கம்பெனி சார்பாய் சமூக விளம்பரங்கள் வெளியிடலாமே?''

"பார்த்தாயா? தனிப்பட்ட விஷயம் பேசத்துவங்கினால் ஆபீஸ் விஷயத்திற்கு போய்விட்டால். இவள் இப்படித்தான்." என்று தோளை குலுக்கிக் கொண்டான்.

"நீயே எதைப் பற்றி விளம்பரம் செய்யலாம் என முடிவு செய். அப்புறம் காலேஜ் பில்டிங்கை பார்வையிட அதிகாரிகள் வருவார்கள். அவர்களுக்கு நீதான் எல்லாவற்றையும் விளக்க வேண்டும். கல்லூரி திறப்பு விழாவிற்கு தேதி வாங்க மந்திரியை நான் பார்க்க போக வேண்டும்."

"ம்."

"சுமி"! இன்னொரு குட் நியூஸ்."

"ரம்யாவிற்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்கிறது."

"ஐ! அண்ணா! என் கிட்டே யாரும் சொல்லலையே?"

"ம்! உன்னை விட முக்கியமானவங்க அதை தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டலையே?"

"இந்த விஷயம் எனக்கு முன்பே தெரியும் அர்விந்த்."

"யார் சொன்னது? ரம்யாவா?"

"ம். என்னுடன் இரண்டு முறை பேசினாள். நீங்க அவளிடம் விட்டேற்றியாக நடந்து கொண்டதைப் பற்றி புகார் கூறினாள்."



"அதிருக்கட்டும். மாப்பிள்ளைப் பற்றி என்ன சொன்னாள்."

"ஹைகோர்ட் லாயர்; ரொம்ப பிடித்திருப்பதாகச் சொன்னாள்."

"நல்லவேளை நான் தப்பிச்சேன்!"

"அவள் அல்லவா உங்களிடமிருந்து தப்பியதாகக் கூறினாள்."

"அப்படிப் போடு" என்றவன் வாய்விட்டுச் சிரித்தான்.

மறுநாள் அலுவலகத்திற்கு வந்த அர்விந்திடம் சமூக விளம்பரத்திற்கான வாசகங்கள், விளம்பர அமைப்பு போன்றவற்றுடன் வரவேற்றாள் சுமி.

"கண் தானத்தை அறிவுறுத்தி சமூக விழிப்புணர்வு விளம்பரம் கொடுக்கலாம் அர்விந்த்."

"விழியெனும் ஒளியால் வாழ்விற்கு வழி காட்டுவோம்."

"மண்ணுக்கு தருவதை மனிதனுக்குத் தருவோம்."

வாசகங்களை வாய்விட்டுப் படித்தாள்.

"அற்புதம்"!

"ஒன்றை பத்திரிகைகளில் விளம்பரம் செய்வோம். மற்றொன்றை விளம்பர போர்டாக மக்கள் கூடும் இடங்களில் வைப்போம்."

தன்னுடைய லாப்-டாப்பில் விடுவிடெ பட்டனைத் தட்டினான். வேண்டிய விவரங்களை

பெற்றதும். விளம்பரம் தயாரிக்க ஆட்களை ஏற்பாடு செய்தான்.

வந்தவர்களுடன் சுமி விவாதித்து கலை நுணுக்கம் கெடாமல் கதை போல் சுவாரஸ்யமாய் கருத்தை தெளிவாய் படம்பிடிக்க உதவினாள். அவளுடைய செயல்களை கைகட்டிக் கொண்டு மேசை மீது சாய்ந்தவாறு பார்த்துக் கொண்டிருந்தான். எல்லாரும் அவளை பாராட்ட.... அவர்கள் சென்ற பிறகு நிதானமாய் சுமியிடம் கேட்டான்; ''சுமி! இப்பவாவது சொல்லேன்; நீ என்னதான் படித்திருக்கிறாய்?''

''ஒன்றும் பெரிய படிப்பில்லை.''

''பரவாயில்லை. என்மேல் நம்பிக்கை உண்டென்றால் சொல்லலாம்.''

''உங்களிடம் மறைக்கும் எண்ணமில்லை'' என்றவள் மெதுவாய் சொன்னாள் ''பி.இ, எம்.பி.ஏ'' என்று.

## 24



கல்லூரி திறப்புவிழாவிற்கான அழைப்பிதழ்கள் வந்திருந்தன. வாழையிலை போன்ற அமைப்பில் அது இருந்தது. யார் யாருக்கு அனுப்ப வேண்டும் என்று விழா பொறுப்பாளரிடம் சுமி சொல்லிக்



கொண்டிருந்தாள். அர்விந்த் மந்திரியை சந்தித்த பிறகு, அப்படியே லண்டன் kpo சாஃப்ட்வேர் அலுவலகத்தை பார்வையிட சென்றுவிட்டான். அவனுக்கு எப்படி சுமி மேல் மிகுந்த மதிப்போ, அதே போல் அவளுக்கும் அவன் திறமை மேல் மிகுந்த மதிப்பு ஏற்பட்டிருந்தது.

எல்லா சாஃப்ட்வேர் அலுவலகங்களும் அமெரிக்காவை மட்டும் நம்பி முதலீடு செய்திருந்தன. ஆனால் அர்விந்தின் சாஃப்ட்வேர் நிறுவனம் அமெரிக்காவை மட்டும் நம்பியிராமல் லண்டன், ஜப்பான் போன்ற நாடுகளுடன் தொழில் தொடர்பு கொண்டிருந்தன.

அதனால் டாலர் மதிப்பு வீழ்ச்சியுற்று மற்ற நிறுவனங்கள் நஷ்டத்தை ஈடுகட்ட ஆட்குறைப்பு நடவடிக்கையில் இறங்கிய போதும்; இவன் நிறுவனத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. டாலரின் வீழ்ச்சியால் ஏற்பட்ட பாதிப்பை ''யூரோவும்'', ''யென்னும்'' சரிகட்டின. அவனது முன்யோசனையும், தொழில் ஈடுபாடும் பெருமதிப்பை அவள் மனத்தில் ஏற்படுத்தி இருந்தது. திறமையுடன், அவனிடம் நேர்மையும் இருந்தது. எதைச் செய்தாலும் அதை நேரான வழியில் செய்ய வேண்டும் என்பதில் அவன் மிக உறுதியாய் இருந்தான்.

எனவே தொழில் வட்டாரத்தில் நாணயமானவர்க அனைவரும் அவனையே நாடி வந்தனர். முன்பெ லாம் தொழில் விஷயமாக அவன் வெளிநா

செல்லும் பொழுதெல்லாம் அவன் தந்தை தான் வந்து இங்கிருக்கும் நிறுவனங்களைப் பார்த்துக் கொண்டார். இப்பொழுது சுமியிடமே முழு பொறுப்பையும் அவன் நிம்மதியாய் ஒப்படைத்துவிட்டு சென்றான்.

அவன் எதிர்பார்ப்பையெல்லாம் ஈடு செய்யும் விதமாக சுமியின் வேலை இருந்தது. ஏன் ஆச்சரியத்தையும், பெருமிதத்தையும் கூட அவனுக்கு ஏற்படுத்தியது.

சுமியின் தொழில் திறமையை நேரே கண்டபிறகு இங்கிருக்கும் நிறுவனங்களின் முழு பொறுப்பையும் அவளது நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்துவிட்டான். அவ்வப்போது ஆலோசனை சொல்வதும், மேற்பார்வையிடுவதும் ஆக இருந்தான்.

வேலை பளு குறையவும் வெளிநாட்டு நிறுவனங்களை விஸ்தரிப்பு செய்வது பற்றி அவனால் நன்கு ஆலோசனை செய்ய முடிந்தது. இலண்டனுக்கு சென்றவன் அங்கிருந்து இணையதளத்தின் மூலம் அவளை தொடர்பு கொண்டான்.

''நாம் நம்முடைய பிளேயர்களை பி.டி எனப்படும் புளூ ரே டிஸ்க் பிளேயரில் வெளியிடலாம். நீல நிற லேசர் கதிர்கள் சிவப்பு நிற லேசர் கதிர்களை விட வேவ் லென்த் குறைவு. மிகத்துல்லியமாய், பார்க்கவும், கேட்கவும் உதவும். என்ன சொல்கிறாய்?''

''பண்ணலாம் அர்விந்த்! சிங்கிள் லேயர் புளூ லேசர் டிஸ்கில் 25gb வரை தகவல்களை பதிவு



செய்யலாம். அதுவும் தரமும் நன்றாக இருக்கும். சாதாரண டிஸ்க்குகளை விட இது பல மடங்கு அதிகம். விலையில் கூட மிகப் பெரிய வித்தியாசம் இல்லாமல் குறைந்த விலைக்கே கொடுக்கலாம்.''

''இது தான் சுமி! நான் மிகவும் அதிர்ஷ்டக்காரன்.''

''அப்புறம்; ரொம்ப அலைய வேண்டாம். காலில் கொஞ்சம் கவனம் வையுங்கள்.''

''உத்தரவு! உனக்கொரு ரகசியம் வைத்திருக்கிறேன்.''

''என்ன?''

''அதை நேரில்தான் சொல்ல வேண்டும். பை''

அவனுடன் பேசிவிட்டு திரும்பிய போது கார்த்திக் வந்து நின்றான் பதட்டத்தோடு.

## 25



''என்ன கார்த்திக்? ஏதாவது பிரச்சனையா?''

''சுமா! இதைப் பாரேன்!''- அது ஒரு வக்கீல் நோட்டீஸ். அதைப் படித்த சுமியும் பதட்டமானாள். ''இது எப்படி சாத்தியம்? இது உண்மையா? உனக்கு எப்படி கிடைத்தது கார்த்திக்?''

''கூரியரில் வந்தது. வரும் வழியில் வாங்கி வந்தேன்.''

''சரி! இது உண்மைதானா என்று விசாரிக்க வேண்டும்.''

''வரும்பொழுதே விசாரித்து விட்டேன். இந்த நோட்டீஸ் உண்மைதான். அர்விந்திடம் சொல்லி விடலாமா?''

''இரு! முதலில் அங்கிளைப் பார்ப்போம். பிறகு என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம்.''

இருவரும் வீட்டிற்கு கிளம்பினர். அவர்கள் வீட்டை அடைந்த பொழுது தியானேஸ்வரன் வீட்டில்தான் இருந்தார். அவரிடம் வக்கீல் நோட்டீசை காட்டினார்கள். படித்தவர் அதிர்ந்து போனார்.

''என்னடா தம்பி! இப்ப என்ன செய்யறது? அர்விந்த் வேறு ஊரில் இல்லை.''

''ஏம்பா! நீங்க தானே பட்டா, சிட்டா, யூ.டி.ஆர் எல்லாம் பார்த்தது?''

''ஆமாம்பா! கல்யாண மண்டபம் பக்கத்திலே இடம் வருதுன்னு அர்விந்த் கிட்டே சொன்னது நான் தான். அவன் காலேஜ் கட்டணும்னு சொன்னப்ப சிட்டா, யூ டி ஆர் எல்லாம் நான் தான் பார்த்துக்கிட்டு வந்தேன்.

''பட்டாவை பார்த்தீங்களா அப்பா.''



''ஐயோ! இல்லையே! அவன் அது ஊரிலிருந்து கொண்டு வரணும்னு சொன்னதை நம்பிட்டேன்; அது கை மாறி போச்சு வாங்கித்தரேன் அப்படி இப்படின்னு சொன்னானே!''

''அது தான் அப்பா தப்பாயிடுச்சு! கல்யாண மண்டபத்திற்கு பக்கத்தில் இருந்த நிலம் வக்கீல் நோட்டீஸ் அனுப்பி இருக்கும் ஆளுடையது. பட்டா எல்லாம் அவர் பேரில் தான் இருக்கிறது.''

''ஆண்டவா! காலேஜ் திறப்பு விழாவிற்கு தேதி குறிச்சு அழைப்பிதழ் எல்லாம் அனுப்பியாச்சு. இன்னும் ஒரு வாரத்தில் என்ன செய்வது? மந்திரி வேறு வருகிறாரே?''

''இப்படி பிரச்சனை என்று தெரிந்தால் படிப்பதற்குக் கூட யாரும் வரமாட்டார்களே.''

அவர்கள் பேசிக் கொண்டிருந்த பதட்டத்தைப் பார்த்து வீட்டிலிருந்த அனைவரும் ஹாலில் கூடி விட்டனர். சிவகுரு விஷயம் தெரிந்ததும் பதறினார்.

''மானம், மரியாதையெல்லாம் போச்சே! கோர்ட்டுக்கு கேஸ் போனால் நம்ம பேரு கெட்டுப் போயிடுமே!''

ஆளாளுக்கு புலம்ப,

என்ன செய்வது என்று தடுமாறினார்கள்; தவி
தார்கள். அங்கே நிலவும் பதட்டமான சூழ்நிலை
சுமி கவனித்தாள். சிக்கலை எப்படியாவது விடுவி
வேண்டும்; குறிப்பிட்ட தேதியில் கல்லூரி

திறந்து விட வேண்டும். கார்த்திக்கை மெதுவாக அழைத்தாள். ''சம்பந்தப்பட்ட ஆள்கிட்டேயே நேரில் நாம் பேசிப் பார்த்தால் என்ன?''

''யாரிடம் சுமா?''

''கேஸ் போட்டிருக்கும் ஆளிடமே போய் பேசுவோமே.''

''ஏதாவது செய்து தான் ஆக வேண்டும். இந்த நேரத்தில் அர்விந்த் வேறு இல்லை.'' பேசிக்கொண்டே இருந்த பொழுது தியானேஸ்வரனுக்கு குப்பென்று வியர்வையில் நனைவதையும், முகத்தில் தெரிந்த வலியை மறைக்க முயலும்.... வேதனையும் கண்டனர்.

''கார்த்தி'' ''அப்பா'' இருவரும் ஒரே சமயத்தில் அவரருகே விரைய.....

சட்டென மயக்கமானார். கார்த்திக் மார்பை அழுத்தி பிசைந்து வாயில் வாயை வைத்து ஊதி செயற்கை சுவாசம் கொடுக்க சுமியின் போனால் ஆம்புலன்ஸ் வந்து அவரை ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தது.

## 26



**வீ**டே இனம்புரியாத அமைதியில் இருந்தது. மங்கை கலக்கமுற்று மயங்கி விழுவதும், அழுகையு



மாக இருக்க..... யாருக்கு யார் தேறுதல் சொல்வது போன்ற நிலைமை. எல்லாருமே கலங்கிப் போய் தான் இருந்தனர். அண்ணனுக்கு ஹார்ட் அட்டாக் என்றவுடன் சிவகுருவும் ஆடித்தான் போய்விட்டார்.

இளையதலைமுறை ஆச்சரியப்படத்தக்க விதமாய் செயலாற்றியது. சந்தியா வீட்டு பொறுப்பை ஏற்றுக்கொண்டு என்னென்ன செய்ய வேண்டும் என வேலைக்காரர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தாள்.

ப்ரீத்தியும், கிருத்தியும் வீட்டுப் பெரியவர்களை வேளை தவறாமல் சிறிதளவேனும் சாப்பிட வைத்துக் கொண்டிருந்தனர். சாந்தி மங்கையுடன் இருந்து கவனித்துக் கொண்டாள். சந்தியா கல்லூரிக்கு சென்ற பிறகு திவ்யா வீட்டிற்கு வந்து எல்லா வற்றையும் பார்த்துக்கொண்டாள். சுமியும் அலுவலகம், மருத்துவமனை, வீடு என மாறி மாறி வந்து கொண்டிருந்தாள். கார்த்திக் தந்தையை விட்டு அந்தண்டை இந்தண்டை கூட நகரவில்லை.

முழுதாய் ஒரு நாள் கடந்தபிறகு.... ஆபத்தான கட்டத்தை தாண்டி தியானேஸ்வரன் இயல்பு நிலைக்குத் திரும்பினார். அத்தை, மாமா, பிரகாஷ் என ஒரு பட்டாளமே மறுநாள் மாலை அவரைப் பார்க்க மருத்துவமனைக்கு படையெடுத்தது.

''என்ன அண்ணே ஆச்சு? ரம்யா கல்யாணத்துக்கு தேதி குறிச்சிட்டு அப்படியே மாப்பிள்ளையை கூட்டிக்கிட்டு உன்கிட்டே காட்டலாம்னு வந்தா

இங்கே இப்படி நிலைமை இருக்கு. எனக்கு ஒரு போன் கூட பண்ணலையேன்னு ஒரு நிமிஷம் வருத்தப்பட்டேன். பெரியவன் இங்கே இல்லை; சின்னவன் உன் கூடவே கிடக்கிறான். வீட்டிலே அண்ணியை கண் கொண்டு பார்க்க முடியலை. சின்ன அண்ணனும் ஆடிப் போயிட்டார். என்னவோ போ!

தாய் மீனாட்சி எல்லாரையும் காப்பாத்திட்டா!''

''சரிம்மா! கல்யாணத்தை திருச்சியிலே நம்ம மண்டபத்திலேயே வச்சுக்கலாம் தானே?''

''நீ என்ன சொன்னாலும் சரி. இவர் தான் மாப்பிள்ளை பிரகாஷ், ஹைகோர்ட் லாயர்.''

இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர். சுமியை பிரகாஷிற்கு கார்த்திக் அறிமுகப்படுத்தினான். கல்லூரிக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சனை! அப்பா விற்கு நேர்ந்த அதிர்ச்சி பற்றி கார்த்திக் சுருக்கமாய் கூறினான்.

''கோர்ட்டிற்கு போனால் முடிவு வர லேட்டாகும். வெளியிலேயே பேசி முடிக்க முயற்சி பண்ணலாம் தானே?''

''சுமாவும் அதுதான் சொன்னாங்க. காலையிலே நானும் அவங்களும் போய் அந்த ஆளை பார்த்துட்டு வந்தோம்.''

''என்ன சொன்னார்?''



''இன்னும் கொஞ்சம் முயற்சி பண்ணினால் முடியும் என்று நினைக்கிறேன். முதலில் கோபமாய் பார்க்கவே முடியாதுன்னு மறுத்துட்டாங்க. சுமா நிதானமாய் நிலைமையை எடுத்து சொன்ன பிறகு பேச ஒத்துக்கிட்டாங்க.''

''நாளைக் காலையில் நீங்க மறுபடியும் பேசுங்க. தனியா வேண்டாம். லாயர் துணையோட பேசி முடிக்கணும். நானும் உங்க கூட வரேன்.''

''ரொம்ப நன்றி பிரகாஷ்''.

பிரகாஷ் கையை நெகிழ்ந்து போய் பற்றிக் கொண்டான்.

''எப்படியும் பேசி முடித்தால் அவங்களுக்கு கொடுக்க பணம் வேணுமேப்பா! ஏற்கனவே பத் திரத்தை எல்லாம் பாங்கிலே வச்சு லோன் வாங்கி யாச்சேப்பா!''

''அப்பா! நீங்க கவலைப்படாதீங்க. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். வெளியில் பணம் புரட்டிக் கொள்வேன்.''

''எல்லோரும் சீக்கிரம் கிளம்புங்க. பெரிய டாக்டர் வர்றார். இத்தனை பேர் இருப்பதைப் பார்த்தால் சத்தம் போடுவார்.''

நர்ஸ் எச்சரிக்க! ''சரி அண்ணா! கிளம்புறோம்.''

''உடம்பை பார்த்துக்கங்க.'' அமைதியான மா

வாய் திறந்தார். ''கார்த்தி! அத்தை ஊருக்குப் போ

போது அவங்க பேர்ல பணம் போட்டு வச்சிருக்கிற பாஸ்புக்கை கொடுத்து அனுப்பு.''

''சரிப்பா.''

''இரு அண்ணே! ரம்யா கல்யாணத்திற்கு வேண்டிய அளவு பணம் இருக்கிறது. எனக்கும் பங்கு கொடுக்கணும்னு நினைச்சா உன் மனசிலே கொடு. அந்த பணத்தை நீ இப்ப உன்னோட காலேஜ் பிரச்சனையை தீர்க்க வச்சுக்கோ.''

தியானேஸ்வரன் கண்களில் இருந்து கண்ணீர் வந்தது.

''கிட்டத்தட்ட முக்கால் கோடி அத்தை! ஏமாந்து விட்டுவிடாதே.''

''போடா! எங்க அண்ணன் உறவு அதைவிட பல கோடி உயர்ந்தது. உறவுன்னா உதவணும்; ஆபத்திலே கை கொடுக்கணும்! புரிஞ்சுக்கடா மருமகனே!''

எல்லார் மனமும் அங்கு நிறைந்திருந்தது.

## 27



தியானேஸ்வரன் வீடு திரும்பிய பிறகு தான் சுமி அர்விந்திற்கு நடந்த தகவல்களைத் தெரிவித்தாள்;



விஷயத்தை கேள்விப்பட்டதும் அர்விந்த் வேலைகளை பொறுப்பானவரிடம் ஒப்படைத்துவிட்டு உடனே கிளம்பிவிட்டான். ஏறக்குறைய அவன் சென்றிருந்த வேலை முடிந்துவிட்டது. அடுத்தநாள் கிளம்ப இருந்தவன் செய்தி தெரிந்ததும் உடனே புறப்பட்டு வந்து சேர்ந்தான்.

''எப்படியோ அர்விந்த்! பெரும்புயலில் இருந்து தப்பித்தோம்.''

''ஐயோ! நினைக்கவே பயமாயிருக்கிறது.''

''கவலைப்படாதீங்க அம்மா! நமக்கு எப்பவும் எந்த கெடுதலும் நடக்காது. நாம் யாருக்கும் மனசால் கூட எந்தக் கெடுதலும் நினைப்பதில்லை.'' என தன் தாயை அணைத்துக் கொண்டான்.

''என்னவோப்பா! பெரியவங்க நாங்க எல்லாம் என்ன செய்யறதுன்னு தெரியாமல் செயல் இழந்து நின்னுட்டோம். சின்னப் புள்ளைங்க என்ன பொறுப்பாய் நடந்துகிட்டாங்க தெரியுமா?''

''சித்தப்பா எங்க செயல்திறமை உங்க கிட்டே இருந்து வந்தது தான்! நீங்க எல்லாரும் எப்படி பிரச்சனையை தீர்க்கிறீர்கள் என நாங்க சின்ன வயசிலே இருந்து பார்த்துக்கிட்டு வந்திருக்கலாம். அது தான் யாரும் சொல்லாமலே நாங்களே இயல்பா செயல்பட முடிந்தது.''

''சந்தியாவா இவ்வளவு அருமையாய் பேசறது? வாவ்! பதினைந்து நாளில் எவ்வளவு வளர்ந்து விட்டாள்!''

''ஏன் ப்ரீத்தி, கிருத்தி கூட எல்லாரையும் அதை யும் இதையும் பேசி மல்லுக்கட்டி எப்படி சாப்பிட வைத்தார்கள் தெரியுமா?''

''சின்னவன் விளையாட்டுப் பிள்ளைன்னு நினைச் சேன்டா! அவன் அந்தப் பெண் சுமாவோட சேர்ந்து கிட்டு எவ்வளவு அருமையாய் சிக்கலை தீர்த்தான் தெரியுமா?

''பூவோட சேர்ந்த நாறும் மணம் பெறும்னு அம்மா எவ்வளவு நாசுக்காய் சொல்றாங்க பாரேன்.''

''நீ கெட்டிக்காரன்னு எனக்குத் தெரியும்டா'' தம்பி முதுகில் தட்டிக் கொடுத்தான்.

''உங்க அத்தை ஊருக்கு போகும் போது என்ன சொல்லிட்டு போனாள் தெரியுமா?''

''அத்தைக்கு பெருந்தன்மையான மனசு. படபடன்னு பேசுவாங்களே தவிர உள்ளுக்குள் நிறைய அன்பு உள்ளவங்க. என்ன சொல்லிட்டு போனாங்க?''

''சுமா ரொம்ப நல்ல பொண்ணு! பேசாமல் பெரிய வனுக்கு முடிச்சிடுங்கன்னாள்.''

''அண்ணா! க்ரீன் சிக்னல் கிடைச்சுடுச்சு.''

''ச்சூ! சும்மாற்றா! அம்மா உன் விருப்பம் என்ன?''



''ஆகா! அவ்வளவு அருமையான பொண்ணு கிடைப்பது அந்த மகாலெஷ்மியே வீட்டிற்கு வர்ற மாதிரி தான்.''

''அம்மா, அண்ணி மகாலெஷ்மினா, என் திவ்யா என்ன அம்மா?''

''அவள் வரலெஷ்மிடா!''

''அடேய்! உங்க அம்மாவை பேசி ஜெயிக்க முடி யுமா? என்னோட பவ்யத்தை பார்த்தாலே புரிஞ்சிக்க முடியலையா?'' உள்ளே இருந்து தூங்கி எழுந்து வந்த தியானேஸ்வரன் சொல்ல.... எல்லோரும் சிரித்தனர்.

''அப்பா.''

அர்விந்த் அவரை தழுதழுப்போடு அழைக்க.

''எனக்கு ஒண்ணுமில்லையடா தம்பி! நீ வருத் தப்படாதே!''

அவனை தோளோடு அணைத்துக் கொண்டார்.

''நீங்க தூங்கிட்டு இருந்தீங்கன்னு எழுப்பலை. நீங்க எங்களுக்கு கிடைத்த ஒப்பற்ற மனிதரப்பா! உங்களால் தான் எங்களுக்கு நல்ல பாரம்பரியம் கிடைத்திருக்கிறது;

நேர்மை, உண்மை உழைப்பு வாய்த்திருக்கிறது உங்களை விட எதுவும் உயர்ந்ததில்லை.''

''விடப்பா! எல்லாம் நல்லபடியாய் முடிந்தது. இறைவன் செயல். சுமாவை பார்த்தாயா?''

''இல்லைப்பா!''

''அவளே இன்னும் கொஞ்சம் நேரத்தில் இங்கு வருவாள். தினமும் என்னைப் பார்த்து உடல்நலம் விசாரிக்காமல் செல்வதில்லை.''

''வரட்டும்! வரட்டும்! நான் பேசிக்கொள்கிறேன்'' என முணுமுணுத்தான் அர்விந்த்.

## 28



வீட்டின் உட்புறம் அமைந்த சின்ன தோட்டத்தில் சுமி, அர்விந்த், கார்த்திக் மூவரும் அமர்ந்திருந்தனர். நடந்த விஷயங்களை கார்த்திக் சொல்லக் கேட்டுக் கொண்டிருந்த அர்விந்த் குறுக்கிட்டான்.

''எல்லாம் மேடம் சொல்லிட்டாங்கப்பா! பிரகாஷ் துணையுடன் நீங்க பேசியது; அத்தைப் பணத்தை எடுத்துக் கொடுத்து கையெழுத்து வாங்கியது எல்லாம் மேடம் சொல்லிட்டாங்க.''

''மேடமா? சுமா மேல் என்ன கோபம் உனக்கு?''



''ஆறாயிரம் ரூபாய் செலவழிச்சு எக்ஸ்-சென்ஸ் சாஃப்ட்வேர்-ஐ என். பி.சியில் டவுன்லோடு செஞ்சு மேடம் பேசும்போது அவங்க உணர்வுகளை அறியலாம்னு பார்த்தால்........... அன்றிலிருந்து தொடர்பே இல்லை. வேலை இருக்கிறது; பிறகு தொடர்பு கொள்கிறேன் என்று ஒரு ஒற்றை வரி அவ்வளவு தான்!''

''நீ சுத்த வேஸ்ட் அண்ணா! இதுக்கெல்லாம் சாஃப்ட்வேர் தேடுவியா?''

''என்னடா செய்யறது? உன் திறமை எனக்கில்லையே!''

''நீ இல்லாமல் சுமா தவிச்ச தவிப்பு எனக்கல்ல தெரியும். இங்கே பிரச்சனை வந்தப்பக் கூட உன்னை தொந்தரவு செய்யாமல், வேதனைப்படுத்தாமல் எப்படி தீர்க்கறதுன்னு அலைஞ்சது எல்லாம் எதற்காக? ஒருத்தரைப் பிடிக்காமல் அவங்களுக்காக எது வேண்டுமானாலும் செய்ய யாரும் தயாராக மாட்டார்கள். நீதான் சுமாவிற்கு நன்றி சொல்ல வேண்டும்.''

''எதற்கு? எனக்கு நானே நன்றி சொல்லிக் கொள்ள முடியுமா?''

அவர்கள் பேச பேச சுமியின் முகம் எக்கச்சக்கமாய் சிவந்தது. அவளை ரசனையுடன் பார்த்தான்.

''சுமி! உன்னிடம் நேரில் சொல்ல ஒரு விஷயம் இருக்கிறது என்றேனே? நினைவிருக்கிறதா?''

''ம்''!

''சந்தியாவிற்கு ஒரு பையனை பார்த்திருக்கிறேன். பையன் பேர் ஸ்ரீராம். நம்ம இலண்டன்

நிறுவனத்தின் முழு நிர்வாகமும் அவன் தான். அருமையான பையன்.''

''நல்லா விசாரித்தீர்களா? கல்யாணம் தப்பானால் ஒரு பெண்ணோட வாழ்க்கையே கெட்டுப் போயிடும். அந்த பெண் குடும்பமும் நிலைகுலைந்து போகவும் வாய்ப்புண்டு.''

''கவலைப்படாதே சுமி! இவனை பர்ஸனலா எனக்கு நல்லாத் தெரியும். மிக நன்றாக விசாரித்து விட்டே வேலைக்குச் சேர்த்தேன். கல்யாணம் செய்து கொடுக்கும் எண்ணம் வந்தது இப்பொழுது தான்.''

''என்ன அண்ணா திடீர் முடிவு?''

''ஸ்ரீராம் நம்ம சந்தியாவை இன்டர்-காலேஜ் பங்ஷனில் பார்த்து இருக்கிறான். அதிலிருந்து அவள் மேல் ஈடுபாடு. சந்தியாவை விட மூன்று ஆண்டுகள் சீனியர். அவள் படித்து முடிப்பதற்குள் நல்ல நிலைமைக்கு வந்து பெண் கேட்க வேண்டுமென்று தீவிரமாய் உழைத்து இலண்டன் வரை வந்துவிட்டான்.''

''நீ எப்படி கண்டுபிடித்தாய்?''

''எதேச்சையாய் அவன் பர்ஸனல் கம்ப்யூட்டரை பார்க்க நேர்ந்தது. அதில் நம் சந்தியா போட்டோ! என்னடா வென்று விசாரித்தால் விஷயம் இப்படி போகிறது.''



''நம் சந்தியா அவனை விரும்புகிறாளா?''

''அவனது ஒருதலை விருப்பம். நம் ரம்யா கல்யாணத்திற்கு வரச் சொல்லி இருக்கிறேன். சந்தியாவிற்கு அவனை பிடித்தால் உடன் நிச்சயம் செய்து கொள்ளலாம். அவள் படிப்பு முடிந்ததும் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம்.''

''செவன்த் செமஸ்டர் முடிஞ்சதும் கல்யாணம்; அப்புறம் ப்ராஜெக்ட் தானே? ரெண்டு பேரும் சேர்ந்து செய்யட்டும்.''

''தங்கை கல்யாணத்தை முடிப்பதில் கார்த்திக்கு எத்தனை அவசரம்?''

''பக்கத்து இலைக்கு பாயாசம் தான். அவன் சொல்லிட்டான்; நான் சொல்லலை அவ்வளவு தான்;'' என்றான் அர்விந்த் அவனை பார்த்தவாறு.

ரம்யா கல்யாணத்தை ஜாம்ஜாமென்று நடத்த வேண்டும். முதல் நாள் மாலை கர்நாடக கச்சேரி; முகூர்த்த மாலை லைட் மியூசிக் என அசத்த வேண்டும். பாதாம் அல்வா, முந்திரி கேக்னு வேளைக்கு இரண்டு வகையான இனிப்புடன் 21 ஐட்டங்களுடன் போட வேண்டும்.''

''ஏதேது! இவ்வளவு அக்கறை அவள் மேல் எப்படி வந்தது?

''போடா! அவள்கிட்டே நான் இயல்பாய் பே யிருந்தால் அவள் என்னை விட்டிருப்பாளா?''

"இருந்தாலும் என் அண்ணனுக்கு முன்யோசனை அதிகம்."

மூவரும் சிரித்தனர்.

## 29



கல்யாணம் களை கட்டியிருந்தது. இளம்பெண்கள் ஒருத்தரை ஒருத்தர் மிஞ்சும் விதமாய் ஆடை அலங்காரங்கள் செய்து கொண்டு இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தனர்.

பட்டு வேஷ்டி, ஜிப்பாவுடன் கம்பீரமாய் வந்த அர்விந்த்,

"என்ன கார்த்திக் நாம தேவலோகத்துக்கு எதுவும் வந்திடலையே?" என.

"ஏன்?" ஜீன்ஸ் - டீ ஷர்ட்டில் இருந்த கார்த்திக் கேட்டான்.

"அப்சரஸ் நடமாட்டம் நிறைய இருக்கு!"

அதைக் கேட்ட ப்ரீத்தி, கிருத்தி துள்ளிக் குதிக்க, சந்தியாவும் திவ்யாவும் வெட்கப்பட்டனர். எல்லார் கைகளிலும், விதம் விதமாய் மெஹந்தி; "எல்லாம் உன் ஆள் கைவண்ணம்!"



"எங்கே அவளை காணோம்?"

"இப்ப தான் சுமா அக்கா டிரஸ் பண்ண போயிருக்காங்க."

திவ்யா "ரம்யா ரெடி ஆகிட்டாளா?"

"அவ எப்பவோ ரெடி! பிரகாஷ் எங்கே?"

"அதோ அங்கே பார்! ரம்யா கூட கடலை போட்டுக்கிட்டு இருக்கார்."

"மாப்பிள்ளை! ஆயுசுக்கும் ரம்யா கூட பேசத்தான் போறீங்க இப்ப எங்களை கொஞ்சம் கண்டுக்கங்க."

"அது சரிம்மா! முதலில் என் இல்லத்தை ஆளப் போகும் இல்லாளிடம் அனுமதி வாங்கிக் கொண்டு வருகிறேன்."

சிரிப்பொலி பலமாய் எழுந்தது.

"மாப்பிள்ளை கச்சேரி ஆரம்பிக்கப் போகுது. நீங்க வந்து முதலில் உட்காருங்க." நாதஸ்வர வித்வான் அருமையாய் வாசித்துக் கொண்டிருந்தார். விருந்தினரை உவகையும் களிப்புமாய் மங்கையும், சாந்தியும் வரவேற்றுக் கொண்டிருந்தனர். சிவகுரு சாப்பாட்டுக் கூடத்தில் அனைவரையும் உபசரித்துக் கொண்டிருந்தார். தியானேஸ்வரன் ஹாலில் அமர்ந்து திருப்தியுடன் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார். அத்தையும், மாமாவும் சம்பந்தி வீட்டாரை சிறப்பாக கவனித்துக் கொண்டிருந்தனர். அப்போது சுமனா வந்தாள். மெல்லிய ஷிபா

பட்டுப்புடவையில், அழகான வேலைப்பாடு செய்த ரவிக்கையில் மிக மிக அழகாய் இருந்தாள். அந்த அரக்கு வண்ணம் அவளை மேலும் அழகாக்கியது. முதன் முதலாய் எல்லாரும் அப்பொழுது தான் அவளை புடவையில் பார்த்தனர். புடவையும், டிசைனர் நகையும் அவளுக்கு அத்தனை அழகாய் இருந்தன. எல்லாரையும் கண்ணைக் கொட்டாமல் பார்க்கத் தூண்டியது.

''ஐயோடா! நீங்க ரொம்ப அழகாய் இருக்கீங்க'' - கல்யாணப் பெண்ணே வாய்விட்டுச் சொன்னாள்.

''பாவம் சுமா! எங்க அண்ணன்! எந்த வேலையும் ஓடாமல் திண்டாடப் போறான்.''

''சும்மாயிரு கார்த்திக்! கேலி பண்ணாதே!''

''நிஜம் தானே அண்ணா?''

''என்ன சொன்னாய்?''

''பார்த்தாயா! இப்பவே எங்க அண்ணன் இந்த உலகத்தில் இல்லை.''

''ஏய்'' என அவன் முதுகில் தட்டியவன்

''ஸ்ரீராம் வந்துவிட்டான் பார்த்தியா?''

''சுமாவும், நானும் தான் அவனை ரிசீவ் பண்ணி னோம். சாப்பிட போயிருக்கான்.''

''அதோ! அங்கே பார்! சந்தியா அவனை அழைத்து வருவதை.''



''அண்ணா! இவர் என்னோட சீனியர். இன்டர் காலேஜ் ப்ரோகிராம் பண்ணினப்ப நாங்க ஜெயிக்க ரொம்ப ஹெல்ப் பண்ணினார்.''

''அப்படியா! இப்ப எப்படி இங்கே வந்தார்? மாப்பிள்ளைக்கு உறவா?'' கார்த்திக் அறியாதவனாய் சீண்டினான்.

ஸ்ரீராம் அவளைப் பார்த்த பொழுதே 'உன்னை பார்க்கத் தான் வந்தேன்' எனக் கூறிவிட்டான். அவன் முழு விஷயத்தையும் தெரிவிப்பதற்கு முன் அனை வரும் வந்துவிட அவனை தன் அண்ணனிடம் அறி முகப்படுத்த சந்தியா அழைத்து வந்தாள். திடீரென கார்த்திக் கேட்டதும் திகைத்தாள் சந்தியா.

## 30



''வந்து...... வந்து....... நான் தான் இன்விடேஷன் கொடுத்தேன்'' என்றதும்,

''அண்ணா! நம்ம சந்தியாவுக்கு கல்யாணத்துக்கு தகுதி வந்தாச்சு'' என கார்த்திக் அறிவிக்கவும், அர்விந்த், ஸ்ரீராம் உள்பட அனைவரும் குபீரென சிரித்தனர். சந்தியா தடுமாறிப் போனாள். ஸ்ரீராம் தோளில் அர்விந்த் கை போட்டு நின்றதும், கார்த்

அவன் கையைப் பற்றி குலுக்கியதும் தானறியா விஷமம் நடந்திருக்கிறது என புரிந்து கொண்டாள். சுமனா தான் அவள் உதவிக்கு வந்தாள். ''அண்ணனும், தம்பியும் இப்படியா சின்னப் பெண்ணை கலாட்டா செய்வது?'' என்றவள், ''சந்தியா உனக்கு ஸ்ரீராமை பிடித்து இருக்கிறதா?'' என அவளிடம் கேட்டாள்.

''உன் அண்ணன் தான் என்னை இங்கே வரச் சொன்னார். உனக்கு பிடித்து இருந்தால் கல்யாணம் நிச்சயம் செய்யலாம் என்று சொன்னார்;'' ஸ்ரீராம் சொல்ல சந்தியாவிற்கு அவனை பிடித்துதான் இருந்தது. அண்ணனிடம் வசமாய் மாட்டிக் கொண்டதை உணர்ந்ததும் தலைகுனிந்தாள்; வெட்கப் பட்டாள்; என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள். அவள் சிவந்த முகத்தை பார்த்தவர்கள் அவர்கள் பேசட்டும் என நாசுக்காக நகர்ந்தனர்.

''உனக்காக மூன்று வருடமாக தவம் செய்தேன் தெரியுமா? உழைச்சு, ஜெயிச்சு வந்து உன் வீட்டில் பெண் கேட்க வேண்டும் என்று நினைத்தேன்.''

''அண்ணாவை எப்படித் தெரியும்?''

''உன் அண்ணா எனக்கு இருபது நாட்களுக்கு முன்னால் தான் தெரியும். உன் போட்டோவைப் பார்த்து யார் என்ன என்று விசாரித்தார். நான் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். பிறகு தான் நீ அவர் தங்கை என்று சொன்னார். உன் விருப்பம் தெரிந்த பிறகுதான் முடிவு சொல்ல முடியும்னு சொல்லிவிட்டார்.''



''எனக்கு உங்களை அப்பவே பிடித்திருந்தது. ஆனால் அதற்கு பிறகு பார்க்கவில்லையல்லவா? அதனால் ஏறக்குறைய உங்களை மறந்தே போய் விட்டேன்.''

''நாளைக்கு காலையில் என்னோட அம்மா, அப்பா, உறவினர் எல்லாம் வருவாங்க. நிச்சயம் செய்யலாமா? உனக்கு சம்மதமா?''

''அம்மா, அப்பாவிடம் கேட்க வேண்டும்.''

''உடனே போய் அத்தை, மாமாவை பார்த்துவிடுகிறேன்.''

ஸ்ரீராம் அங்கிருந்து நகர, அதற்குள் விவரம் சொல்லி தன் தாய், தந்தையை அழைத்து வந்தான் அர்விந்த்.

ஸ்ரீராமை பார்த்ததும் இருவருக்கும் பிடித்துப் போனது. தங்கள் பெண்ணிற்கு பொருத்தமாய் பையன் இருப்பதைப் பார்த்ததும் இருவருக்கும் ஏக மகிழ்ச்சி. சந்தியா-ஸ்ரீராம், திவ்யா- கார்த்திக், ரம்யா-பிரகாஷ் இப்படி ஒவ்வொரு ஜோடிக்கும் ஒரே சந்தோஷம்!

''ரம்யா நீ அதிர்ஷ்டக்காரி! உன் கல்யாணத்தில் எத்தனை ஜோடிகள் சேர்ந்திருக்கு பார்.''

''ஆமாம்! சின்ன அத்தை! எல்லாரும் ஜாலியாய் இருந்தால் நல்லா தான் இருக்கு.''

கச்சேரியில் ''அலைபாயுதே கண்ணா'' பாடிய போது...... ஒவ்வொருவரும் அதில் லயித்து போயினர்.

அர்விந்த் சுமியைத் தேடினான். மாடியில் கச்சேரி நடந்த ஹாலின் மறுபுறம் இருந்த பால்கனியில் நின்று கொண்டிருந்தாள்.

''சுமி''.

திரும்பினாள்; கண்கள் கலங்கி இருந்தன.

''என்னம்மா?''

மௌனமாய் இருந்தாள். அவள் கைகளைப் பற்றினான். ''சுமி! என் வாழ்க்கை முழுவதும் உன் துணை வேண்டும். என்னை திருமணம் செய்து கொள்வாயா?''

''என்னைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் அர்விந்த்? எதுவுமே தெரிந்து கொள்ளாமல் எப்படி மணந்து கொள்ள முடியும்?''

''எனக்கு உன் கடந்த காலத்தைப் பற்றி கவலையில்லை. உன்னை நான் நம்புகிறேன். எனக்குத் தெரியும் நீ எத்தனை அற்புதமான பெண் என்று! முதன்முதலில் உன் கண்களை பார்த்த பொழுதே உனக்கு துணையிருக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன்.'' கண்ணீர்த்துளிகள் அவன் கைகளில் பட்டுத் தெறித்தன.

## 31



முகூர்த்தம் முடிந்த கையுடன் சந்தியா- ஸ்ரீராமின் நிச்சயதார்த்தம் நடந்தது. கேலியும், கிண்டலும்



பாட்டும், நடனமுமாக ஒரே கொண்டாட்டமாய் இருந்தது. ஸ்ரீராம் அருமையாய் பாடினான்.

''உன்னாலே... உன்னாலே......''

சுமியும் ஹிந்தி பாட்டு பாட, ''ஹே மேரே ஹம்ஸப்பர்........''

''நான் கூட பெங்காலி பாட்டு பாடுவேன்'' என கார்த்திக் அலட்ட........

''எங்கே பாடேன்?''

''ஜன கனமண அதி'' எனத் துவங்க சற்று நேரம் பாடி முடிக்கும் வரை அசையாமல் நின்ற கூட்டம் பாடி முடிந்ததும் ''ஹேய்'' என அவன் மேல் பாய்ந்தது. அப்போது கார்த்தியின் செல் ஒலித்தது.

''யெஸ்! மூன்று மணிக்கு வருகிறேன். இல்லையில்லை கண்டிப்பாய் வருகிறேன். அவர்களை இருக்கச் சொல்லுங்கள்.''

''என்னடா?''

''முக்கியமான கேஸ் விஷயம் அண்ணா! அவசியம் நான் போக வேண்டும்.''

''மூன்று மணிக்குத் தானே? அதற்குள் இங்கு விழா ஏறக்குறைய முடிந்துவிடும்'' என்றவனை நிமிர்ந்து பார்த்தான் கார்த்திக்.

''சுமா கிட்டே பேசிட்டியா? இல்லை; நா போட்டு உடைச்சிடுவேன்.''

''சம்மதம் வாங்கியாச்சு.''

அடுத்த நிமிடம் அவன் இடுப்பில் கைப்போட்டு ''ஊ லலா'' எனப் பாடியவாறு சுற்றினான். பெரியவனும் அவனுடன் உற்சாகமாய் ஒத்துழைத்தான். கார்த்திக் சட்டைப் பையில் இருந்து அந்த நகைப் பெட்டியைத் திறந்தான்.

அதில் டீ-பியர் மோதிரம் இருந்தது.

''சுமா! வா, வா! சீக்கிரம்'' என அழைத்தான்.

''என்ன கார்த்திக்?''

சந்தியா சுமனாவை இழுத்து வர அர்விந்த் அவள் விரலில் அந்த மோதிரத்தை உற்சாக கைத்தட்டல்களுக்கு இடையில் அணிவித்தான்.

''அண்ணன் எள் என்பதற்குள் தம்பி எண்ணெயாய் நிற்கிறானே?''

''தம்பி உடையான் படைக்கு அஞ்சான்'' என அர்விந்த் வீரம் பேச....

''நல்ல அண்ணன்; நல்ல தம்பி!''

லைட் மியூசிக் தொடங்கி பிறகு கார்த்திக் கிளம்பிச் சென்றான். வந்திருந்தவர்கள் மும்பை காவல்துறையினர். மும்பை எம்.எல்.ஏ வீட்டு புகாருடன் வந்திருந்தனர். புகார் காப்பி, விளம்பர பேப்பர்; பத்திரிகை இவற்றை அவனிடம் கொடுத்தனர். விவரங்களைக் கேட்டுக் கொண்டவன் விரைந்து தன்னால் இயன்றதை செய்வதாகக் கூறி அனுப்பினான். பின் நிதானமாய் அந்தப் புகாரைப் படித்தான். பத்திரிகையை



பார்த்தான். மராட்டியில் அச்சடிக்கப்பட்டிருந்தது. ஆங்கிலச் செய்தித்தாளை பிரித்தவன் அதிர்ந்தான்.

அவன் வீடு திரும்பிய பொழுது வெகுநேரம் ஆகிவிட்டது. கல்யாண மண்டபத்தில் இருந்து எல்லாரும் வீடு திரும்பியிருந்தனர். ஏறக்குறைய எல்லாருமே உறங்கிப் போய்விட்டனர். தம்பி வந்ததும் கதவைத் திறந்த அர்விந்த், ''ஏண்டா! இவ்வளவு நேரம்? திவ்யாவை கொண்டு போய் அவள் வீட்டில் விட்டுட்டு வந்துட்டேன்.''

''சரி!''

''ஸ்ரீராமும் கிளம்பிட்டான். உன்கிட்டே சொல்லச் சொன்னான். சுமியும் ஹாஸ்ட்டல் போயிட்டாள். நாளைக்கு அவளை நம்ம வீட்டிற்கே கூட்டி வந்துடலாம்னு இருக்கேன்.''

''நான் போய் கூட்டி வரேன். நீ ரெஸ்ட் எடு'' என்றவாறே படுக்கச் சென்றான் கார்த்திக்.

# 32



விடிந்தும் விடியாததுமாக காருடன் வந்து நின்ற கார்த்திக்கைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள் சுமனா.

''குட்மார்னிங் கார்த்திக்.''

"குட்மார்னிங்" - ஏனோ அவன் உற்சாகமாய் இல்லாதது போல் தோன்றியது.

"என்ன விஷயம்? காலையிலே வந்து நிற்கிறாய்?"

"அண்ணா! உன்னை வீட்டிற்கு கூட்டி வரச் சொன்னான்."

அவன் முகத்திலிருந்து அவளால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை. "ஏன் டல்லாக இருக்கிறாய்?"

"ஒரு கேஸ் விஷயமாய் அலைந்து விட்டு வந்தேன்."

"அப்ப நீயேன் இங்கு வேறு அலைகிறாய்? ஒரு போன் பண்ணினால் நானே வந்திருப்பேனே?"

"சீக்கிரம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வரமுடியுமா சுமா?"

"இதோ! ஒரு பதினைந்து நிமிடத்தில் தயாராகி விடுவேன்." துள்ளிக் கொண்டு ஓடியவளைப் பார்த்தான். இவளிடம் நான் எப்படி பேசுவேன்? என்னவென்று கேட்பேன்? பத்தே நிமிடங்களில் அவள் தயாராகி வந்து நின்றாள்.

காரின் ஸ்டியரிங்கில் தலையை கவிழ்ந்திருந்தான்.

"கார்த்திக் சாவியைக் கொடு; நான் ஓட்டுகிறேன். நீ ரொம்ப களைப்பாய் தெரிகிறாய்." சாவியை அவள் கையில் கொடுத்து விட்டு நகர்ந்து கொண்டான்.

"சுமா! ஏதாவது ஹோட்டலுக்கு போயேன்! நல்லதாய் காபி சாப்பிடலாம்; ஒரே தலைவலி."



ஹோட்டலுக்குப் போய் ஏ.ஸி அறையில் அமர்ந்தும் அவன் ஏதோ யோசனையில் இருந்தான். அவனை கவனித்து கொண்டே இருந்தாள் சுமனா. யாரும் நடமாட்டமில்லாத பகுதிக்கு வந்ததும் காரை ஓரமாக நிறுத்தினாள்.

"இப்ப சொல்லு? என்ன பிரச்சனை?"

"எல்லா பிரச்சனைக்கும் தீர்வு சொல்பவள் நீ! ஆனால் இதை எப்படி உன்னிடம் சொல்வேன்?"

"என்ன கார்த்திக்? ஏன் தயங்கறே? ப்ளீஸ் சொல்லேன்" சட்டென ஆங்கிலச் செய்தித்தாளை எடுத்து அவளிடம் நீட்டினான். விஷயம் புரியாமல் வாங்கிப் பிரித்தவள் செயலற்று போனாள். "காணவில்லை" விளம்பரம் அது. என் மனைவியை காணவில்லை என்று கொட்டை எழுத்தில் அவளுடைய போட்டோவுடன் பிரசுரமாகி இருந்தது. அடுத்து கல்யாண பத்திரிகை ஒன்றை நீட்டினான். அது அவளது கல்யாண பத்திரிகை. அவள் கண்களில் தாள முடியாத வேதனை தெரிந்தது.

"இந்த ஆளை உனக்குத் தெரியுமா?" விளம்பரம் கொடுத்திருந்தவரின் பெயரைக் காட்டிக் கேட்டான். தலையசைத்தாள்.

"இது உன் கல்யாண பத்திரிகை தானா?"

"ம்!"

"இனி நான் உன்னிடம் என்ன கேட்பேன் சும நீதான் சொல்ல வேண்டும்" வேதனையோடு அ தன் கைகளை காரின் ஸீட்டில் குத்தினான்.

அவளுக்கு கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது; சமாளித்து அவனை கேட்டாள் ''உனக்குத் தெரிந்த லேடி டாக்டர் இருக்காங்களா?''

ஒரு வினாடி அவளை பார்த்தவன், அடுத்த ஐந்து நிமிடங்களில் லேடி டாக்டர் வீட்டின் முன் காரை நிறுத்தினான். உள்ளே சென்றாள். அறைக்கு வெளியே கார்த்திக் நின்று கொண்டிருந்தான். டாக்டர் அவனுக்கு நன்றாகத் தெரிந்தவர். அடிக்கடி கேஸ் விஷயமாய் அவரை பார்க்க வருவான். பத்து நிமிடங்களில் டாக்டர் வெளியே வந்தார். ''யார் கார்த்திக் இது?''

''ஏன் என்னாச்சு டாக்டர்?''

''ஷி ஈஸ் எ வர்ஜின். என்னை வர்ஜின் டெஸ்ட் பண்ண சொல்லி கேட்டுக்கிட்டாங்க.''

கார்த்திக் ஆடிப் போய்விட்டான். உடனே அர்விந்திற்கு போன் செய்து நர்சிங்ஹோமிற்கு வரச் சொன்னார். வந்தவனிடம் கார்த்திக் எல்லா விவரங்களையும் சொன்னான். எல்லா விவரங்களையும் கேட்ட அர்விந்த் ''எதற்கு இங்கே வந்தீங்க?'' என வினவ, கார்த்திக் தலை குனிந்தான். சுமனா அவன் முன் வந்தாள். ''என்னை நிரூபிக்க எனக்கு வேறு வழி தெரியலை அர்விந்த்! அதற்காக.........''

''அதற்காக....... என்ன?'' அதட்டினான்.

''வர்ஜின் டெஸ்ட் பண்ணினேன்.''



''சீ!'' அந்த ஒரு வார்த்தையே போதுமாய் இருந்தது சுமனாவிற்கு.

''நான் உன்னை கேட்டேனா நீ எப்படிப்பட்டவள் என்று? என்னை எவ்வளவு மோசமானவனாய் நினைத்து விட்டாய்? நான் நம்பிக்கை இல்லாமல் எந்த செயலையும் செய்வதில்லை.''

இவ்வளவு நாள் அடைத்து வைத்திருந்த துன்பம், துயரம் எல்லாம் கரையை உடைத்த வெள்ளம் போல் அவள் கண்களில் இருந்து கண்ணீராய் வெளி வந்தது. அவளை தன் தோளில் சாய்த்துக் கொண்டு தட்டிக் கொடுத்தான். மறுபுறம் தலைகுனிந்து அண்ணன் முகத்தை பார்க்க இயலாமல் அமர்ந்திருந்த கார்த்திக்கை திரும்பிப் பார்த்தான்.

## 33



வீட்டிற்கு வந்ததும் கார்த்திக் சரியாகவில்லை.

''மன்னித்துக் கொள் அண்ணா!''

''இதில் உன் தப்பு என்னடா?''

''சுமா, டாக்டர் கிட்டே இதுக்குத்தான் போனா
ன்னு எனக்குத் தெரியாது.''

''சரிடா! விடு! உனக்கெப்படி தெரியும்? அவளுக்கு ஏதோ ஆபத்து என்று எனக்குத் தெரியும். நான் தான் அவளை காப்பாற்றி ட்ரெய்னில் கூட்டி வந்தேன்.''

''சாரி அண்ணா.''

''ஏண்டா! இப்படி பேசறே? சுமியை இனி தனியே விடக்கூடாது. இனி அவள் நம் வீட்டில் இருப்பது தான் பாதுகாப்பு.'' என்றவன், ''மனசை உழட்டிக் காதே. உன்னையும் எனக்குத் தெரியும்; புரியும். கவலைப்படாதே!''

சுமனா அன்றைக்கு அலுவலகத்திற்கு செல்ல வில்லை.

சின்னவனை ஸ்டேஷனில் இறக்கிவிட்டுட்டு அர்விந்த் அலுவலகம் சென்றான். அறைக்குள் கட்டிலில் படுத்திருந்த சுமனாவிற்கு நடந்த விஷயங்கள் எல்லாம் நினைவிலாடின. பெங்காலியான அப்பா, தமிழ்ப்பெண் சுஜாதாவை மணம் புரிந்து கொண்டார். பெரிய தாத்தாவின் மகள் வயிற்று பேத்தி இந்த செய்திக் கேட்டு தற்கொலை செய்து கொண்டாள். அவள் அப்பாவின் மேல் ஆசையை ஒருதலையாய் வளர்த்து வைத்திருந்தாள். இதனால் இரு குடும்பங்களும் பிரிந்து போயின. அத்தை குடும்பம் பெண் இறந்த துயரை மறக்க மும்பை சென்றது. அப்பாவும் தாத்தாவின் தொழிலில் -டுபட்டு வெற்றிகரமாய் வளர்ந்து கொண்டிருந்தார். கொல்கத்தாவில் சுமனா எம்.பி.ஏ முடித்ததும்



தொழிலை மும்பைக்கு மாற்றினார். அப்போது தான் அத்தையுடன் தொடர்பு ஏற்பட்டது. மாமா தன் கட்சிக்கார எம்.எல்.ஏ வை அப்பாவிற்கு அறிமுகப் படுத்தினார். அவர் பையன் ராஜேஷ் வெளிநாட்டில் நிர்வாகப் படிப்பு படித்து முடித்திருந்தான். அம்மா விற்கு முதலில் அவர்களின் தொழில் தொடர்பே பிடிக்கவில்லை. இதில் மாமா எம்.எல்.ஏ மகனுக்காக அப்பாவுடன் சம்பந்தம் பேசுகையில் சுத்தமாய் பிடிக்காமல் போய்விட்டது. ஏனோ அவர்கள் சரியில்லை என உள்ளுணர்வு சொன்னது.

''வேண்டாம்! தொழில் தொடர்புடன் நிறுத்திக் கொள்ளுங்கள். சுமனா வாழ்க்கையை பணயம் வைக்க வேண்டாம்.'' என்று மன்றாடினாள்.

''சுஜா! ஏற்கனவே என் அக்கா பெண்ணை நான் திருமணம் செய்து கொள்ளாததால் குடும்பமே இரண்டுப்பட்டு போயிடுச்சு. இப்ப சரியான காரணம் இல்லாமல் இந்த திருமணத்தை நிறுத்த முடியாதம்மா! ஏன்? மாப்பிள்ளை படித்திருக்கிறான். அடக்கமாய், அமைதியாய் தெரிகிறான். செல்வாக்குள்ள குடும்பம்; நம்ம தொழில் வளர்ச்சிக்கும் நல்லது தானே?''

என்ன சொல்வாள்? எப்படி மறுப்பாள்? சுமனாவோ அப்பா பெண். அப்பா ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் அதற்கு மறு பேச்சே கிடையாது. திருமணம் முடிவானதுமே 'சுமனா இன்டஸ்ட்டீரியை' ராஜேஷ் பெயருக்கு மாற்றி எழுதிவிட்டார்.

''அவசரப்படாதீர்கள்'' என சுஜாதா தடுத்ததை அவர் காதிலே போட்டுக் கொள்ளவில்லை. ''பாரம்மா! உனக்கு ஏதோ வெறுப்பு! அதனால் தான் அவர்களை சந்தேகத்தோடு பார்க்கிறாய். அவங்க வீட்டையே சுமனா பேருக்கு மாத்தி எழுதிட்டாங்க தெரியுமா?''

''வாயால் சொன்னதை நம்பி தொழிற்சாலையை மாற்றி பத்திரம் செய்து கொடுக்கும் அப்பாவி கணவனிடம் என்ன சொல்லி திருமணத்தை நிறுத்துவது என்று அவளுக்குப் புரியவில்லை. அதற்குப் பின் மௌனமாய் இருந்தாலும் எதையும் அதிக கூர்மையாய் கவனிக்க ஆரம்பித்தாள். மற்ற சொத்துக்களையும் சுமனாவின் பெயருக்கு மாற்றி எழுத சுபாஷ் முயன்றார். நல்ல வேளையோ! என்னவோ! அவர்களது குடும்ப வக்கீல் ஊரிலேயே இல்லை.

செல்போன் அழைத்தது. நினைவிலிருந்து விடுபட்டு சுமனா அதை எடுத்தாள். அர்விந்த் தான்.

''நான் தான் சுமனா! மதியம் சாப்பிடக் கூட இல்லையாமே? தூங்கிவிட்டாயா?''

''எங்கே இருக்கிறீர்கள்?''

''உன் அறைக்கு பத்தடி தூரத்தில் தான்.'' வியப்புடன் கதவைத் திறந்தாள். மாலை மணி ஆறாகி விட்டிருந்தது.

''இப்பதான் என் பிள்ளை சீக்கிரம் வீட்டிற்கு வந்திருக்கிறான்.''



''அவனை இழுக்கும் மந்திரக்கயிறு இப்பதானே இங்கிருக்கிறது.'' பெரியவர்கள் பேசுவதை கவனித்து ''கேட்டாயா'' என்பது போல் அவளைப் பார்த்தான்.

''கார்த்திக் எங்கேடா! காலையில் இருந்து கண்ணில் படலை.''

''காலையில் நான்தானம்மா அவனை ஸ்டேஷனில் இறக்கி விட்டேன்.''

பேசிக்கொண்டே பொழுது ஓடியது. கார்த்திக்கை போனில் தொடர்பு கொள்ள முயன்றான் அர்விந்த்; ''நாட்ரீச்சபிள்'' என பதில் வந்தது. போலீஸ் ஸ்டேஷனிற்கு போன் பண்ணினான்.

''சார் காலையிலேயே லீவ் லெட்டர் கொடுத்துட்டு போயிட்டாரே'' என்றனர்.

## 34



மும்பை பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது.

''ரவீந்தரைப் பார்த்தாயா?''

''அவனை பார்ப்பதில் ஒரு பயனுமில்லை சுபாஷை பழிவாங்க மட்டும் தான் நம்முடன் கூட்டு சேர்ந்தான். இனி நமக்கு எந்த விதத்திலும் உத மாட்டான்.''

''ஆனாலும் அவளை தப்பவிட்டிருக்கக் கூடாத பப்பா.''

''எங்கே ஓடிவிடப் போகிறாள்? அனாதை நாய். எப்படியும் பிடித்து இழுத்து வரத்தான் போகிறோம்.''

''அவள் மூலம் கோடிக்கணக்கில் சொத்து வரப் போகிறது என்று பார்த்தால் கடைசியில் அவள் அப்பன் அதை ஆனந்தவனத்துக்கும், நிர்மல் டிரஸ்ட்டுக்கும் எழுதி வச்சிட்டான்.''

''கடைசியிலே அவன் பொண்ணுக்கும் ஒண்ணு மில்லாமல் போயிடுச்சு! ஆனால் நமக்கு வெறும் பாக்டரியோட விட்டுட முடியுமா?'

''அவ அழகு எல்லாருக்கும் ஆசையை உண் டாக்கும்.''

''கவலைப்படாதே! அவள் உனக்கு இரண்டாம் தாரம் ஆனாலும் நல்ல விலைக்கு வித்துடலாம்.''

''போலீஸை நம்பி பயனில்லை. தனியார் டிடெக்டிவ் ஏஜென்சி மூலம் தான் அவளை பிடிக்க வேண்டும்.''

''எதற்கும் ரவீந்தரின் வீட்டிற்குப் போய் ஏதாவது செய்தி தெரியுமா? என்று விசாரித்து விட்டு வா! கவனம்! ரவீந்தரின் மனைவி ஏதோ கொஞ்சம் வெறுப்புற்று இருப்பது போல் தோன்றுகிறது.''

''ஆரம்பத்தில் இருந்து நம்மை வெறுத்த சுஜா தாவால் என்ன பண்ண முடிந்தது? நம்ம ப்ளான்படி



ஆக்ஸிடெண்ட்டில் மேலே போயிட்டாள். இது செத்தப் பூச்சி! இதால் எதுவும் பண்ண முடியாது.''

''பிள்ளை பூச்சியாய் நினைச்ச சுபாஷ் நிமிஷத் திலே மாறிடலையா? அதனால் தான் அவனையும் மேலோகத்துக்கு அனுப்பிச்சோம். எதுக்கும் அந்த ஆஷா மேலே ஒரு கண்ணு வை.''

''சரி பப்பா! உடனே போய் அங்க என்ன நடக்கு துன்னு பார்த்துட்டு வர்றேன்.''

ராஜேஷ் ரவீந்தரின் வீட்டிற்கு சென்ற பொழுது ஆஷாவும், ரவீந்தரும் சண்டைப் போட்டுக் கொண் டிருந்தனர்.

''ஏ! சும்மா! அழுதுகிட்டு இருக்காதே. உங்க அண்ணன் ஒண்ணும் அல்பாயுசிலே போயிடலே! என் பொண்ணு வாழ்க்கையை கெடுத்ததுக்கு அவன் பொண்ணு வாழ்க்கையை கெடுத்து அவனை ஆயுசுக்கும் துடிக்க வைக்கணும்னு நினைச்சேன். ஆனால் அவள் தப்பிச்சிட்டா! இவன் ஜோடியாய் போய் சேர்ந்துட்டான்.''

''பழி வாங்கற எண்ணத்தோடத் தான் இருந்தீங் களா?''

''பின்னே! உங்க அண்ணனுடன் எதுக்கு உற வாடினேன், அவன் சொத்துக்கு ஆசைப்பட்டா? சீ அவன் அழியணும். 25 வருஷமாய் அதுக்குத்தா காத்துக்கிட்டு இருந்தேன்.''

''ஏய்! வாயை மூடு! என் பெண் எப்படித் துடித்தாள்? வேறு பெண்ணை அவன் மணந்த போது துடித்து உயிரை விட்டாளே! அதற்கு ஈடு என்ன? அவள் இல்லாமல் இன்றைக்கு நாம் தான் அனாதையாய் நிற்கிறோம். நம் குலம் அவள் இல்லாமல் தழைக்காமல் போய்விட்டது.''

ஆஷா செயலற்று அழ, ராஜேஷ் பேச வழியின்றி அங்கிருந்து கிளம்பினான்.

## 35



கார்த்திக்கை காணாமல் அர்விந்த் தவித்துக்கொண்டிருந்தான். அவசர கேஸ் விஷயமாய் கார்த்திக் வெளியூர் போயிருக்கிறான் என்று அவன் வீட்டில் சொல்லி சமாளித்தான்.

'ஒரு போன் கூட செய்யாமல் எங்கே போயிருப்பான்? என்ன ஆயிற்று இவனுக்கு? திவ்யாவிற்கு ஏதேனும் தெரியுமா?'- என யோசித்த பொழுதே அவளிடம் இருந்து போன் வந்தது.

''கார்த்திக் எங்கே? அவனும் போன் பண்ணலை. நான் பண்ணினால் நாட் ரீச்சபிள்னு வர்றது.''

''ஒன்றுமில்லை! ஏதோ முக்கிய வேலை! அதனால் வெளியூர் போயிருக்கிறான்.''



சொல்லிவிட்டு தலையைப் பிடித்துக் கொண்டான்.

சுமனாவிற்கு மட்டும் தான் கார்த்திக் காணாமல் போன விஷயம் தெரிந்திருந்தது. ஆனால் எங்கே போனான் எனத் தெரிய ஒரு வழியும் இல்லாமல் தடுமாறினாள். அவள் டாக்டரிடம் சென்றதில் அவன் மிகவும் பாதிக்கப்பட்டதை அவள் உணர்ந்திருந்தாள். தன்னை அறியாமல் அவனை காயப்படுத்தி விட்டோமோ?

எங்கே போயிருக்கக் கூடும்? மனம் நொந்து எங்காவது தனிமை நாடி போயிருப்பானோ? இப்படி விடைத்தெரியாத கேள்விகள் எத்தனையே அவள் வாழ்வில்.

கல்யாணத்திற்கு முந்தின நாள் காலை அப்பா ஏன் அம்மாவுடன் பெங்களூர் போனார்? ஆரோக்கியமான மனிதருக்கு எப்படி ஹார்ட் அட்டாக் வந்தது? அம்மா விபத்தில் எப்படி சிக்கினார்? முன்பின் அறிமுகம் இல்லாத நர்ஸ் செல்லில் தன்னை அழைத்து அம்மாவிற்கு விபத்து ஏற்பட்டதை சொன்னபொழுது நம்பவும் முடியாமல்; நம்பாமல் இருக்கவும் முடியாமல் ராஜேஷிடம் அரைகுறையாய் விவரம் சொல்லி பெங்களூருக்கு விமானத்தில் வந்த பொழுது அம்மா சொன்னது இன்னும் அவள் காதுகளில் ஒலித்தது.

''இந்த கல்யாணம் வேண்டாம்; தம்பி போயிடு ஆபத்து! போ! போ.''

அவள் பேசிக்கொண்டே இருந்த பொழுது வந்து நின்ற ராஜேஷை கண்டதும் அவள் விழிகளில் எச்சரிக்கை தோன்றியதும்; மகளின் உள்ளங்கையை அழுத்தி எச்சரிக்கைக் கொடுத்து அவள் உயிர் விட்டதும் அங்கேயே ஈமக் கடமைகளை முடித்து அம்மா சொன்னபடி தப்பித்து மும்பை செல்லாமல் சென்னை வந்ததும்........

அங்கிருந்து திருச்சி வந்ததும்.........

இனி எடுத்து வைக்கும் அடிகளை கவனமாக வைக்க வேண்டும் என வாழ்க்கை அவளுக்கு எடுத்துக் காட்டியது. இறுதி காரியத்திற்கு வந்திருந்த குடும்ப வக்கீல் அவள் அப்பா எழுதிய உயிலை படித்துக் காட்டினார்.

அவருடைய சொத்து முழுவதையும் ஆனந்த வனத்திற்கும், நிர்மல் சாரிட்டிக்கும் எழுதியிருப்பதை சொன்ன பொழுது அவள் பெரிதாய் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை.

''உனக்கு எதுவும் எழுதவில்லையே? என கேட்டேன் அம்மா! அதற்கு அவர் என் பெண் புத்திசாலி! அவளுக்கு அவள் படிப்புத்தான் நான் கொடுக்கும் பெரிய சொத்து! அதை அவளிடமிருந்து யாரும் ஏமாற்றி பறிக்க முடியாது. என் தர்மம் அவளை காப்பாற்றும்னு சொன்னார். இப்படி பொசுக்குனு போயிட்டார்.''

சூழ்நிலையை அவளது இயல்பான புத்திக் கூர்மை கவனித்தது. ஒரே நாளில் பறிக்கொடுத்த தாய்,



தந்தையரின் சொல்லும். செயலும் அவளை உஷார்படுத்தி இருந்தன. தனக்கு எதுவும் தெரிந்தாற் போல் காட்டிக் கொள்ளாமல் துக்கத்தை மட்டுமே முன் நிறுத்தி மெதுவாய் அங்கிருந்து தப்பினாள். கார்த்தியின் புத்திசாலித்தனத்தை உடன் இருந்து பார்த்தவள்... அவன் என்ன செய்வான்? என ஊகிக்க...... முடிந்தால்..... சட்டென ஓர் எண்ணம் அவளுள் தோன்றியது. அதே நேரம் மும்பையில் போலீஸ் ஸ்டேஷனில் சுமனாவைப் பற்றி ஏதேனும் தகவல் உண்டா? என விசாரித்துக் கொண்டிருந்தான் ராஜேஷ். பின் அவளைப் பற்றி விசாரிக்க சொல்லி தனியார் துப்பறியும் நிறுவனத்தை அணுகினான்.

''சார்! என் மனைவியை காணலை! இது தான் அவள் போட்டோ; சென்னைக்கு போயிருக்கலாம் என்று தோன்றுகிறது. கல்யாண போட்டோ இது. எங்க கல்யாண பத்திரிகை; அவளைப் பற்றிய தகவல் எல்லாம் இந்த ஃபைலில் இருக்கிறது.'' என்றவன் தன் செல் கேமிராவால் அவர்களுடன் பேசிக் கொண்டிருப்பதை படம் பிடித்தான்.

அதற்கு அவர்கள் ஆட்சேபிக்க,

''ஸாரி! தப்பா நினைக்காதீங்க, எனக்கு இது ஒரு பழக்கம். யார் கூட நான் இருந்தாலும் படம் பிடிப் பேன். வேண்டாததை பின்னால் அழிச்சிடுவேன்.'' என்றான்.

''இப்படி எங்கள் அனுமதி இல்லாமல் படம் பிடிப்பதை ஏற்றுக் கொள்ள மாட்டோம் சார்.''

''அவ்வளவு தானே? ஏன் பிரச்சனை? இதோ அழித்து விடுகிறேன்.'' என்றவாறே பட்டனை அமுக்க , அதில் படங்களே வரவில்லை.

''செல்லில் ஏதோ பிரச்சனை; சர்வீஸிற்கு கொடுக்க வேண்டும். உங்களை எடுத்த படம் இதில் பதிவாக வில்லை. வேண்டுமானால் நீங்களே பாருங்கள்'' என அவர்களிடம் கொடுத்தான்.

## 36



சுமி தன் கைப்பையை கீழே கொட்டி அலசி ஆராய்ந்தாள், அவள் தேடியது கிடைத்தது. அது ஒரு விசிட்டிங்கார்டு. அந்த எண்ணை அவள் அர்விந்த் செல்லில் தொடர்பு கொண்டாள். வக்கீல் விஜய ராகவன் பேசினால் மட்டும் தன்னிடம் கொடுக்கு மாறு அர்விந்திடம் அந்த போனை கொடுத்தாள்.

''வக்கீல் விஜயராகவன் ஸ்பீக்கிங்.....''

''ஒன் மினிட் ப்ளீஸ் சார்!''

''அங்கிள் ! நான் சுமனா பேசறேன்.''

''சுமனா?....... ஓ! சுபாஷ் பொண்ணா? எங்கம்மா போனாய்? எங்கிருந்து பேசுகிறாய்?''



''பத்திரமாய் இருக்கிறேன். உங்களுடன் பேச வேண்டும். இப்பொழுது தொந்தரவு எதுவுமில் லையே?''

''சொல்லும்மா! நானே உன்னுடன் பேச வேண்டும என்று இருந்தேன்.''

''என்ன விஷயம் அங்கிள்?''

''உங்க அப்பாவை போன் பண்ணி நான்தான் பெங்களூருக்கு வரச் சொன்னேன். சுபாஷ் உங்க பேக்டரியை ராஜேஷ் பேருக்கு மாற்றி எழுதச் சொன்னார். அப்பவே வேண்டாம் என்று சொல்லி பார்த்தேன். வருங்கால மருமகன் என்று உறுதியாய் சொல்லி மாற்றி எழுத வைத்தார். பெங்களூரில் ராஜேஷை வேறு ஒரு பெண்ணுடன் பார்த்தேன். அதை சொல்லத்தான் உங்க அப்பாவை கூப்பிட்டு அனுப்பினேன். வந்தவர் நான் சொன்ன இடத்துக்குப் போனார்.''

எதிர் திசையில் கனத்த மௌனம் நிலவியதை உணர்ந்தவராய்.....

''என்னம்மா அழுகிறாயா? கடைசி நிமிடத்தில் அவனின் அயோக்கியத்தனத்தை நேரில் பார்த்து ரொம்ப ஆடிப் போய் வந்தார். உடனே சொத்தை எல்லாம் தர்ம ஸ்தாபனத்திற்கு எழுதச் சொல்லி கையெழுத்து போட்டார். சொத்தால் உன் உயிருக்கு ஆபத்து வரும் என்று நினைச்சாரோ? என்னவோ? உங்க அம்மா கிட்டே சுருக்கமாய் விவரம்

சொல்லிட்டு ராஜேஷை பார்க்கப் போனவர் ஹார்ட் அட்டாக்கிலே போயிட்டார்.''

''சரி அங்கிள்! எப்படி அம்மாவுக்கும் சொல்லி வச்ச மாதிரி விபத்து நடந்தது? இறப்பதற்கு இரண்டு நாளைக்கு முன்னால் தான் அப்பா இன்ஸ்சூரன்ஸ் பாலிஸிக்காக மெடிக்கல் செக்அப் செய்துவிட்டு வந்தார்; அந்த சர்ட்டிபிகேட் அவர் ஆரோக்கியமாய் இருந்ததைச் சொல்லும்.''

''வெரிகுட்! நல்ல பாயிண்ட் மா!''

''உங்களால் எனக்கு ஒரு உதவி ஆகவேண்டும்.''

''என்னம்மா?''

விஷயங்களை அவரிடம் தெளிவாய் சொல்லி விட்டு போனை வைத்தாள்.

''அர்விந்த் நான் மும்பைக்குச் செல்ல வேண்டும்.''

''நாம் என்று சொல்.''

''உங்களை ஆபத்தில் சிக்க வைக்க நான் விரும்ப வில்லை.''

''அதையே நானும் சொல்லலாமில்லையா?''

இருவரும் கிளம்பினர்.

விமான நிலையத்திலிருந்து இறங்கிய போதே செய்தி ராஜேஷ் வீட்டை அடைந்து விட்டது. அவர்கள் செல்லுமிடத்தை அறியுமாறு தகவல் வந்தது. அவர்கள் இருவரும் போலீஸ்-ஸ்டேஷனுக்கு சென்றனர்.



''எலி பொறிக்குள் வந்து தானே மாட்டிக்கிது; நம்ம கோட்டைக்குள்ள வந்து இந்த சின்னப் பெண்ணால் என்ன செய்து விட முடியும்?''

எம்.எல்.ஏவும் ராஜேஷும் அங்கே விரைந்தனர்.

''சுமா! பேட்டீ! வந்திட்டியா! உன்னை காணாமல் என் பிள்ளை தவிச்சு போயிட்டான்.'' என்றவர் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் திரும்பி,

''சார்! என் மருமகள் கிடைச்சிட்டா! நாங்க ஏற்கனவே கம்ப்ளெய்ண்ட் கொடுத்திருக்கோம். இப்ப இவளை அழைச்சுக்கிட்டு போகலாம் தானே!''

''இருங்க சார்! இவங்க உங்க பேரிலே புகார் கொடுக்க வந்திருக்காங்க. இவங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலைன்னு சொல்றாங்க.''

''அவ அம்மா, அப்பா இறந்த அதிர்ச்சியில் புத்தி பேதலிச்சு போச்சு சார். நாங்க ஆதாரமாய் கல்யாண ஆல்பம்; கல்யாண பத்திரிகை, கல்யாண மண்டபத்து பில், மேரேஜ் சர்ட்டிபிகேட் எல்லாம் கொடுத்திருக்கோமே!''

''இன்னிக்கு இருக்கிற டெக்னாலஜி வளர்ச்சியால் எத்தனையோ விதமாய் போட்டோக்கள் எடுக்க முடியும். அதனால் ஆல்பம், பத்திரிகை வச்சு மட்டும் நம்ப முடியாது.''

''இங்க பாருங்க! நான் எம்.எல்.ஏ. கோர்ட் மாதிரி நீங்க கேட்கிறதுக்கு நான் பதில் சொல்ல முடியாது. இந்தப் பெண்ணை இப்ப எங்கக் கூட அனுப்புங்க. இல்லாவிட்டால் விளைவுகள் கடுமையாய் இருக்கும்.''

''இவங்களை அரெஸ்ட் பண்ணுங்க சார்.''

எல்லாரும் ஏக காலத்தில் திரும்பினர். கார்த்திக் நின்று கொண்டிருந்தான். 'இவன் எங்கே இங்கே?' என ராஜேஷ் பார்க்க,

''சார்! இது என்னுடைய I.D கார்டு. நான் சென்னை காவல் துறையிலிருந்து வருகிறேன். இவர்கள் ரெண்டு பேரும் கொலைகாரர்கள்! இந்தப் பெண் ணின் பெற்றோரை கொலை செய்து இருக்கிறார்கள். ஹார்ட் அட்டாக் வந்தது போல் இறக்க, காபியில் மாத்திரை கலந்து கொடுத்து இருக்கிறார்கள். அம் மாவை விபத்து என்ற பெயரில் சாகடித்து இருக் கிறார்கள்.

''ஷட், ஜஉட்! போல் தா ஹை!'' அவன் அலற

''பொய்யில்லை; உண்மை! அவனே அவனுடைய செல்லில் எல்லாவற்றையும் படம் பிடித்திருக் கிறான்.''

''இல்லையில்லை; என் செல்லில் எதுவுமில்லை.''

''நீ ஒருமுறை பார்த்துவிட்டு அழித்துவிட்டாய். பின் எப்படி கண்டுபிடித்தேன் என்று பார்க்கிறாயா? உன் ஏமாற்று வேலைக்கு உதவிய டெக்னாலஜி தான் இதற்கும் உதவியது. டேட்டா ரெக்கவரி சாஃப்ட் வேர் உதவியோடு வீடியோக்களை எடுக்கலாம்.''

''ப்ரியல்லியண்ட் கார்த்திக்! டேட்டா டாக்டர், இமேஜ் ரீகால், டிஸ்க் டாக்டர் என ஆயிரக்கணக்கான சாஃப்ட்வேர்கள் இதற்கென உள்ளன.''



''எல்லா படங்களையும் எடுத்து முக்கியமான இடங்களுக்கு அனுப்பியாகிவிட்டது. நீ போனை சர்வீஸிற்கு கொடுத்த பொழுதே எல்லாவற்றையும் சேகரித்து விட்டேன் பிரஸ், போலீஸ் கமிஷனர், ஸி.எம். ஆபீஸ் என எல்லாவற்றிற்கும் உன் வண்ட வாளம் தெரிந்துவிட்டது.''

''ஆ! இவன்...... டிடெக்டிவ் ஏஜென்ஸிகாரன் போல் என்னை ஏமாற்றிவிட்டான். யார் இவன்?''

''சென்னை போலீஸ்!''

''தமிழன் புத்திசாலின்னு காட்டிட்டான்.''

''கார்த்திக்'' என கைகளை நன்றியுடன் பற்றிக் கொண்டாள் சுமனா!

''என் அண்ணிக்காக நான் இதைக்கூட செய்யா விட்டால் எப்படி?'' என அர்விந்தைப் பார்த்து கண் சிமிட்டினான்.

புன்சிரிப்புடன் அவன் முதுகைத் தட்டிக் கொடுத் தான் அண்ணன்.

சுமனாவின் வக்கீல் திருமணம் நடந்தாக சொல் லப்பட்ட அன்று சுமனா தன் பெற்றோரின் ஈமச் சடங்கை செய்ததை அந்த இடத்தில் பெற்ற ரசீது, அவளை அங்கு பார்த்த சாட்சிகள் என எல்லாச் சான்றுகளையும் சமர்ப்பித்து நிரூபிக்க....

இனி ஜென்மத்திற்கும் அவர்கள் சுமனா பக்கம் திரும்ப மாட்டார்கள். கண்ணீருடன் வந்த அத் தையை மன்னிக்கவும் முடிந்தது அவளால்.

''எனக்கு எல்லாரும் எவ்வளவு கெடுதல் பண்ணி யிருந்தாலும் மன்னிக்கலாம்; ஏன் தெரியுமா? நீங்க எனக்கு கிடைச்சுருக்கீங்களே!'' என்றாள் சமாதான மாய்.

அன்று அர்விந்தும், சுமாவும் சென்னை ஏர்போர்ட் டில் ஜப்பான் செல்வதற்காக நின்று கொண்டிருந் தனர்.

''ஹாய் அர்விந்த்! எப்படிடா இருக்கே?'' முதுகில் பலமாய் தட்டியவனை திரும்பிப் பார்த்தான் அர்விந்த்.

அவன் நண்பன் குரு.

''ரிஷ்யசிருங்கா! யாரு இவங்க?''

பக்கத்தில் நின்ற சுமனாவை அருகே இழுத்து,

''இவள் தான் என் மனைவி'' என்றான் அர்விந்த், சிரிக்கும் தன் மனைவியை ரசித்தவாறே.